வெளியீடு 22-9-1999 Issued 22-9-1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 18, 1999 - தொகுதி 63- எண் 1**

**Thursday 18th February, 1999—Volume 63 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

V2ii, 31'N99
N99.63.1
220160

[Price Rs. 3.00

18–2–1999

# உள்ளடக்கம்

**பக்கங்கள்**


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **இரங்கற் குறிப்புகள்--** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1-3 |
| *2.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 3-47 |
| *3.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| கர்நாடக மாநிலம். கணக்காயர் அலுவலகத்தில் பணியாற்ற பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 19 தமிழர்களின் நியமன உத்தரவு இரத்து | 48-75 |
| *திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 48-51 |
| திரு. ப. ரங்கநாதன் | 52-54 |
| *திரு. கே. சுப்பராயன் | 54-56 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 56-62 |
| திரு. ஆர். சொக்கர் | 58-59 |
| திரு. ஐ. கணேசன் | 63 |
| *திரு. லா. சந்தானம் | 64-66 |
| *திரு. டி. மணி | 66-67 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 67-68 |
| திரு. சி. வேலாயுதன் | 69-70 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 57,61,70-75 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | அறிவிப்பு-- | |
| | மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 75 |
| 5. | ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்-- | 75-125 |
| | *திருமதி சுப்புலட்சுமி செகதீசன் | 75-87 |
| | திரு. ச. அழகிரி | 87-103 |
| | மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 93 |
| | மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் | 94-95 |
| | மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 96-99 |
| | திரு. கே. சுப்பராயன் | 99 |
| | மாண்புமிகு திரு. துரைமுருகன் | 101-103 |
| | திரு. குழந்தை தமிழரசன் | 104-109 |
| | திரு. ஜி. பழனிசாமி | 110-121 |
| | *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 112,119,120 |
| | மாண்புமிகு திரு. கா.நா. நேரு | 115,116,117,118 |
| | திரு. ஆர். சொக்கர் | 117 |
| | திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 121-125 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 126-133 |


22160



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை. முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம். திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம். எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன். இரவலர் காப்பு இல்லம். அனாதை இல்லங்கள். குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன். மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம். பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public. General Administration. Indian Administrative Service. District Revenue Officers. Home. Finance. Planning. Industries. Prohibition and Excise. Minorities Welfare. Passports and Commercial Taxes.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education. Legislature. Elections. Electronics. Science and Technology. Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health. Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue. District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration. Community Development. Panchayats. Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*
மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*
மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*
திரு. சி.டி. தண்டபாணி
டாக்டர் காஞ்சனா கமலநாதன்
திரு. பெ. ஆசையன்
டாக்டர் ஆ. ஞானசேகரன்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*
திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன். பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன். பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன். டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன். எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன். பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா. பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா. பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன். பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன். பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன். எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள். எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. செளரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன். பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன். பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய். பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 31. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல் | .. | சார்புச் செயலாளர் |
| 36. திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 37. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| 38. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல்., | .. | தலைமை நிருபர் |
| 39. திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. ஆருன் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. ஆல்பன், டாக்டர் வே. | .. | திருவட்டாறு |
| 22. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 23. ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 25. ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 26. இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 28. இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 29. இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 31. இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 32. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 35. இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 36. இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 39. இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 40. இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 41. இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 42. இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 43. ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 44. உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 46. கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 47. கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 48. கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 49. கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 51. கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 54. காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 58. குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 60. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 61. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 62. குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 63. கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 64. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 65. கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 66. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 67. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 68. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 69. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 70. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 71. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 72. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 73. | சந்தானம், திரு. லா. | .. சோழவந்தான் |
| 74. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 75. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 76. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 77. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 78. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 79. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 80. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 81. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 82. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 83. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 84. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 85. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 86. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 87. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 88. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |



| | | |
|---|---|---|
| 89. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 90. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 91. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 92. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 93. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 94. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 95. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 96. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 97. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 98. | சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 99. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 100. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 101. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 102. | சுரேஷ் ராசன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 103. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 104. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 105. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 106. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 107. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 108. | செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 109. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 110. | சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |

111. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
118. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
122. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
123. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
124. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
125. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
126. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
127. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
128. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
129. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
130. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
132. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
133. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
134. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்



135. துரைமுருகன், திரு. .. காட்பாடி
136. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
137. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
138. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
139. நடராஜன், திரு. த. .. செஞ்சி
140. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
141. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
142. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
143. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
144. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
145. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
146. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
147. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

161 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

171. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

173. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி

174. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

175. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்

177. மணி, திரு. டி. .. விளவங்கோடு

178. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்

179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



180. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்

181. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு

182. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

183. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

184. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

185. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

186. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

188. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி

189. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

190. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

191. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

192. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

193. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

194. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

195. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

196. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

197. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

198. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

199. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

200. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

201. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

| | | |
|---|---|---|
| 203. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 204. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 205. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 206. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 207. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 208. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 209. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 210. ராஜேந்திரன். திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 212. லட்சுமணன். திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 213. வல்லரசு. திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 214. வாசுகி முருகேசன். திருமதி | .. | கரூர் |
| 215. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 216. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 217. வீரபாண்டி எஸ். ஆறுமுகம். திரு. | .. | வீரபாண்டி |
| 218. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 219. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 220. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 221. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 222. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 223. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 224. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |



| | | |
|---|---|---|
| 225. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன். திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன். திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின். திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி. திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 6, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030,**
**1999 பிப்ரவரி 18, வியாழக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்து(இ)வ் வுலகு."*

*இந்த உலகமானது, நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்துவிட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.*

## 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் க. ரெங்கசாமி அவர்கள் 21-4-1997 அன்றும், ஒய்.வி. கிருஷ்ணாராவ் அவர்கள் 22-4-1998 அன்றும், க. இரா. சின்னராசு அவர்கள் 20-6-1998 அன்றும், கே.என்.கே. இராமசாமி அவர்கள் 26-9-1998 அன்றும், கி. இராமன் அவர்கள் 30-11-1998 அன்றும், மு. முத்தையா அவர்கள் 1-12-1998 அன்றும், ஜி. இராஜாராம் அவர்கள் 5-1-1999 அன்றும், ஆர். மாணிக்கவாசகம் அவர்கள் 4-2-1999 அன்றும், ப. கலியபெருமாள் அவர்கள் 13-2-1999 அன்றும், த.சி. சுவாமிநாத உடையார் அவர்கள் 15-2-1999 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. க. ரெங்கசாமி அவர்கள் உளுந்தூர்பேட்டை (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை செம்மையாகப் பணியாற்றியுள்ளார்கள்.*

திரு. ஒய்.வி. கிருஷ்ணாராவ் அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் பத்ராச்சலம் பொதுத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 ஆம் ஆண்டு முதல் புதிய ஆந்திர மாநிலம் அமையப் பெறும் வரை அதாவது 30-9-1953 வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. க. இரா. சின்னராசு அவர்கள் கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கே.என்.கே. இராமசாமி அவர்கள் கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை சிறப்புற பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கி. இராமன் அவர்கள் இராஜபாளையம் (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. மு. முத்தையா அவர்கள் ஒட்டப்பிடாரம் (செ.வ.) தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை, 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஜி. இராஜாராம் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை செஞ்சி தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை திண்டிவனம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஆர். மாணிக்கவாசகம் அவர்கள் தொண்டாமுத்தூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.



திரு. ப. கலியபெருமாள் அவர்கள் திருவையாறு சட்டமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. த.சி. சுவாமிநாத உடையார் அவர்கள் மன்னார்குடி தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முறையே 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை, 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை மற்றும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இந்த முன்னாள் உறுப்பினர்களின் மறைவினால் அவர்களை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைவுற்ற இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்)*

*முற்பகல் 9-35*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. சி. கோபு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**1—**

### கல்குவாரியில் கல்லுடைக்க அனுமதி

***3352—திரு. சி. கோபு:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, அப்புக்கல் கிராமக் கல்குவாரியில் கல்லுடைப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மாவட்டம் அப்புக்கல் கிராமம் புல எண். 158/1ஏ-ல் (பகுதி.1) 2.00 ஏக்கர் பரப்பில் 1-11-1994 முதல் 31-3-1999 வரையான காலத்திற்குக் கல்குவாரி செய்வதற்கு சின்ன அணைக்கட்டு கிராமத்தைச் சார்ந்த திரு. எம். மணிவண்ணன் என்பவருக்குக் குத்தகை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1998 ஜனவரி மாதத்தில் நடந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் இதே பகுதியில் மேலும் 2 கல்குவாரிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் வருமானத்தைப் பெருக்கவும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும் மதுரை மாவட்டத்திலே உள்ள பல கல்குவாரிகளைக் குத்தகைக்கு விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்களைத் தந்து, தனி வினா எழுப்பினால் பதில் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திற்குப் புறம்பாக கனிமங்களைக் கொண்டுவருபவர்களை வருவாய்த் துறையினர் மடக்கி, அபராதம் விதிக்கிறார்கள். அந்த இலட்சக்கணக்கான ரூபாய்களை அந்த மாவட்டத்திற்கே பயன்படுத்திக்கொள்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு கல் உடைப்போர் சங்கங்களுக்கு நேரடியாக வழங்கப்பட்ட உரிமங்கள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிகிறேன். கிணத்துக்கடவு தொகுதியில் இருக்கிற சங்கங்கள் மற்றும் அவற்றில் இருக்கிற தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் நேரடியாக அந்த உரிமம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது வேலூர் மாவட்டம் அப்புக்கல் கிராமத்தைப் பொறுத்த கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தொகுதியிலே உள்ள அந்தப் பகுதிகளைப் பற்றித் தனி வினா எழுப்புவாரேயானால் விடை அளிப்பது இலகுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் அணைக்கட்டு தொகுதியிலே அப்புக்கல் என்கிற கிராமத்தில் புல எண் 158/1ஏ-ல் 2.00 ஏக்கர் பரப்பளவிற்கு கல்குவாரி விடப்பட்டதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால் வேலூர் மாவட்டத்தில் பல இடங்களில்— குறிப்பாக ஒரு புல எண்ணிலே அவர்கள் கல்குவாரி எடுக்கிறார்கள். ஆனால் அதையும் மிஞ்சி பல இடங்களிலே அவர்கள் முறைகேடாக கல்குவாரி எடுக்கின்ற காரணத்தினாலே இன்று மலைகள் எல்லாம் பாழாகிக்கொண்டிருக்கின்றன, சுற்றுப்புறச் சூழல் எல்லாம் கெட்டுக்கொண்டு இருக்கிறது. அதேபோல கல்குவாரி, மணல் குவாரி போன்றவற்றில் இப்பொழுது எல்லா மாவட்டங்களிலும்-வேலூர் மாவட்டத்தில் மட்டும் அல்ல, எல்லா மாவட்டங்களிலும்- ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு என்று விடப்பட்டால் அந்த எல்லையைத் தாண்டி அவர்கள் பல இடங்களில் போய் எடுத்துக்கொண்டிருக்கிற காரணத்தினாலே இன்று மணல் திருடர்களும், கல் திருடர்களும் அதிகமாகி, அரசியல் சாயம் பூசிக்கொண்டவர்கள் இதிலே பெரிய அளவிலே ஈடுபட்டு, இன்று அதிகாரிகள்கூட அவர்களிடத்தில்

நெருங்க முடியாத அளவுக்குச் செயல்பாடுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறையைச் சார்ந்த அத்தனை அதிகாரிகளையும் கொஞ்சம் முடுக்கிவிட்டு எந்தப் புல எண்ணிலே அவர்கள் குத்தகை எடுத்திருக்கிறார்களோ அதிலே மட்டும் விதிமுறைப்படி எடுக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக ஒரு குழுவை நியமிக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேட்க வேண்டும். இது என்ன உரையா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல் திருடர்கள், மணல் திருடர்களைக் கண்டுபிடிக்க குழு நியமிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அந்தக் குழுவும் கல் குழுவாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, மணல் குழுவாக ஆகிவிடக் கூடாது என்பது என்னுடைய கருத்து. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் அடிப்படையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். விதி 8 என்று, முன்பு இருந்த கழக ஆட்சியில் ஒன்று வகுக்கப்பட்டு, அதன்படி கல்குவாரி, கிரானைட் இவற்றை எல்லாம் ஏலம் விடுகின்ற முறை அல்லது டெண்டர் விடுகின்ற முறை இருந்தது. அதற்குப் பிறகு வந்த ஆட்சியில் 39 என்கின்ற விதி ஒன்று இணைக்கப்பட்டு Nomination முறைப்படி இவை எல்லாம் தரப்பட்டன. இங்கே சொல்லப்பட்ட இந்தக் கல்குவாரியைப் பொறுத்தவரையில் இதன் மூலமாகக் கிடைத்த வருமானம் 5 ஆண்டுகளில்—அதாவது 1994-ஆம் ஆண்டிலே ஏலம் விடப்பட்டது. இந்தக் கல்குவாரி மூலம் கிடைத்த வருமானம்—1500 ரூபாய் முதல் ஆண்டு. இரண்டாம் ஆண்டு 1800 ரூபாய், மூன்றாம் ஆண்டு 2160 ரூபாய், நான்காம் ஆண்டு 2592 ரூபாய், ஐந்தாம் ஆண்டு 3111 ரூபாய் என்ற அளவிலேதான் கிடைத்தது. ஆனால் இப்போது இவையெல்லாம் டெண்டர் அல்லது ஏல முறையிலே விடப்பட்ட காரணத்தினால் 41,000 ரூபாய் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் கல் திருடர்களும் மணல் திருடர்களும் யார் என்கின்ற அடையாளம் மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகின்றேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.





**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குவாரிகளில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் அனுமதியை மீறி அதிக அளவிலே பாறையை உடைத்து கல்லை வெளியிலே எடுக்கிறார்கள். அதுமட்டும் அல்ல, அனுமதி பெறாமலும் சில இடங்களில் திருட்டுத்தனமாக வெட்டியெடுத்துச் செல்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படி எத்தனை பேர்கள்மேல் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, யார் யார் அந்தத் தவறைச் செய்தார்கள் என்ற புள்ளிவிவரப் பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிறாரா என்ற என்னுடைய ஐயப்பாட்டிற்குப் பதில் கிடைத்தால் அவருடைய கேள்விக்குப் பதில் சொல்ல இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்குவாரி குத்தகை ஏலம் விடப்படுகின்ற முறையிலே, ஏற்கெனவே கல்குவாரி எடுத்தவர்கள் புதிதாக அந்த ஏலத்திலே கலந்துகொண்டு ஏலம் எடுக்க முடியாத ஒரு நிலைமை பல இடங்களிலே உள்ளது. அவர்கள் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக்கூட ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே கல்குவாரி எடுத்தவர்கள் அடுத்த முறை அவர்கள் உரிமத்தைப் புதுப்பித்துக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, அதாவது 5 சதவீதம் உயர்வாகக் கூட அந்தக் குத்தகை இலக்கை நிர்ணயித்து அதன்படி ஏற்கெனவே கல்குவாரி எடுத்தவர்கள் அதனைப் புதுப்பித்துக்கொள்ள அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இந்தக் கட்டுமானத் தொழிலிலே 30 இலட்சம் தொழிலாளர்களுக்கு மேலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு பரிவோடு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதற்கு, ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் வைத்து, அவர்களே தொடர்ந்து அந்தத் தொழிலை நடத்தலாம் என்று ஒரு விதிமுறை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்த கருத்துக்களையும் அரசு ஆராய்ந்து ஏற்ற முடிவு எடுக்கும்.

[1999 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இப்படிப்பட்ட கல்குவாரிகளை ஏலம் விடுவதனால் அரசாங்கத்திற்கு வருவாய் வருகின்றது. ஆனால் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளால் மற்றும் பல்வேறு இன்னல்களால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால், தற்சமயம் அப்படி வருகின்ற வருவாயில் ஊராட்சிக்கு ஏதாவது நிதியுதவி செய்யப்படுகிறதா? இல்லையெனில் எதிர்காலத்திலே அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கல்குவாரி ஊராட்சி மன்றத்தினுடைய பொறுப்பிலேதான் இருக்கிறது. இருக்க வேண்டும் என்பதுதான் நம் குறிக்கோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்குவாரிக்கு, 2, 3 மாவட்டங்களைச் சேர்த்து உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக காலதாமதம் ஆகிறது. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு என்று உள்ள உயர் அதிகாரிகளை நாங்கள் பார்க்க வேண்டுமென்றால் அவர்கள் திருச்சியிலே இருக்கிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்கு அந்தந்த மாவட்டத்திற்கென்று தனியாக உயர் அதிகாரிகளை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கல் குவாரிகள் எல்லா மாவட்டங்களிலும் இருப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது. அவற்றையெல்லாம் உத்தேசித்துத்தான் அதிலே மண்டல வாரியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கக்கூடும். மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்து பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வெ. கிருஷ்ணன்.

**திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் குடகனாற்றிலே மணல் எடுப்பதற்கு ஏலம் விடப்பட்டதனால் அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். அந்த ஆற்றின் அருகிலே இருக்கும் 4 குடிதண்ணீர்க் கிணறுகளும்



1999 பிப்ரவரி 18]

பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு அங்கே மணல் எடுப்பதைத் தடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதைப்பற்றித் தனியாக விவரம் தந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 2, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2—

**தமிழ்நாட்டில் தீயணைப்பு நிலையங்கள்**

***19690—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டு புதிதாகத் தீயணைப்புத் துறைக்கு எத்தனைப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1997-98 ஆம் ஆண்டில் 26 தீயணைப்பு நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் தீயணைப்புத் துறைக்கு பணியாளர்கள் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98ஆம் ஆண்டிலே 26 தீயணைப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த 26 தீயணைப்பு நிலையங்களில் அரசு கட்டடத்தில் இயங்குவது எத்தனை? இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் எடப்பாடிக்குத் தீயணைப்பு

[1999 பிப்ரவரி 18

நிலையம் வழங்கப்பட்டது. அதற்கு அரசுக் கட்டடம் இல்லையென்பது நமது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுவாக மொத்தத்திலே சொல்லவேண்டுமேயானால் 277 தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே காலங்காலமாக மொத்தத் தீயணைப்பு நிலையங்கள் 230 தான் இருந்தன. இந்த ஆட்சி வந்த இந்த இரண்டு ஆண்டுகளில் 47 தீயணைப்பு நிலையங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த 277-ல் நிரந்தரக் கட்டடங்களிலே இருக்கின்ற தீயணைப்பு நிலையங்கள் 90; வாடகைக் கட்டடங்களிலே இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்கள் 148; Semi-permanent—அரை நிரந்தரக் கட்டடங்களிலே இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்கள் 26; ஓலைக் கொட்டகைகளிலே இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்கள் 13.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் நீண்ட நாட்களாக லாரி நிலையத்திலே இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டு 5,6 ஆண்டுகள் ஆகின்றன. அதற்காக நிரந்தரக் கட்டடம் கட்டப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையிலே தெரிவிக்கின்றார்கள். ஏற்கெனவே இதை அரசுக்குத் தெரிவித்திருந்தால் உரிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலே அதிக அளவில் இயங்கி வருவதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறினார்கள். நடப்பு நிதியாண்டில் நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அரசு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யுமா? அதுமட்டுமல்லாமல், சட்டசபையில் சென்ற முறை நான் பேசும்போது, தொகுதி மேம்பாட்டின்கீழ் என்னென்ன திட்டங்கள் வேண்டி இருக்கின்றனவோ அவற்றைச் சொல்லுங்கள் என்று



1999 பிப்ரவரி 18]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் சொன்னார்கள். அதன்படியே நான் எழுதிக் கொடுத்தேன். பகுதி-2 திட்டத்திலே நிரந்தரக் கட்டடம் ஸ்ரீவில்லிபுத்தூர் நகருக்கு வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருந்தேன். அப்படி எழுதிக் கொடுத்தால் தித்திக்கும் செய்தியாக நான் சொல்வேன் என்று சட்டசபையிலே அறிவித்தீர்கள். இப்போது ஏதாவது அறிவிப்பீர்களா ? பகுதி-2 திட்டத்திலே அறிவிப்பீர்களா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பட்ஜெட் இரகசியங்களை முன்கூட்டி வெளியிடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கு 25 கிலோமீட்டர் இடைவெளி வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், இப்போது போக்குவரத்து நெரிசல்கள் எல்லாம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் 25 கிலோமீட்டர் தாண்டி தீ விபத்து நடந்த இடத்திற்கு வந்து தீயணைப்பது என்பது சிரமமாக உள்ளது. எங்களுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே அலங்காநல்லூரிலே சர்க்கரை ஆலை இருக்கிறது. தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று சென்றமுறை நான் கேட்டபோது, மதுரையிலே இருக்கிறது என்று பதில் சொன்னார்கள். ஆனால், மதுரையிலேயிருந்து போக்குவரத்து நெரிசல்களையெல்லாம் கடந்து வந்து சேர்வதற்குள்ளாக, தீ பிடித்த இடம் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த இடைவெளியைச் சற்றுக் குறைத்து 20 கிலோமீட்டர், 15 கிலோமீட்டருக்குள்ளாக தீயணைப்பு நிலையங்களை அமைக்கலாம் என்ற நிலையை அரசு எடுக்குமா என்பதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தீப் பிடிப்பதையும் கணக்கில் கொண்டு, நிதி இருப்பதையும் கணக்கில் கொண்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியிலே பேருந்து நிலையத்தையொட்டி உள்ள ஒரு தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக நீண்டநெடுங்காலமாக மக்கள் போராடிக் கொண்டே

இருக்கிறார்கள். நகராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள்கூட ஒருமுறை உண்ணாவிரத நோன்பு எல்லாம் இருந்தார்கள். ஆக, அந்தப் பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற அந்தத் தீயணைப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது கவனத்தில் கொள்ளப்பட்டு, அதுபற்றி விசாரித்து அறியப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கிவருகிற புதிய தீயணைப்பு நிலையங்களுக்கு சில இடங்களிலே இடம் கையகப்படுத்தப்படுவதிலே சிரமம் இருக்கிறது. ஆனால் உடனடியாகக் கையகப்படுத்தத் தயாராக இருக்கிற குத்தாலம் போன்ற இடங்களில் உடனடியாகக் கட்டடம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அந்தக் குறிப்பை என்னிடத்திலே தந்தால் அதுபற்றி விசாரித்து ஏற்ற முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப்.

*முற்பகல் 9-50*

**திரு. ம. அப்துல் லத்திப்:** தலைவரவர்களே, வாணியம்பாடியில் ஒரு தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அது வாரச் சந்தை மைதானத்தில் நெருக்கடியான இடத்தில் அமைந்திருக்கிறது. அதற்கு மாற்று இடமாக நெடுஞ்சாலைப் பக்கமே தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு இடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பல்லாண்டுகளாக அந்த இடத்திற்கு மாறிப் போகாமல் அதே இடத்திலே இருக்கிறார்கள். இதனால் நகராட்சி மன்றத்திற்கு வருகின்ற வருமானமும் குறைகிறது; நெருக்கடியான இடத்தில் இருக்கின்ற காரணத்தினால் பல சிக்கல்களும் ஏற்படுகின்றன. இதுபற்றி பல கோரிக்கைகளை நான் வைத்திருக்கிறேன். உடனடியாக இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கை எடுத்து, புதிய கட்டடத்திற்கு அந்தத் தீயணைப்பு நிலையத்தை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தத் தீயணைப்பு நிலையம் பற்றிய சூழ்நிலைகளையெல்லாம் ஆராய்ந்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதி முழுவதும் கிராமங்கள் நிறைந்த பகுதி. அங்கு ஒரு தீயணைப்பு நிலையம் அவசியம் தேவையாக இருக்கிறது. காரணம், தீப்பற்றி விட்டால் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர், 25 கிலோமீட்டர் தூரம் போய் அதைச் சொல்லி அவர்கள் வந்து அணைப்பதற்குள்ளாக குடிசைகள் எரிந்துவிடுகின்றன. கடந்த வாரம்கூட அதுபோல குடிசைகள் எரிந்துவிட்டன. எனவே, என்னுடைய தொகுதியில் அவசியம் ஒரு தீயணைப்பு நிலையம் உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவசியம் செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் விண்ணப்பங்களை வினாக்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாத்திரம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியிலே தீயணைப்பு நிலையம் வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் போய் எந்த இடம் என்று தேடிப் பார்ப்பாரா? (சிரிப்பு) திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீயணைப்பு நிலையத்திற்குக் குறைந்தபட்சம் 15 பேராவது வேண்டுமென்ற நிலையிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், பல தீயணைப்பு நிலையங்களில் அந்த அளவுக்கு இல்லை. என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியைப் பொறுத்தமட்டில், தக்கலையில் 7 பேர்தான் இருக்கிறார்கள். அதை மேம்படுத்தி, 15 ஆக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு ஊர்தி கொண்ட தீயணைப்பு நிலையமாக இருந்தால்கூட அங்கே தீயணைப்பு அலுவலர் ஒருவர், முன்னணி தீயணைப்போர் இரண்டு பேர், எந்திரக் கம்மியர் ஓட்டி ஒருவர், தீயணைப்போர் ஓட்டி மூன்று பேர் தீயணைப்போர் 11 பேர் என்று இருக்க வேண்டும். மாண்புமிகு

உறுப்பினர் கூறியவாறு அங்கே இந்த எண்ணிக்கை குறைவாக இருக்குமேயானால் அதைப்பற்றி உடனடியாக அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, தீயணைக்கும் முறையில் உலகளாவிய புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, தமிழ்நாட்டின் தீயணைப்பு நிலையங்களின் தீயணைப்பு ஆற்றலைக் கூட்டுவதற்கும், உலகத் தரத்திற்கு அதை உயர்த்துவதற்கும் உரிய நடவடிக்கையெடுக்க ஏதாவது செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பொதுவாகவே தீயணைப்பு, காவல் துறை இவற்றையெல்லாம் நவீனப்படுத்த வேண்டும் என்கின்ற ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. அதற்கான முயற்சிகளும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலம் ஆரம்பித்து விட்டது. சென்னையிலே உள்ள குடிசைப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிற காரணத்தால்—நம்முடைய கடந்த ஆட்சிக் காலத்தில் அந்தக் குடிசைப் பகுதிகளிலே தற்காலிகமாகத் தீயணைப்பு வாகனங்களை நிறுத்தி அந்தத் தீயைத் தடுத்தார்கள். அவ்வாறு செய்வதோடு மட்டுமல்லாமல்—இங்கே சில இடங்களில் சமூக விரோதிகள் இந்தத் தீ பிடிப்பதற்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதால் அவர்களைக் கடுமையான குண்டர் சட்டத்திலே கைது செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, சென்னை மாநகரத்திலே அடிக்கடி குடிசைப் பகுதிகளிலே தீ விபத்து ஏற்படுகிறது என்பதைக் கருத்திற்கொண்டுதான், எரியாத வீடுகள் கட்டுகின்ற முயற்சியும், தொடர்ந்து குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு உருவாக்குகின்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியேறுகின்ற அந்தப் பகுதி மக்கள் நாம் சொன்னவுடன் குடிசைகளிலேயிருந்து வெளியேறி, குடிசை மாற்று வாரிய வீடுகளிலே குடியேறுகிறார்கள். பிறகு சில நாட்களில் அந்தக் குடிசை மாற்று வாரிய வீட்டிற்குப் பக்கத்திலேயே குடிசைகள் போட



ஆரம்பித்துவிடுகிறார்கள். தாங்கள் குடியேறிய அந்த இடத்தை வாடகைக்கு விட்டுவிட்டு குடிசைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, என்னதான் முயற்சியெடுத்தாலும், இந்தக் குடிசைகளிலே தீ விபத்து ஏற்படுவதை அறவே தடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. அதனால்தான் இனிமேல் புதிதாகக் குடிசைகள் போடுபவரைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசு சட்ட ரீதியாகவோ அல்லது காவல் துறையின் துணை கொண்டோ அல்லது அதற்கென்று தனி பறக்கும் படை ஒன்றை நியமித்தோ மேற்கொள்ளலாம் என்கின்ற ஆழ்ந்த சிந்தனையிலே அரசு இன்றைக்கு இருக்கின்றது. எனவே, இத்தகைய தீ பரவுவதற்குக் காரணம், குடிசைவாசிகள் நம்மோடு, அரசோடு, ஒத்துழைக்காமல் இருப்பதுதான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டுமென்று நான் தெரிவித்து கொள்கின்றேன். சில சமூக விரோதிகளால், இந்தத் தீ பற்றுகின்ற காரியங்கள் நடைபெறுகின்றன, அவர்கள் அடக்கப்படுவார்களா என்று கேட்டார்கள். அதுவும், அந்த நடவடிக்கைகளும் உரிய முறையில் எடுக்கப்படும்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், புளியங்குடி நகராட்சியில் சுமார் 75,000 மக்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டு, கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்படவேண்டுமென்று தங்களுடைய துறைக்கு விண்ணப்பம் செய்திருந்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலாவது புளியங்குடி நகராட்சிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கும் எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினருடைய அந்த வேண்டுகோள் நினைவிலே வைத்துக்கொள்ளப்படும். முடிந்தால் நிதிநிலை அறிக்கையிலே இணைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகரிலே உள்ள தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. இந்த நிதியாண்டில் அதற்கு அரசுக் கட்டடம் கட்டிக்கொடுக்க நமது முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தொடக்கத்திலேயே, அவருடைய முதல் கேள்வியிலேயே இதைக் கேட்டிருக்கிறார். அதற்குப் பதிலும் சொல்லியிருக்கின்றேன். இவைப்பற்றியெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில், நிலக்கோட்டைக்கு ஒரு தீயணைப்பு நிலையம், வத்தலகுண்டில் ஒரு தீயணைப்பு நிலையம் என்று ஏற்கெனவே அரசிடம் கேட்டு வாங்கிவிட்டேன். ஆனால், அங்கே இருக்கின்ற அந்த வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. ஆகையினாலே, எங்கேயாவது தீ விபத்து ஏற்பட்டால், அந்த வாகனங்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டு போகின்றபோது, வழியிலேயே அந்தத் தண்ணீரெல்லாம் ஒழுகிவிடுவதாக நான் அறிகிறேன். எனவே, இந்த மாதிரி எங்கெங்கெல்லாம் தீயணைப்பு வாகனங்கள் பழுதடைந்து இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் புதுப்பித்து, புதியதாக வாகனங்கள் வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பழுதடைந்தவற்றைப் புதுப்பிப்பதுதான் இந்த அரசினுடைய முக்கிய குறிக்கோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3., திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**3—**

### அனுமதி பெறாத மழலையர் பள்ளிகள்

***6713—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



அரசின் அனுமதி பெறாத மழலையர் பள்ளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் அரசு அங்கீகாரம் இன்றி செயல்பட்டுவந்த Nursery மற்றும் தொடக்கப் பள்ளிகள் அனைத்தும், தொடக்கக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுவதற்காக அரசாணைகள் வெளியிடப்பட்டு விதிமுறைகள் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டன. இவ்விதிமுறைகளுக்கேற்ப அப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், அங்கீகாரம் என்பது, நிதியுதவியுடன் மற்றும் அரசு ஆணைகளின்படி நிதியுதவி இல்லாமல், தனியார் பள்ளிகட்குத் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 மற்றும் 1974 ஆகியவற்றின்படி அளிக்கப்பட்டு வருகிறது. ஒப்புதல் என்பது, பள்ளி நடத்துவதற்கு அனுமதி மட்டுமே என்ற அளவில் அளிக்கப்பட்டு வருகிறது. அங்கீகாரம் அல்ல.

குறிப்பிட்ட படிவத்தில் ஒப்புதல் வேண்டி அனுப்பப்படும் Nursery பள்ளிகளை, உதவிக் கல்வி அலுவலர்/மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பார்வையிட்டு பரிந்துரை செய்து, அதன் பின்னர் மேற்படி நிபந்தனைகளின்படி பரிசீலித்து கட்டட உரிமச் சான்றின் காலம் முடிய Nursery பள்ளிகட்கு ஒப்புதல்/புதுப்பித்தல் ஆணைகள் வழங்கப்படுகின்றன. இவை அனைத்தும் தனியார் மேலாண்மைப் பள்ளிகளாகும். இந்தப் பள்ளிகள் அரசு மானியமின்றி சுயநிதிப் பள்ளிகளாக நடைபெற்று வருகின்றன. அனைத்து Nursery பள்ளிகட்கும் ஒப்புதல் ஆணைகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. Nursery பள்ளிகட்கு அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. ச.க. வெங்கடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**4—**

### மாணவர்களுக்கு தீ விபத்து பாதுகாப்புப் பயிற்சி

***14678—திரு. ச.க. வெங்கடேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயணைப்பு பற்றியும், தீ விபத்து நிகழாமல் இருக்க என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்காக எனக்கு அளிக்கப்பட்ட விடையை ஒரு திருத்தத்தோடு குறிப்பிட அனுமதி வேண்டுகிறேன். இதுகுறித்த பாட போதனைகள் 4 ஆம் வகுப்பு 'சூழ்நிலை சமூகவியல்' பாடத்தில் இடம் பெற்றுள்ளது என்று விடை தரப்பட்டிருக்கின்றது. அந்த விடையிலே சொல்லப்பட்ட செய்தி, தீயணைப்பு பற்றி முழுவதுமாக தனி விளக்கமாக அமைந்த பாடம் அல்ல. முதலுதவி என்ற முறையில், என்னென்ன வகையில் விபத்துகள் அல்லது ஆபத்துகள் ஏற்படுகின்றனவோ அவற்றுக்கு எப்படி முதலுதவி செய்ய வேண்டுமென்று, 4-வது வகுப்புப் பிள்ளைகளுக்குத் தரப்பட்ட பாடம்தான் அதிலே இடம்பெற்று இருக்கிறது. அத்துடன் இப்படிப்பட்ட எந்தவொரு தனிப்பட்ட சமூகநலப் பணி அல்லது பாதுகாப்புப் பணியைப் பற்றியும் முழு விவரமாகப் பாடம் அமைப்பது என்பது இயலாத ஒரு காரியம். அது பயிற்சிகள் மூலமாகத்தான் வழங்கப்பட முடியும்.

முற்பகல் 10-00

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு N.C.C. பயிற்சி அளிப்பதுபோல, அவர்களுக்கு தீ விபத்துத் தடுப்புப் பயிற்சி அளிப்பதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தீ விபத்துத் தடுப்பு, தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு என்பதில், பாதுகாப்பு எப்படி வழங்கலாம் என்பதைப்பற்றி சாதாரணமாகப் பாடங்கள் நடத்த முடியும். தீயணைப்பு நடவடிக்கை பற்றி அதிகமாகப் பாடங்கள் நடத்த முடியாது. அது பயிற்சியினாலேதான் வரும். அதற்குரிய முழு வாய்ப்பு N.C.C. மாணவர்களுக்கேகூடக் கிடையாது. சாரணர் இயக்கத்திலேயும் அதுபற்றிய கருத்துகள் ஓரளவு





பயிற்றுவிக்கப்படுகின்றன. நீச்சல் குளத்தில் இறங்குபவர்கள்தான் நீச்சல் கற்றுக்கொள்ள முடியும். தீயணைப்பில் ஈடுபடுபவர்களுக்குத்தான் அந்தப் பயிற்சி வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு பற்றிய பயிற்சி அளிப்பதற்குக் கோரிக்கை வைக்கப்பட்டது. அதுபோல, சாலை விபத்துக்களைத் தடுக்கின்ற வகையிலே மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே, விழுப்புரம் கோட்டத்திலே, நாங்கள் சமீபத்திலே சென்று பார்வையிட்டபோது, விளக்கம் அளிப்பதற்கு என்று தனியாகவே பேருந்து அமைக்கப்பட்டு, அதன் மூலம் கிராமங்களுக்குச் சென்று பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆகவே, அந்த முறையைப் பள்ளிகளிலேயே நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, Road Safety என்ற முறையில், பாதையில் பயணம் செய்கிறபோது பாதுகாப்பாகப் பயணம் செய்வதுபற்றி, மாணவர்களுக்குப் பல வகுப்புகளில் பல்வேறு வகையாகத் தெளிவுபடுத்தப்படுகிறது. சில பள்ளிகளில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது. போக்குவரத்துத் துறை சார்பாகவும் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி சில இடங்களில் தரப்படுகிறது. எல்லோருக்கும், எல்லா இடங்களிலேயும், எல்லா வகையிலேயும் இந்தப் பயிற்சி வழங்குவது என்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்புப் பணிகள்பற்றிச் சொல்லிக் கொடுக்கின்ற இன்றைய காலத்தில், மாணவிகளுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கின்ற சுடிதாரை அரசுப் பள்ளிகளில் சீருடையாக அரசு அனுமதிக்குமா? அப்படி அனுமதித்தால் அரசின் மூலம் கொடுக்கப்படுகின்ற இலவசச் சீருடைகளை, சுடிதாராகத் தைத்துக் கொடுப்பதற்கு உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடிதார் அணிவதற்குத் தடையில்லை. ஆனால், அரசு அதை வழங்குவது என்பது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**5—**

### சித்த மருத்துவப் பிரிவு தொடங்குதல்

***15129—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், சித்த மருத்துவப் பிரிவு எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க, அரசாணை (நிலை) எண் 331, மக்கள் நல்வாழ்வு, நாள் 12-6-1998-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் ஒரு ஜமீன் நகரமாக இருந்தது. பின்னர் ஜமீன் எல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டன. அந்த நகரத்தில்தான் புரட்சிக் கவிஞன் பாரதி தோன்றினான். கவிஞர் உமறுப் புலவர் அங்கேதான் தோன்றினார். அந்த நகரத்தை நீண்ட நாட்களாக தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, இந்த அரசு அதை தனித் தாலுகாவாக ஆக்கிக் கொடுத்திருக்கிறது. அதற்கு, இந்த அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும்....



1999 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? நீங்கள் கேட்டதை அவர்தான் கொடுத்துவிட்டாரே?

முற்பகல் 10-05

**திரு. லி. அய்யலுசாமி:** அந்த மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலுள்ள அரசு இராஜாஜி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை செய்வதற்கான Cobalt Therapy கருவி மற்றும் பிற கருவிகள் எல்லாம் இல்லாமல் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட ஒரு வாரத்திற்கு முன்பாக, 'அது விரைவிலே அங்கே நிறுவப்படும்' என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த முக்கியக் கருவிகளை உடனடியாக அங்கே அமைத்துத்தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரைவிட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், எந்தப் பணியிலே கவனம் செலுத்துகிறாரோ, இல்லையோ இந்த மருத்துவத்துறையில், குறிப்பாக, மதுரை மருத்துவமனைக்கு என்னென்ன வேண்டுமென்று மாதத்திற்கு இரண்டு முறையாவது தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். அவர் கேட்பதையெல்லாம் இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. Cobalt Therapy கருவி கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. விரைவிலே Tamil Nadu Medical Services Corporation மூலமாக அது வாங்கப்பட்டு மதுரை மருத்துவமனைக்கு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை பெரியார் மருத்துவமனையிலே பல ஆண்டுகளாக எலும்பு முறிவு மருத்துவர் இல்லாமல் பொதுமக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகி வருகிறார்கள். வெளியிலே சென்று மருத்துவம் பார்க்க முடியாத நிலையிலே அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக எலும்பு

[1999 பிப்ரவரி 18

முறிவு மருத்துவரை நியமனம் செய்ய முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 500 மருத்துவர்களை புதிதாக நியமிக்க வேண்டியிருக்கிறது. அதற்காக தேர்வாணையத்திடம் அரசு முறையிட்டிருக்கிறது. தேர்வாணையமும் அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து தேர்வுகளை எல்லாம் வைத்து, இப்போது நேர்காணலுக்கான அழைப்பை விடுத்திருக்கிறது. விரைவிலே, தேர்வாணையம் மருத்துவர்களைத் தேர்வு செய்து, அரசுக்குப் பட்டியல் வழங்கும். மார்ச் மாதத்திற்குள் இப்படிப்பட்ட சிறப்புத் துறையிலே பணியாற்றக்கூடிய மருத்துவர்கள் அனைத்து மருத்துவமனைகளிலும் நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் இயங்கி வரும் சித்த மருத்துவப் பிரிவு ஒரு சிறிய இடத்தில் மருத்துவமனையின் ஒதுக்குப்புறமான ஓர் அறையில் இயங்கி வருகிறது. இதனை மாற்றி, அனைத்து மருத்துவமனைகளிலும் இதற்கென புதிதாகக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், அரசாங்கம் அனுமதி கொடுத்தவுடனே, இருக்கின்ற மருத்துவமனை வளாகத்திலேயே, இந்தப் பிரிவு தொடங்கப்படுகிறது. பிறகு, படிப்படியாக நிதிநிலையைக் கருத்திற்கொண்டு தனியாக மருத்துவமனைகள் கட்டித் தரப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 15 ஆம் தேதி, பள்ளப்பட்டி அரசு மருத்துவமனையிலே சித்த மருத்துவப் பகுதி தொடங்கப்பட்டு இருக்கிறது. அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவர் கரூரிலே இருந்து வருகை தந்திருக்கிறார். தயவுசெய்து அவர் அங்கே நிரந்தரமாகப் பணியாற்ற ஆவன செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1999 பிப்ரவரி 18]

அதைப்போல, மாண்புமிகு திருமதி வாசுகி முருகேசன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, அங்கே சித்த மருத்துவப் பகுதி தனியாக இயங்குவதற்கு கட்டட வசதி இல்லை. அங்கே கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற மாதம் கரூருக்கு வருகை தந்த நேரத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மானியக் கோரிக்கை இல்லை, உட்காருங்கள். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லியாகி விட்டது. எதற்கு அடுத்தவர்கள் பேசியதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** கோரிக்கை ஒன்று இருக்கிறது. அமைச்சரிடம் கொடுத்த மனு சம்பந்தமாகப் பேச வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதி மருத்துவமனையைப் பார்வையிட்டார்கள்; கட்டடமும், சுற்றுச் சுவரும் இல்லாமல் இருக்கின்றது. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவோடு, அரவக்குறிச்சி தொகுதி மக்கள் சார்பாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிதிநிலையில் சில மருத்துவமனைகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இல்லை. இதையெல்லாம் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த நிதியிலிருந்து சுற்றுச் சுவர் கட்டிக்கொள்வதற்கு, அரசுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவ முறைகளிலே போற்றிப் பாதுகாக்க வேண்டியமுறை சித்த மருத்துவமுறை என்பதில் யாதொரு ஐயமும்

இல்லை. நீண்ட நெடிய நோய்களான ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு இந்த மருந்துகள் பயன்படுகின்றன. இன்றைக்கு உலகத்தைக் கலக்கிக் கொண்டிருக்கும் பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய 'வயாகரா' என்ற மாத்திரைக்கு ஈடாக அரசுக்குச் சொந்தமான 'டாம்கால்' நிறுவனம், 'விகரஸ்' என்ற மருந்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இது அரசினுடைய விதிக்கு உட்பட்டதாக இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். பொதுவாக பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய பல போலி மருந்துகள் மார்கெட்டில் இருக்கின்றன. ஆகவே 'விகரஸ்' என்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற நம்முடைய 'டாம்கால்' நிறுவனத்தின் மருந்து உரிய முறையிலே clinical trial போன்ற பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்பதை நான் அரசு மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற 'வயாகரா' மாத்திரை உணர்ச்சிகளை மட்டும் தூண்டக்கூடியது. ஆனால் சித்த மருத்துவத் துறையிலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற 'விகரஸ்' என்ற மாத்திரை உடல் வளத்திற்காகவும், தளர்ச்சி ஏற்படாமலும், அதேநேரத்தில் மக்களுக்கு நல்ல முறையிலே பயன்படக்கூடிய வகையிலேயும் பல சித்த மருத்துவர்கள் ஒன்றுகூடி அந்த மாத்திரையைத் தயார் செய்து, முதலிலே அரசினர் மருத்துவமனைகளிலே உள்ள நோயாளிகளுக்குக் கொடுத்து, மிகவும் நலிந்த நிலையிலே இருந்த நோயாளிகளெல்லாம் தேர்ச்சி பெற்றதற்குப் பிறகுதான் அந்த மாத்திரை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் 'அலோபதியில்' தேர்ச்சி பெற்றவர். பொதுவாக அலோபதி டாக்டர்கள் சித்த மருத்துவ முறையை அதிகமாக ஏற்றுக்கொள்வதில்லை. இருந்தாலும், இந்த மாத்திரையினாலே எந்தவிதமான கெடுதலும் நோயாளிகளுக்கு ஏற்படாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விகரஸ்' 'வயாகரா' என்றெல்லாம் பேசுகிறார்கள். — அவற்றை எல்லாம் கேட்கும்போது, — சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு இலவசமாகக் கொடுத்தால் நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. அப்துல் லத்தீப் போன்றவர்களுக்கு அந்த மாத்திரை தேவைப்படாது என்று கருதுகிறேன். *(சிரிப்பு).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**6—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

***16772—திரு. மா. இராமச்சந்திரன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சிவவிடுதி கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*சிவவிடுதி கிராமம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையம் உள்ளது. திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், சிவவிடுதி கிராமத்திலிருந்து 7 கிலோமீட்டர் தூரத்தில் திருவோணம் ஆரம்ப சுகாதார நிலையமும், 12 கிலோமீட்டர் தூரத்தில் ஒரத்தநாடு அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதாலும் சிவவிடுதி கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.*

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு பகுதியிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் சிவவிடுதி கிராமம் இருக்கிறது. 7 கிலோ மீட்டர் தூரத்தில் திருவோணம் ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையம் திருவோணத்திலே இருப்பது உண்மைதான். சிவவிடுதி கிராமத்தைச் சுற்றி பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. தோப்புநாயகம், பிள்ளைக்குறிச்சி, அதற்குப்

பக்கத்திலே வெட்டுவாக்கோட்டை போன்ற கிராமங்கள் இணைந்து இருக்கின்ற பெரிய கிராமம் சிவவிடுதி கிராமம். இணைந்து இருக்கின்ற அந்தப் பெரிய கிராமத்தின் நடுவில் சிவவிடுதி ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தால் மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என்ற சூழ்நிலையினைக் கருத்தில்கொண்டு, அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவவிடுதி கிராமம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 74,955, ஏற்கெனவே அந்த ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. திருவோணம், சிலாத்தூர், அதம்பை, வெங்கரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையிலே, சிவவிடுதி கிராமத்தின் மக்கள்தொகை 5569 என்று இருக்கின்ற காரணத்தாலும், 30,000 மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதிக்குத்தான் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வழங்க வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்துவதாலும் தனியாக சிவவிடுதி கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

7—

## கொல்லிமலையைத் தனி வட்டமாக மாற்றுதல்

***16014—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையை மலைவாழ் மக்களின் நலம் கருதி தனி வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்ப உரிய காலத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும்.

**திரு. சி. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள எனது தொகுதியான சேந்தமங்கலம் தொகுதி, மலைவாழ் மக்கள் தொகுதியாகும். எனது சேந்தமங்கலம் தொகுதியில் கொல்லிமலைப் பகுதி அமைந்துள்ளது. கொல்லிமலையில் சுமார் 40 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அனைவரும் மலைவாழ் மக்கள். கொல்லிமலை 14 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றியமாக இயங்கி வருகிறது. நாமக்கல் வட்டத்தின் மூலமாக 7 ஊராட்சிகளும், இராசிபுரம் வட்டத்தின் மூலமாக 7 ஊராட்சிகளும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு வட்டத்திற்கும் செல்வதென்றால் 75 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, மலைவாழ் மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, மலைவாழ் மக்களுக்கான சிறப்பு நிதி ஒதுக்கீடு திட்டத்தின்கீழ் அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்த நிதிநிலை அறிக்கையிலே கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு பொறுப்பேற்றபின் 24 புதிய வட்டங்கள், 8 புதிய வருவாய்க் கோட்டங்கள் மற்றும் 4 புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. அரசின் நிதிநிலையை கருத்தில்கொண்டு புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்கும் கருத்துருக்களை ஆய்வு செய்ய தற்போது வாய்ப்பில்லை என அரசு முடிவு செய்துள்ளது. இருப்பினும், நிதிநிலைக்கேற்ப உறுப்பினரின் கோரிக்கை உரிய காலத்தில் பரிசீலிக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இந்த அரசு பொறுப்பினை ஏற்ற பின்னாலே மாவட்டங்களும் தாலுகாக்களும் பிரிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இங்கே ஒரு

கேள்விக்கு விடையளிக்கின்றபோது, அந்தப் பிரிக்கப்பட்ட தாலுக்காக்கள் சீரமைக்கப்படும் என்று உறுதி கூறினார்கள். உதாரணமாக, திருவள்ளூர் மாவட்டத்திலே பூவிருந்தவல்லி தாலுக்காவிலே ஒரு சிறு கிராமம், பழஞ்சூர் என்று ஒரு கிராமம். அந்தக் கிராமம் செம்பரம்பாக்கம் ஊராட்சி எல்லைக்குட்பட்டது. அந்தச் செம்பரம்பாக்கம் ஊராட்சி எல்லை திருவள்ளூர் மாவட்டத்திலே, பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில் வருகிறது. ஆனால் அந்தச் சிறு கிராமம் மட்டும் காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கிறது. அதை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அதற்கு ஒரு குழு அமைத்து ஏற்பாடு செய்வதாகச் சொல்லி ஓராண்டு காலம் ஆகிவிட்டது. அதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் விரிவான கேள்விக்கு பதில், பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. ஏ.எம். ராமசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**8—**

### தரைப்பாலம் அமைத்தல்

***1358—திரு. ஏ.எம். ராமசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, புதுப்பேட்டை-முல்லைவாடி இணைப்புச் சாலை வசிஸ்டா நதியின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியிலே புதுப்பேட்டை-முல்லைவாடி பகுதியின் நீண்டநாள் கோரிக்கையான முல்லைவாடி தரைப்பாலத்தை இந்த ஆண்டு கட்டித்தர முடியுமா அல்லது எப்பொழுது கட்ட முடியும் என்பதை உங்கள் மூலமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசிடம் செயற்குறிப்பு இருக்கின்றதா என்று வினா எழுப்பியிருக்கிறார். அரசிடம் செயற்குறிப்பு இல்லாத காரணத்தினால் இல்லையென்று குறிப்பிட்டேன். இருந்தாலும், புதுப்பேட்டை-முல்லைவாடி இணைப்புச் சாலையில் தரைப்பாலம் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லாவிட்டாலும், 35 இலட்சம் செலவில் முழுமைத் திட்டமாக மேற்கொண்டு, இத் திட்டத்தினை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிறுவனம் மூலம் நிறைவேற்ற ஆத்தூர் நகராட்சியால் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட வடிவமைப்பு தொழில்நுட்ப ஆலோசகர் Chola Construction மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட வடிவமைப்பு தயாரிக்கப்பட்டதும் உரிய மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 10-20

**9—**

### பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துதல்

***15481—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி சிறப்பு நிலைப் பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரம் மக்கள்தொகைப் பெருக்கத்திலே மிக வேகமாக வளர்ந்து வரும் நகரமாகும். அறுபடை வீடுகளில் ஒன்றாக இருப்பதால், ஆன்மீக வழிபாட்டுக்கு வருகின்ற மக்கள்தொகை பெருக்கமும் கூடியிருக்கின்ற காரணத்தால், வருமாண்டிலாவது திருத்தணி சிறப்பு நிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, சில முறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதன் அடிப்படையில் ஒரு பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டுமானால், தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், குறைந்தபட்ச வருமானம் ரூ.50 இலட்சமாவது இருக்க வேண்டும். ஆனால், 1996-97 ஆம் ஆண்டு, 1997-98 ஆம் ஆண்டு கணக்குப்படி பார்த்தால், திருத்தணி பேரூராட்சியின் ஆண்டு வருமானம் முறையே ரூ.30.96 இலட்சமும், ரூ.44.60 இலட்சமும் ஆக இருக்கின்றது. எனவே, இந்தப் பேரூராட்சியை நகரார்ட்சியாக மாற்றுவதற்கான தகுதி இல்லை என்பதையும், அப்படிப்பட்ட கோரிக்கை அந்தப் பேரூராட்சியிலிருந்து அரசுக்கு வரவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



**10—**

## யூரியா விலையைக் குறைத்தல்

**•22083—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யூரியா விலையைக் குறைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட விடையைத் தங்கள் மூலம் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

(அ) ஆம். வலியுறுத்தும்.

(ஆ) 29-1-1999 முதல் மத்திய அரசு ஆணை எண் 1199, உரச் சட்டம், நாள் 28-1-1999 மூலம் யூரியா விலையினை டன் ஒன்றுக்கு ரூ. 3,660-லிருந்து ரூ. 4,000 ஆக அதிகரித்து ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூ. 340 கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசு செய்துள்ள விலையேற்றத்தினை மறுபரிசீலனை செய்ய தேசிய அபிவிருத்திக் குழுமத்தை மாநில அரசு கேட்டுக்கொள்ள உள்ளது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நிரந்தரமான விலை எப்பொழுதுமே கிடைப்பதில்லை. அவர்கள் பயன்படுத்துகின்ற இடுபொருள்களின் விலை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருவதால், விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது அரசின் மூலமாக மத்திய அரசை மீண்டும் வலியுறுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் அதைத்தான் நான்

இங்கே குறிப்பிட்டு இருக்கிறேன். டன் ஒன்றுக்கு 340 ரூபாய் கூடுதலாகக் கொடுத்து விவசாயிகள் உரத்தை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் உர மானியம் தருகிறது. ஆனால், அது உற்பத்தியாளருக்குத்தான் போய்ச் சேருகிறது. விவசாயிகளுக்கு இல்லை. இதையும் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துத் தெரிவித்து, உற்பத்தியாளர்களுக்கு மானியம் தருகிறபோது, உரத்தின் விலையையும் விவசாயிகளுக்குக் குறைத்து வழங்க வேண்டும். கடந்த காலத்தில் அப்படித்தான் வழங்கப்பட்டது. ஐக்கிய முன்னணி அரசு இருந்தபோது, நாம் உரத்துக்கு மானியம் தந்தபோது, அந்த அளவுக்கு விலை குறைத்து விவசாயிகளுக்கு உரம் வழங்கினோம். அதைப்போல, ஒரு கொள்கையை இப்போது இருக்கின்ற மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசாங்கத்தினுடைய வேண்டுகோளாக நாங்கள் வைத்து இருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**11—**

**ஏரி பராமரிப்புப் பணி**

***950—திரு. வ. அன்பழகன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதியில் தூசி-மாமண்டூர் ஏரிக்குக் கீழ்ப் பகுதியில் அமைந்துள்ள குண்டியாத்தண்டலம் மணல் கொண்டத்தை கல்கொண்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளது.



முற்பகல் 10-25

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதியில் தூசி-மாமண்டூர் ஏரிக்குக் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள குண்டியாத்தண்டலம் மணல் கொண்டத்தை கல்கொண்டமாக மாற்றித்தர வேண்டுமென்பது பற்றி 1989-90-லேயே, தொடுக்கப்பட்ட வினாவிற்கு நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அன்றைக்கு பொறுப்பிலிருந்த காலத்திலேயே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1989-90-லேயே அந்த ஏரியில் இருக்கக்கூடிய பகிர்மானக் கால்வாயை நவீனப்படுத்த 1.38 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப் பிறகு, நம்முடைய ஆட்சி வந்த பிறகு, வரத்துக் கால்வாய்களான ராஜா கால்வாய், செய்யாறு அணைக்கட்டுக் கால்வாய் ஆகியவற்றைச் சீர் செய்ய நிதி ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். அவரால் தொடங்கப்பட்ட பகிர்மானக் கால்வாய் பாதியிலேயே இருக்கிறது. குண்டியாத்தண்டலம் வரை இந்த ஆண்டிலாவது நவீனப்படுத்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**12—**

**ஏரி ஆக்கிரமிப்பை அகற்றி ஆழப்படுத்தும் திட்டம்**

***3995—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, ரெட்டன் சங்கராபுரம் ஆற்றிலிருந்து தாங்கல் ஏரிக்கு வரும் கால்வாயிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி ஆழப்படுத்த அரசு முன்வருமா?

[1999 பிப்ரவரி 18

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் தொகுதி, ரெட்டணை தாங்கல் ஏரி வரத்து வாய்க்காலைச் சீர் செய்யும் பணி, வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் ரூ.40,000/- மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆக்கிரமிப்புகளும் அப்போது அகற்றப்பட்டுவிட்டன.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி முடித்ததற்காக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, வரத்துக் கால்வாய்களை நல்ல முறையில் சீர் செய்து நம்முடைய அரசு நல்ல பெயரை விவசாயிகளிடம் பெற்றிருக்கிறது. அதேபோல், ஏரியிலிருந்து பாசனத்திற்குச் செல்கின்ற வாய்க்கால்கள் அடைபட்டு, கடைகோடிக்குத் தண்ணீர் செல்ல முடியாமல் விவசாயம் பாதிக்கப்பட்டு, விவசாயிகளிடையே சண்டை சச்சரவு வருகிறது. எனவே, இதைப் போக்குவதற்கு, ஏரியிலிருந்து பாசனத்திற்குச் செல்கின்ற வாய்க்கால்களில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தக் கால்வாயினுடைய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு முன்னால், 3 மீட்டர் அகலம் உள்ள அந்தக் கால்வாய் 1½ மீட்டராகக் குறுகிப் போயிருந்தது. தற்போது 3 மீட்டர் அகலம் இருக்கிறது. 1800 மீட்டர் தூரத்திற்கு இதைச் செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**13—**

**கறுக்கன்குழி வழியாகப் பேருந்து இயக்குதல்**

***9219—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 18]

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திங்கள் சந்தை - மார்த்தாண்டம் செல்லும் 46ஏ தடம் பேருந்தை திக்கணங்கோடு பேரூராட்சிக்குட்பட்ட கறுக்கன்குழி வழியாக இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திங்கள் சந்தையிலிருந்து பெத்தேல்புரம், திக்கணங்கோடு, கறுக்கன்குழி வழியாக மார்த்தாண்டத்திற்கு தற்போது 46-ஏ எண் கொண்ட பேருந்துகள் இரண்டு இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கறுக்கன்குழிக்கு சுமார் 0.75 கி.மீ. தூரத்தில் இயக்கப்பட்டு வரும் திங்கள் சந்தை, செம்பன்விளை, மணலிகுழிவிலை, கருங்கல் வழி-மார்த்தாண்டம் - தடம் எண் 46 எப்-க்கு ஒரு சிற்றிடை அச்சு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கை வழித்தடம் யாவும் போக்குவரத்து வசதி பெற்றிருப்பதால் 46-ஏ வழித்தடத்தை மாற்றி இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திங்கள் சந்தை - மார்த்தாண்டம் செல்லும் பேருந்தை திக்கணங்கோடு வழியாக விட்டால் கூடுதலாக 2 கிலோமீட்டர்தான் ஆகும். இந்த வண்டியை கறுக்கன்குழி வழியாக விட்டால் மார்த்தாண்டம் செல்லக்கூடிய மக்களுக்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்று கொண்டிருக்கின்ற வண்டிகளின் வழித் தடங்களை மாற்றி அமைத்தால் அங்கே பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும் காலதாமதம் ஏற்படும். அங்கே போதிய வசதி இருக்கிற காரணத்தால் இது தேவையில்லை என்று துறை கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, திரு. சுப. தங்கவேலன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 18

14—

**அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை நிறுவுதல்**

***14304—திரு. சுப. தங்கவேலன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் போக்குவரத்து மிகுந்துள்ளதால் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை நிறுவ அரசு முன்வருமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாயல்குடியில் பணிமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கேள்வி வந்து போய்க் கொண்டிருக்கிறது. சாயல்குடி, சென்னை-கன்னியாகுமரி கடற்கரைச் சாலையிலும், வாலிநோக்கம்-சாயல்குடி-அருப்புக்கோட்டை-திருவில்லிபுத்தூர் மாநில நெடுஞ்சாலையிலும், சாயல்குடி-தஞ்சாவூர் மாநில நெடுஞ்சாலையிலும், சாயல்குடி-மதுரை சாலையிலும், இப்படி முக்கியமான சாலைச் சந்திப்பில் இருக்கிறது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே Depot அமைக்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். காரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் போக்குவரத்துக் கழக அலுவலகத்திலேயிருந்தும், சாயல்குடியில் Depot அமைக்க வேண்டுமென்று சொல்லி, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பதிலை மறுபரிசீலனை செய்து அங்கே கிளையைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிந்துகொள்ள விரும்புகிறேன். தூத்துக்குடிக்கும் இராமநாதபுரத்திற்கும் இடைப்பட்ட 135 கிலோமீட்டர் பகுதியில் எங்கேயும் பேருந்துகளைப் பழுதுபார்க்கும் கிளை கிடையாது. எனவே வழியில் பழுதடைந்தால் நெடுந்தூரம் கொண்டு போகிறார்கள். நடப்பு நிதி ஆண்டிலாவது புதிய Depot சாயல்குடியில் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 18]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற போக்குவரத்துக் கழகத்தில், கமுதி பணிமனை சாயல்குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவிலும், முதுகுளத்தூர் பணிமனை 25.2 கி.மீ. தொலைவிலும் உள்ளன. மேலும், புதிய பணிமனையை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அந்த இடத்திற்குக் கூடுதலாக 40 இலட்சம் ரூபாய் செலவாகும். அந்த 40 இலட்சம் ரூபாய் செலவினம் செய்கின்ற அளவுக்கு இப்போது போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினால், இந்த ஆண்டு அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

15—

**குளத்தைத் தூர்வாரும் பணி**

***18861—திரு. ஜி. நிஜாமுதீன்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் நீலாயதாட்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான புண்டரி குளத்தைத் தூர்வாரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயிலுக்குச் சொந்தமான குளங்களெல்லாம் புறம்போக்குக் குளங்களாக இருக்கின்றன. அவற்றில் ஆக்கிரமிப்புகள்தான் அதிகமாக இருக்கின்றன. தமிழக அரசு, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சில கோயில் நகரங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. அதில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் நகரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே, கோயிலுக்குச் சொந்தமான திருப்பாற்கடல் நிலத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்க அரசு முன்வருமா? இது சம்பந்தமாக தமிழக முதல்வர் அவர்களிடம் கடிதம் கொடுத்திருக்கிறேன். அமைச்சரிடமும் தொலைபேசியில் பேசியிருக்கிறேன். துறையிடமிருந்து பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வண்ணம் நீண்டகாலக் குத்தகைக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகரிலுள்ள ஆண்டாள் கோயிலுக்குச் சொந்தமான குளத்தை குத்தகைக்குக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயிலுக்குச் சொந்தமான எந்தக் குளத்தையும் குத்தகைக்கு விடுவதில்லை. அதேநேரத்தில் அது நிலமாக இருந்தால் குத்தகைக்கு விடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனாலும், இப்பொழுது இருக்கிற சட்ட விதிகளின்படி ஐந்தாண்டுகளுக்குத்தான் குத்தகைக்கு விடமுடியும். எனினும், திருவில்லிபுத்தூர் நகராட்சிக்குத் தேவை என்று கருதி, அது அரசுக்கு வந்திருக்குமானால், அதுபற்றி ஆய்வு செய்து விரைவில் முடிவு தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**16—**

## விவசாயிகளுக்குக் கடனுதவி

***15885—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட வேளாண்மை வங்கி மூலம் கொடுக்கப்படும் கடனை வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மூலம் கொடுக்கப்படும் கடனை வட்டியில்லாக் கடனாகக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமிருந்தும் கிணறு வெட்டுவதற்குக்கூட பணம் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அவதிப்படுகின்ற விவசாயிகளுக்கு வட்டியில்லாத கடன் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வதோடு, விவசாயிகள் வாழ்கின்ற காலமெல்லாம் பெரும் கடனாளியாகவே வாழ்கிறார்கள். அவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு, கூட்டு வட்டி, மற்றும் அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்து விவசாயிகளைக் காப்பாற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பெருவெள்ளம் ஏற்பட்ட காரணத்தால், விவசாயிகள் பாதிப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்து, விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்யலாமா என்று யோசனை செய்து, நமக்குத் திரும்பக் கடன் தருகின்ற NABARD நிறுவனத்தோடு பேசுகின்றபோது, 'அப்படி அரசினுடைய பணத்தை நீங்கள் கட்டி, அவர்களுக்குத் தள்ளுபடி செய்யக் கூடாது, அப்படிச் செய்தால், நாங்கள் மறுபடியும் உங்களுக்குக் குறைந்த வட்டியிலே பணம் தர மாட்டோம்' என்று சொல்லிவிட்டார்கள். வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டுமென்று முதல்வர் அவர்கள் விரும்பியபோது, அதற்கும் அவர்கள் உடன்படவில்லை. காரணம், கடந்தகால ஆட்சியில் தமிழக

அரசும் NABARD நிறுவனமும் செய்துகொண்ட ஒப்பந்தம்தான். அரசு பணம் தந்து, விவசாயிகளுக்குக் கட்டினால்கூட, அப்படி கட்டக்கூடாது, கட்டினால் திரும்பவும் பணம் தரமாட்டோம் என்று ஒப்பந்தம் செய்துகொண்ட காரணத்தால், தமிழ்நாட்டிலே எதையும் செய்ய முடியவில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு எதையாவது செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஓராண்டு காலம் அந்தக் கடன்களை வசூல் செய்வதிலிருந்து தள்ளி வைத்து இருக்கிறார்கள். கிட்டத்தட்ட இன்னும் 3 மாத காலம் இருக்கிறது. அப்படித் தள்ளி வைத்த காரணத்தால் தவறுதல் வட்டி கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் விவசாயிகளுக்குச் சலுகையாகக் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது நிலத்தடி நீர் கீழே சென்றுவிட்ட காரணத்தினால் இப்போது கிணறு வெட்டுவது என்பது அரிதான காரியமாக இருக்கிறது. அப்படியே கிணறு வெட்டினாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. குறிப்பாக எங்களுடைய சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலே தண்ணீர் மட்டம் 600 அடிக்குக் கீழே சென்றுவிட்டது. எனவே, விவசாயிகளுக்கு இனிமேல் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படும் நிதியை மாற்றி, ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு Bore Well போடுவதற்கு வங்கியின் மூலமாக, கடன் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல விவசாயிகளிடமிருந்து இந்தக் கோரிக்கை வரப்பெற்றிருக்கிறது. அது இறுதியாக அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நல்லதொரு முடிவை விரைவில் அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.





**17—**

### ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவித் தொகை

***7833—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை போன்ற உயர் கல்வி பயின்றுவிட்டு, வேலையின்றி இருக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை போன்ற உயர் கல்வித் தகுதியுடன், வேலையின்றி இருக்கும் ஆதிதிராவிட வேலை நாடுவோருக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கல்வி படித்தவர்களுக்கு அரசுப்பணி வழங்குகிறபோது பதிவு மூப்பு அடிப்படையிலே பணி வழங்கப்படுவதில்லை. T.N.P.S.C. மூலமாகத்தான் பணி வழங்கப்படுகிறது. நமது கழக ஆட்சி வந்தபிறகு, ஆண்டுக்கு இரண்டு, மூன்று முறை T.N.P.S.C. மூலம் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதனால் பலபேர் வெற்றி பெறுகிறார்கள். ஆனால், 1986ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள் கழித்துத்தான் T.N.P.S.C. தேர்வு நடத்தினார்கள். இந்தத் தேர்வினால் புதியவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கிறதே ஒழிய, ஏற்கெனவே 5 ஆண்டுகளுக்கு முன்பாக படித்தவர்களுக்கு, 10 ஆண்டுகளுக்கு முன்பாக படித்தவர்களுக்கு அரசுப்பணி கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இதனால் ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் வேலையின்றி தவிக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, கருணை உள்ளத்துடன் பரிசீலனை செய்து, படித்துவிட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் வேலை இல்லாமல் இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு உதவித்

தொகை வழங்குகின்ற திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமாக இருந்தாலும், பொறியியலாக இருந்தாலும், சட்டப் படிப்பாக இருந்தாலும், வேளாண்மையாக இருந்தாலும், இவை மூலமாக, சுயமாக வேலை செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. Self employment மூலமாக வழக்குரைஞராக, மருத்துவராக, Engineer-ஆக பணியாற்ற முடியும். எனவே, காத்திருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி, அரசு அதற்காக நிதி உதவி வழங்குவது முறையாகாது. அடுத்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவும், காலி இடங்கள் அறிவிக்கப்பட்டு நிரப்பப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**18—**

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

***6748—டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதிக்குட்பட்ட வேர்கிளம்பியில் செயல்பட்டு வரும் சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேர்கிளம்பியின் அருகில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான அரசு நிலத்தில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



(ஆ) வேர்கிளம்பியில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்பதிவாளர் அலுவலகத்திற்குத் தேவையான இடம் அரசின் கையிருப்பில் இருந்தும்கூட வாடகைக் கட்டடங்களிலே பல சார்பதிவாளர் அலுவலகங்கள் இயங்குகின்றன. அதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதே தொகுதியில் அமைந்துள்ள அருமனையிலே அங்குள்ள மக்கள் இலவசமாக இடத்தை சம்பந்தப்பட்ட துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். மேலும் மார்த்தாண்டத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கிவருகிறது. இவற்றுக்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் அரசுக் கட்டடங்கள் கட்டுவதிலே காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது. என்றாலும், அரசு இதை மறுபரிசீலனை செய்து உறுப்பினர் டாக்டர் வே. ஆல்பன் அவர்கள் குறிப்பிட்ட வேர்கிளம்பி மற்றும் அருமனை, மார்த்தாண்டம் பகுதிகளிலே சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தமிழகத்திலே புதிதாகக் கட்டப்பட்ட கட்டடங்களிலே கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மொத்தம் உள்ள 546 சார்பதிவாளர் அலுவலகங்களில் 319 அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நிதி நிலையைக் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் அரசு இதுபற்றிப் பரிசீலிக்கும்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. பொன்னார்டு.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேர்கிளம்பியில் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு அரசுக்கு நிலம் இல்லையென்றாலும், பொதுமக்கள் நன்கொடையாகக்

கொடுப்பதற்கு முன்வந்தால் அங்கே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி இடம் கொடுத்தால் எத்தனைக் கட்டடம் கட்ட முடியுமோ அந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம் ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்போது அது பழுது அடைந்து, இடிகின்ற தருவாயில் இருக்கின்ற காரணத்தால், அங்கேயிருக்கின்ற ஆவணங்களெல்லாம் பாதிக்கப்படுகின்ற நிலையில் இருப்பதால், அதுபோன்ற இடங்களில் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் அடிப்படையில் கடந்த ஆண்டு தமிழகத்தில் அதிகமாகப் பழுதடைந்திருக்கின்ற கட்டடங்களுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பழுதுகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, பழுது நீக்குவதற்கு முடியுமா என்பதை ஆய்ந்து, அந்த அடிப்படையிலே பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், மீமிசல் என்ற இடத்தில்—இது ஆவுடையார்கோவில் தாலுகாவில் வருகிறது—சார்பதிவகம் ஏறக்குறைய 50 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அரசுக்கு இப்போது செயற்குறிப்பு வந்திருக்கிறது. அங்கே கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் தெரிவித்தபடி, தமிழகத்தில் மொத்தம் 319 சார்பதிவகங்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த வருடமும் இல்லாத அளவுக்கு, 10 புதிய சார்பதிவகங்கள் கட்ட அனுமதி அளித்துள்ளார்கள். அதன்படி 10 புதிய சார்பதிவகங்கள் கட்டுவதற்கு வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கு ஏற்றவாறு, எது முக்கியத்துவம் வாய்ந்ததோ, அது கவனத்தில் கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**19—**

## இராஜபாளையம் நாய் இனத்தைப் பெருக்குதல்

***3182—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் நாய் இனம் காலப்போக்கில் அழிவதைத் தடுக்க, அதிக அளவில் இனப்பெருக்கம் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. இராஜபாளையம் நாய் வேட்டைக்கு, வீட்டுக் காவலுக்கு, தோட்டத்து காவலுக்கு மிகவும் நல்லது. எஜமானுக்கு விசுவாசமும், ரொம்ப கோபமும் கொண்டது அந்த நாய். ஆனால், அந்த இனம் இப்போது அழிந்து கொண்டு வருகிறது. மனிதர்களிலே கலப்புத் திருமணம் என்றால், பிறக்கும் குழந்தைகளுக்கு அறிவு அதிகம் வருகிறது. ஆனால், நாய்களில் கலப்பு ஏற்பட்டு, அந்த இராஜபாளையம் நாய் வீரத் தன்மையையே இழந்துவிட்டது. ஆகவே, இந்த இராஜபாளையம் நாய் இனத்தைப் பெருக்குவதற்கு—இராஜபாளையத்தில் அந்த இனமே அழிந்து போய் விட்டது—என்னென்ன வகைகளிலே அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 பிப்ரவரி 18

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம், ஆடுகளும் மாடுகளும் இறைச்சிக்காகவும், பாலுக்காகவும், கோழிகள் முட்டைக்காகவும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இராஜபாளையம் நாய் ஆண்மையும் பேராண்மையும், வீரமும் மிக்க நாய்தான்; நன்றியுள்ள நாய். இன்றையதினம் நன்றியில்லாத நாய்கள் நாட்டிலே உலவுவதைவிட, நன்றியுள்ள இந்த நாய்களை இனப்பெருக்கம் செய்வது என்ற அவருடைய கோரிக்கை நியாயமானது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு தீவனத்திற்காக ரூ.2.14 இலட்சம், மருந்து வகைக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் ரூ.19,000 ஆக மொத்தம் ரூ. 2.33 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்பிப்பாறை நாய், கோம்பை நாய் போன்ற நாய்கள்தான் இராஜபாளையம் நாய் மாதிரி, மிகவும் வேகமான நாய்கள். அரசு அலுவலகங்களில் காவலர்கள், பியூன்கள் என்று போடுகின்ற மாதிரி, இராஜபாளையம் நாய், கோம்பை நாய், சிப்பிப்பாறை நாய் போன்றவற்றைப் பாதுகாப்பிற்காகப் போட ஏற்பாடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா? அதுமட்டுமல்லாமல், முன்பு கோழி வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் என்றெல்லாம் இருந்தது. இந்த இனம் அழியாமல் இருப்பதற்கு நாய் வாரியம் என்று ஒன்றை அமைத்து (சிரிப்பு) ஆளுங்கட்சியிலே உள்ள பதவியிலே இல்லாதவர்களை, திருவேங்கடம் போன்றவர்களையெல்லாம் அந்த வாரியத்தில் தலைவர் போன்ற பதவிகளில் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய் வாரியம் அமைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களையேத் தலைவராக நியமிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 18]

**20—**

### செண்பகநாமநல்லூர் சுற்றுலா மையம்

***12952—திரு எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, செண்பகநாமநல்லூர் ஸ்ரீஜெகன்னாதபெருமாள் கோயிலில் சிற்பக் கலைக்கூடம் உள்ளதால் அதனைச் சுற்றுலா மையமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி செண்பகநாமநல்லூர் ஸ்ரீஜெகன்னாத பெருமாள் கோவிலைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு இத்துறையில் தற்போது ஏதுமில்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி செண்பகநாமநல்லூர், ஸ்ரீஜெகன்னாதபெருமாள் கோயிலில் கலைக்கூடம் உள்ளதால் அதனை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தைக் கருத்தில் கொண்டும், சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டும் வருங்காலத்தில் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1999 பிப்ரவரி 18

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கர்நாடக மாநிலம், கணக்காயர் அலுவலகத்தில் பணியாற்ற பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 19 தமிழர்களின் நியமன உத்தரவு இரத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. கர்நாடக மாநிலம் கணக்காயர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட 19 தமிழர்களின் நியமன உத்தரவு இரத்து செய்யப்பட்டது குறித்து ஏராளமான உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. நா. பெரியசாமி, திரு. ப. ரங்கநாதன், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. டி மணி, திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன், திரு. இ. புகழேந்தி, திரு. மீ.அ. வைதியலிங்கம், திரு. குத்தாலம் பி. கல்யாணம், திரு. வி.பி. சிங்காரவேலு, திரு. பெ.சு. திருவேங்கடம், திரு. வை. சிவபுண்ணியம், திரு. இரா. பொன்னார்டு, திரு. குழந்தை தமிழரசன், திரு. சி. வேலாயுதன, திரு. சி. ஞானசேகரன், திரு. செங்கை சிவம் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், டாக்டர் காஞ்சனா கமலநாதன், திரு. அ.லெ. சுப்பிரமணியன், திரு. கு. மனோகரன், மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, திரு. ஆர். சக்ரபாணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் Central Staff Selection Commission தேர்வு வைத்து தகுதி அடிப்படையில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களை வேலையில் அமர்த்தியது. அதிலே 19 பேர்கள் கர்நாடக மாநிலத்திலே உள்ள Accountant-General அலுவலகத்தில் பணிக்கு ஒதுக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு கன்னட மொழி தெரியாது என்று கிளர்ச்சி நடந்து அங்கு அவர்களைப் பணியில் சேர அனுமதிக்கவில்லை என்று பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. இது அரசமைப்புச் சட்டத்திற்கும் முரணானது, அதேநேரத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் முரணானது என்பதை நான் இந்தப் பேரவையில் தெரிவிக்க விரும்புகிறேன். Indian





Constitution-இல் — நமக்காக — Fundamental Rights — சில அடிப்படை உரிமைகளைத் தந்திருக்கிறார்கள். அதில் Article 19 (1) (g) says — ``All Citizens shall have the right —

(g) to practise any profession or to carry on any occupation, trade or business" ஆகவே ஒருவர் இந்தியாவின் எந்த மூலையிலும் தொழிலை நடத்தலாம். நான் வழக்குரைஞர் என்பதால் பெங்களூரிலே வழக்குரைஞராகப் பணியாற்றலாம். எந்த வேலையிலும், எந்தப் பகுதியிலேயும் சேர்ந்துகொள்ளலாம், தொழில் நடத்தலாம் என்ற அடிப்படை உரிமையை அரசமைப்புச் சட்டத்திலே தந்திருக்கிறார்கள். ஆகவே அதற்கு எதிராக, இந்த 19 பேர்களைப், பணியமர்த்த மத்திய அரசு அனுமதிக்கவில்லை. இது உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கும் முரணாக இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல; இதற்கு சொல்லப்படுகிற காரணம் அவர்களுக்கு கன்னட மொழி தெரியாது என்பதாகும். அதை அந்த மாநிலத்தினுடைய முதல்வரே காஞ்சிபுரத்திலே தெரிவித்திருக்கிறார். அப்படிப் பார்த்தால் முதலிலே மொழியைத் தெரிந்து கொண்டுதான் வேலைக்குச் சேர வேண்டுமென்றால், தமிழ்நாட்டிலே வேறு எந்த மாநிலத்தைச் சேர்ந்தவரும் வேலைக்கு மனு போடமுடியாது. இந்த மாநிலத்திலே உள்ளவர்கள் வேறு மாநிலத்திற்குப் போகமுடியாது. இன்றைக்கு இருக்கிற விதிப்படி ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டால், அந்தப் பகுதியினுடைய மொழியைப் படித்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுமானால் அந்த அரசாங்கம் உத்தரவிடலாம். அந்த அடிப்படையிலேதான் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மாநிலத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக, ஐ.பி.எஸ். அதிகாரியாக இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் திரு. நிரஞ்சன் மார்டி, ஐ.ஏ.எஸ்., என்ற அதிகாரி, எங்களுடைய மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். தமிழ் அவ்வளவு சரியாகத் தெரியவில்லையென்றாலும் நல்ல ஆட்சித் தலைவர் என்று பெயர் பெற்றவர். மக்களுடைய ஒத்துழைப்பை அதிக அளவில் அவர் பெற்றிருந்தார்.

முற்பகல் 10-50

அதேபோல், இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மாநிலத்தினுடைய தலைமைச் செயலாளராக முன்பிருந்தவர்

திரு. கே.ஏ. நம்பியார், ஐ.ஏ.எஸ். அவர்கள். அன்றைக்கு முதல்வரோடு ஒத்துப்போய், நல்ல நிர்வாகத் திறமை பெற்றிருந்தவர்; கேரளத்துக்காரர். அதேநேரத்தில், காவல் துறையினுடைய தலைமை அதிகாரியாக, D.G.P.-ஆக இருந்தவர் திரு. இராஜசேகரன் நாயர் என்ற ஐ.பி.எஸ். அதிகாரி. அவரும் கேரளத்துக்காரர். ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளரும் (Chief Secretary) காவல் துறையினுடைய தலைமை அதிகாரியும் வேறு மாநிலத்தை — கேரளாவைச் சேர்ந்தவர்கள் —ஒரே நேரத்தில் இருந்திருக்கிறார்கள். திறமையாக ஆண்டிருக்கிறார்கள். நாம் சகித்துக் கொண்டிருந்திருக்கிறோம். ஆனால், இப்போது மொழியைக் காட்டி, 19 தமிழர்கள் அங்கே பணியில் சேரக்கூடாது என்று சொல்வது நியாயம் அல்ல என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நெருங்கிய நண்பர். சினிமா உலகம் நம்முடைய முதலமைச்சருக்கு, அவருடைய சேவையைப் பாராட்டி ஒரு விழா எடுத்தது. நீங்கள் T.V.-யிலே பார்த்து இருக்கக்கூடும். அதிலேகூட, கர்நாடக முதலமைச்சர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். அவர், அதிலே பேசுகிறபோதுகூட, "காவிரிப் பிரச்சினையையும், தமிழர் நலனையும் என்னிடம் விட்டுவிடுங்கள்; கர்நாடக மக்களுடைய நலனை நான் கலைஞரிடம் விட்டுவிடுகிறேன்" என்று மிகப் பெருந்தன்மையாக பேசினார். நல்ல கருத்து. ஆனால், இப்போது அதற்கு மாறாக அவர் கருத்துக் கொண்டிருப்பது, நமக்கெல்லாம் மிகவும் வேதனை தருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்கள் வேலையில் சேர அனுமதிக்கப்படவில்லை என்ற தகவல் வந்தவுடன், உடனடியாக சில மணி நேரத்திற்குள்ளாகவே பிரதம அமைச்சருக்கு, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள், பெங்களூரிலிருந்து வெளிவரும் "தினச் சுடர்" என்ற பத்திரிகை கர்நாடக மாநிலத்திலே மத்திய அரசு அலுவலகத்திற்கு தேர்ந்தெடுத்ததற்கு எதிராக, உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக, மத்திய அரசு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, தமிழக முதலமைச்சர் கலைஞர் முதல் குரல் எழுப்பினார் என்று பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகத் தமிழர்களுக்காக மட்டுமல்ல; உலகத்திலே எந்த மூலையிலே



தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும், அது இலங்கையானாலும், பர்மாவானாலும், முதல் குரல் எழுப்புகிறவர் நம்முடைய மாநில முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே, அவரை உலகத் தமிழர்களுடைய ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர் என்று தமிழ் உலகம் பாராட்டுகிறது. அந்த வகையில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; அந்தப் பத்திரிகை இன்னொன்றையும் சொல்கிறது. ஒருகாலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், அவர் சார்ந்திருக்கிற, முதலமைச்சர் சார்ந்திருக்கிற, தலைமையேற்றிருக்கின்ற கட்சி, பிரிவினைக் கட்சியாக இருந்தது. ஒரு மாநிலக் கட்சி; ஆனால், இப்போது ஒருமைப்பாட்டிற்குக் குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர், கலைஞர்தான்; அவருடைய கட்சி தி.மு.க. என்றும் அந்தப் பத்திரிகை பாராட்டி இருக்கிறது. ஆகவே அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, ஒருமைப்பாட்டிற்கு உலை வைக்கிற வகையில் அந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது. தமிழகத்தினுடைய முதலமைச்சர், இப்படிப்பட்ட ஒரு கருத்தைத் தெரிவித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால், எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம், அந்தத் துறையினுடைய மத்திய இணை அமைச்சரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. நான் அவரை நொந்துகொள்ள மாட்டேன். அவருடைய நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநெல்வேலி தொகுதியில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன் என்பதால், அவரை நொந்துகொள்ளாமல் நான் என்னையே நொந்துகொள்கிறேன். அவர் அதை நியாயப்படுத்துகிறார். இப்படிப்பட்ட பிரச்சினையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது ஓர் உணர்ச்சிபூர்வமான பிரச்சினை. ஓர் அகில இந்திய பிரச்சினை. இதை வளரவிடக் கூடாது. அதற்குத் தகுந்த நடவடிக்கையை நம்முடைய மாநில முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், மத்திய அரசு மூலமாகவும், கர்நாடக முதலமைச்சர் மூலமாகவும் நடவடிக்கை எடுத்து, அந்த 19 பேர்களும் அங்கே வேலைக்குச் சேர்வதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

[1999 பிப்ரவரி 18

முற்பகல் 10-55

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பணியாளர் தேர்வாணையம் மூலமாக 1996 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட, தமிழகத்தைச் சேர்ந்த அந்த இளைஞர்கள் சுமார் 19 பேர்களுக்குக் கர்நாடக மாநிலம் பெங்களூர் A.G. அலுவலகத்திலே பணியில் சேர்வதற்கு, உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, மத்திய அரசு தேர்வாணையம் அவர்களுக்கு ஆணை தந்திருக்கிறது. ஆனால், பெங்களூர் A.G. அலுவலகத்தில் பணியாற்றுகின்ற கன்னடம் பேசுகின்ற தொழிலாளர்களும், கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற கன்னட வெறிபிடித்த அரசியல் தலைவர்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஏறத்தாழ 37 நாட்களாக போராட்டம் நடத்தியதால் அங்கே அந்த 19 தொழிலாளர்களுக்கு பணியில் சேருவதற்கு மத்திய தேர்வாணையத்தால் தரப்பட்ட ஆணை இரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால், இன்றைக்கு பா.ஜ.க. அரசாங்கத்தில் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த தமிழரான, அ.இ.அ.தி.மு.க. கட்சியினுடைய மாண்புமிகு அமைச்சர் ஜனார்தனம்தான் சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சராக இருக்கின்றார். அதேபோன்று மத்திய பா.ஜ.க. அரசுக்கு ஆதரவாக கூட்டணியில் இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவரும் ராஜீவ் காந்தி பெயரிலே இருக்கின்ற வாழப்பாடியினுடைய கட்சியைச் சேர்ந்தவரும் அங்கே அமைச்சர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது தமிழகத்தைச் சேர்ந்த 19 இளைஞர்களுக்கு கன்னடம் தெரியாத காரணத்தினால் பணியில் சேரக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது, கூட்டணிக் கட்சிகளான பா.ம.க., வை.கோ. கட்சி மற்றும் அ.இ.அ.தி.மு.க. கட்சி இவர்கள் எல்லாம் ஏன் அந்த உத்தரவை இரத்து செய்ய வேண்டுமென்று கோரவில்லை, அல்லது இரத்து செய்ய வேண்டுமென்று ஏன் குரல் கொடுக்கவில்லை. அங்கே கூட்டணியில் இருக்கின்றார்கள், ஆனால், இங்கே தமிழகத்திற்கு வருகின்ற நேரத்திலே அதனை எதிர்த்து ஒரு அறிக்கையை விடுகின்றார்கள் அவ்வளவுதான். நமது தமிழகத்தினுடைய தலைவிதி, இங்கே ஐந்து ஆண்டுகளாக முதலமைச்சராக இருந்திருக்கின்ற ஜெயலலிதாவினுடைய ஒத்துழைப்போடுதான் பணியில் சேருகின்ற உத்தரவை இரத்து செய்திருக்கிறார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. லெ. சுப்ரமணியம் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தில் வட



நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் ஏன் இந்தியாவிலேயுள்ள பிற மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளும் இங்கே பணியாற்றுகின்றார்கள். அவர்களுக்கு முழுப் பாதுகாப்பினை நாம் அளித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் இத்தகைய உத்தரவினால் கர்நாடகத்திலே பயந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

சென்னையிலே உள்ள சில வடநாட்டு வியாபாரிகளிடம் பேசும் போது அவர்கள் வேடிக்கையாகச் சொல்வார்கள். அதாவது நாங்கள் எங்களுடைய மாநிலத்தில் சொல்லிக் கொண்டு வரும்போது சொல்வோம், தமிழ்நாடு ஒரு ஏமாளிகள் மாநிலமாக இருக்கிறது என்று. அங்கே சென்றால் நிறைய சம்பாதிக்கலாம், தமிழர்கள் நல்லவர்கள், ஏமாந்தவர்கள், எதையும் சகித்துக்கொள்வார்கள், அதற்காகத்தான் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறோம் என்று சொல்வார்கள். இது நீங்கள் அனைவரும் அறிந்த உண்மைதான். எதற்காக இதனை குறிப்பிடுகிறேன் என்றால், இங்கே தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிராத இரண்டு முதலமைச்சர்களை நாம் கண்டிருக்கிறோம். தமிழ் தாய்மொழி அவர்களுக்குக் கிடையாது. அப்படியும் சகித்துக்கொண்டு தமிழ்நாட்டு மக்கள் அவர்களை முதலமைச்சர்களாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தமிழ் மண்ணிலே பிறந்து, தமிழைப் படித்த இளைஞர்கள் மத்திய தேர்வாணையம் மூலமாகத் தேர்வு பெற்று, மூன்று ஆண்டுகள் கழித்து, உச்சநீதிமன்றத்தினுடைய உத்தரவின்படி அவர்கள் கர்நாடகத்திலே பணியில் சேரலாம் என்று உத்தரவு வந்தும் அந்த உத்தரவை கர்நாடகத்திலே இருக்கின்ற மொழி வெறிபிடித்த தொழிலாளர்களும் அரசியல்வாதிகளும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தொடர்ந்து போராடி எதிர்த்து, அதிலே வெற்றியும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசியல்வாதிகள் தமிழ் நெஞ்சங்களை நேசிக்கின்ற பொதுமக்கள் ஏன் இதை எதிர்க்கவில்லை.

திரு. அ. லெ. சுப்ரமணியம் அவர்கள் சொன்னது போல இதனை எதிர்த்து தமிழக முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். தி.மு.க.-வினுடைய சார்பில் அந்தக் கட்சியின் பொருளாளர் மாண்புமிகு வீராசாமி அவர்களும் கண்டனம் தெரிவித்து அறிக்கை விட்டிருக்கின்றார்கள். ஆனால், பா.ஜ.க. அரசோடு கூட்டணியிலே இருக்கின்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதனைக் கண்டித்து ஏன் ஒரு அறிக்கையினை

விடவில்லை; பாட்டாளி மக்கள் கட்சி இதைக் கண்டித்து கூட்டணியிலிருந்து விலக வேண்டிய சூழ்நிலையை ஏன் உருவாக்கவில்லையென்று எடுத்துச் சொல்லி, இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை நாம் நீண்ட நேரம் விவாதிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

முற்பகல் 11-00

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23 தமிழர்கள் மத்திய தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு, அதில் 4 பேருக்குப் பணி வழங்கப்பட்ட நிலையில், 19 பேரின் பணி கர்நாடகத்தின் A.G. அலுவலகத்திலே மறுக்கப்பட்டு உள்ளது என்பது உண்மையிலேயே அதிர்ச்சிக்குரிய ஒரு விஷயம் ஆகும்.

இந்திய தேசிய ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை மேலும் வலியுறுத்த வேண்டிய, வலுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை நிதானத்தோடும், தீவிரத்தோடும் மேற்கொள்ள வேண்டிய நிலையில், தேசிய ஐக்கியத்தை சிதைப்பதற்குரிய ஒரு வழியை ஏற்படுத்திய ஒரு சம்பவமாகத்தான் நான் இதைப் பார்க்கிறேன். குறிப்பாக மத்திய அரசின் இந்த நடவடிக்கை என்பதை, ஏதோ 19 ஊழியர்களின் பணி மறுக்கப்பட்ட ஒரு விஷயமாக சுருக்கிப் பார்க்க முடியாது. உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையை, இந்திய அரசமைப்புச் சாசனத்தினுடைய சாரத்தை மறுக்கிற ஓர் உத்தரவாகத்தான், நடவடிக்கையாகத்தான் நான் இதைப் பார்க்கிறேன். அதுவும், தமிழ் மொழி அறிந்த தமிழர்களுக்கு கன்னட மொழி தெரியவில்லை என்ற ஒரு காரணத்திற்காக A.G. அலுவலகத்திலே பணி மறுக்கப்பட்டிருப்பதிலே ஒரு கேள்வி எழுகிறது. அவர்கள் தேர்வு செய்யப்பட்ட இடம் A.G. அலுவலகம். A.G. அலுவலகத்திற்காக தேர்வு செய்யப்பட்ட அந்த A.G. அலுவலகத்தின் நிர்வாக மொழி ஆங்கிலம் மற்றும் இந்திதான். அங்கே கன்னடம் நிர்வாக மொழி அல்ல. ஏன் தமிழ்நாட்டில் இருக்கிற இதே A.G. அலுவலகத்திலேகூட, கடந்த காலத்திலே நடைபெற்ற ஒரு சம்பவத்தில், தமிழிலே ஒரு கடிதத்தை அனுப்பியபோது, A.G. அலுவலகம் அதைத் திருப்பி அனுப்பிவிட்டது. ஏனென்றால், A.G. அலுவலகத்திலே நிர்வாக மொழி என்பது ஆங்கிலம் மற்றும் இந்தியும் தான். கன்னடம் என்பது



அங்கே நிர்வாக மொழியாக நிச்சயம் இருக்க முடியாது. இருக்கக்கூடாது. இந்த நிலையில், கன்னடம் தெரியவில்லை என்பதற்காக, கன்னடம் சம்பந்தப்படாத ஒரு அலுவலகத்தில் 19 தமிழர்களின் உரிமை மறுக்கப்படுவது என்பது அரசியல் சாசனத்திற்கு எதிரானது மட்டுமல்ல, நியாயமான வரம்புகளுக்கு முற்றிலும் நேர் எதிரான ஒன்றாக அமைந்திருக்கிறது என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுவும் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, சமீபத்திலே, சென்னையிலே, பாகிஸ்தானுக்கும், இந்தியாவிற்கும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அந்தக் கிரிக்கெட் போட்டியில் நீரும், நெருப்புமாக இருந்த இந்திய, பாகிஸ்தான் அணி மோதலை உலகமே கவனித்துக் கொண்டிருந்த நிலையில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பாகிஸ்தானும், இந்தியாவும் போட்டி நடத்துவதற்குரிய மனித மனநிலை அமையவில்லை என்று பலரும் நிராகரித்த நிலையில், தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில், மிக அமைதியாக அந்தப் போட்டி நடைபெற்றது என்பது மட்டுமல்ல, துரதிருஷ்டவசமான முறையில் இந்தியா தோற்றுவிட்ட நிலையில், நம்முடைய தமிழ்நாட்டில் தோற்றுவிட்ட நிலையில், நம்மைத் தோற்கடித்தவனின் விளையாட்டு ஆற்றலை மதித்து, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் எழுந்து நின்று ஒருசேர கைதட்டிய அந்தப் பண்பாடு என்பது, தமிழ்ப் பண்பாட்டின் மீது சூட்டப்பட்ட மகுடம் என்பதை நாம் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று சொன்ன தமிழ் மறை, தமிழ் மரபு அழிந்துவிடவில்லை என்பதை உயிரோட்டமாகக் காட்டிய ஒரு நிகழ்ச்சிதான் அந்த நிகழ்ச்சியாகும். அப்படி இந்திய ஒற்றுமைக்கு மிக மதிப்புமிக்க பங்களிப்பைச் செலுத்திய தமிழர்களுக்கு, கர்நாடக மண்ணில் இழைக்கப்பட்ட அநீதி, சகித்துக்கொள்ள முடியாத ஒன்று.

அதிலும், துரதிருஷ்டவசமானது என்னவென்றால், சின்ன, சின்ன சுண்டெலி வந்தால் கூட அறிக்கை விடுகிற ஒரு தலைவர், இந்த விஷயத்தில், கொஞ்சமும் கவலைப்படாமல், அறிக்கை எழுதுவதற்கு பேனாவைத் திறக்காமலேயே இருந்துவிட்டது, தமிழர்களின் துரதிருஷ்டம்தான் என்று நான் கருதுகிறேன். இதுகுறித்து, அவர்கள் கவலைகொள்ளவில்லை. ஏனென்றால், எந்தத் தமிழர்கள் 19 பேரால் தங்கள் நியாயத்தை நிலைநாட்ட முடியாமல் போயிற்றோ, அவர்கள் நியாயத்தை நிலைநாட்ட முடியாமல் போனதற்கு மூல காரணம் ஒரு

தமிழ் அமைச்சர்தான் என்பதும் வேதனைக்குரியதாகும். அவர்தான் இதற்குப் பொறுப்பானவர். அவர் பொறுப்பானவராக இருக்கிறபோது, இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது வேதனை அளிக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புவதோடு, மாநில அரசுக்கு நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் - இந்த விஷயத்தில் உள்ளபடியே நான் பாராட்டுகிறேன் - தன்னுடைய முதிர்ச்சியை மாநில முதலமைச்சர் அவர்கள் மிக உறுதியாகவும், மிக அழகாகவும், உரிய காலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேசிய ஒற்றுமையைச் சிதைக்கிற ஒரு கட்சியாக அடையாளம் காட்டப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதி என்கிற முறையில், கலைஞர் அவர்கள் மிக நிதானத்தோடும், ஆனால், உறுதியாகவும் அடி எடுத்து வைத்து, 'இந்த நிலை தவறானது, இது தேசிய ஐக்கியத்தைச் சிதைக்கும்' என்பதை மண்டையில் அடித்தாற்போல் சொல்லிய அந்த நிகழ்ச்சி, பாராட்டுதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரியது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லி, உடனடியாக இந்த விஷயத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுத்து, அரசமைப்பு சாசன மீறலை, அரசமைப்பு சாசனத்தை நிறைவேற்றுவதிலே ஏற்படுகிற சிக்கல்களை ஆழப்படுத்துகிற நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று ஒருமுகமாக வலியுறுத்த வேண்டுமென்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் தேர்வாணையமோ அல்லது பணியாளர் நலத் துறை அலுவலகமோ தேர்வு செய்யவில்லை. Supreme Court வரையறுத்த விதிகளின்படிதான் பணியாளர் தேர்வு நடந்திருக்கிறது. பெங்களூரில் இரு பகுதி கன்னடத்துக்காரர்கள் இருக்கிறார்கள், ஒரு பகுதி தமிழர்கள் இருக்கிறார்கள் என்று அந்த மாநில முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த மாநில Accountant General அலுவலகத்தில் தமிழ் மட்டும் தெரிந்தால் போதாது, கன்னடர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் நிர்வாக வசதி சரியாக இருக்காது என்ற அடிப்படையிலேதான் அவருடைய பேட்டி வந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அங்கேயுள்ள தொலைபேசி நிலையத்திலோ, தபால் நிலையத்திலோ மற்ற இடங்களிலோ, நம்முடைய தமிழர்கள் வேலை பார்க்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்க



வேண்டாம் என்று அங்கேயுள்ள முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

ஏற்கெனவே அங்கேயுள்ள அலுவலகங்களுக்கு முன்னாலே கன்னட வெறியர்கள் வந்து பல போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் கருதித்தான் இந்த மாதிரி செய்யப்பட்டிருக்கிறது என்று அந்த மாநில முதலமைச்சர், அரசு அலுவலர்கள் எல்லாம் சொல்கிறார்கள். இப்போது நம்முடைய தமிழ்நாட்டிற்குள்ளே தென் மாவட்டங்களிலே சாதிக் கலவரங்கள் நடக்கின்றன. அதே இனத்தைச் சார்ந்தவர்கள் இருந்தால் பழைய சாதிக் கலவரம் வரும் என்று சொல்லி நிர்வாக வசதிக்காக நாம் வேறு இடங்களில் மாற்றிப் போடுகிறோம். ஆகவே இதை அரசு சட்டசபையில் கொண்டுவந்து, மத்திய அரசை, வாஜ்பேயி அரசைக் கண்டிப்பதற்காக, இங்கே இதைப் பற்றிப் பேச வைப்பது, பேசுவது அதற்கு நம்முடைய தமிழ்நாடு சட்டசபையைப் பயன்படுத்துவது என்பது.....

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளின் சார்பாகத் தந்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது, அதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதற்காகத்தான். அதற்காகத்தான் சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது கொடுக்கப்படும். பிரச்சினையே இல்லையென்றால், அந்த சிறப்புக் கவன ஈர்ப்பை அவர்கள் தந்திருக்க வேண்டியதில்லை. அதைத் தாங்கள் எடுத்திருக்கவும் தேவையில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** 19 பேருக்கும் அதே மாநிலத்தில் வேறு அலுவலகத்தில் வேலை கொடுத்திருக்கிறார்கள். கொடுக்காமல் ஒன்றும் இல்லை. ஆகவே வாஜ்பேயி அரசை எதிர்ப்பதற்காக இந்த ஒரு பிரச்சினையை, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கிற அளவிலே வைப்பதாக இருந்தால், அது சரியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதற்காக ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்தீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு மனிதனுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். எல்லா உறுப்பினர்களும் அறிவிப்புக் கொடுத்தமாதிரி நீங்களும் ஒத்திவைப்புத் தீர்மான

அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இதிலே ஒன்றும் பிரச்சினையே இல்லையென்றால், ஏன் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்தீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, இல்லை. நான் சொல்கிறேன். தேசிய ஒருமைப்பாடு என்பது மனிதனுக்கு, இந்திய பிரஜை ஒவ்வொருவருக்கும் வேண்டும். ஆனால் சாதி வெறி, மத வெறி, மொழி வெறி இருக்கக் கூடாது. அவர்கள்தான், அந்த கன்னடக்காரர்கள், ஒன்றிரண்டு பேர் அப்படிச் செய்கிறார்கள் என்றால், நாமும் இந்தமாதிரி இன வெறியைக் கிளப்புவது சரியாக இருக்காது. இப்படித்தான் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்பொழுது மலையாளி என்று சொல்லி ஒரு பிரச்சினையைக் கிளப்பி, நாங்கள்தான் தமிழர்கள் என்று சொல்லி, பிரச்சினையைக் கிளப்பினீர்கள். மத வெறியைக் கிளப்பினீர்கள். ஓட்டிற்காக மத வெறியைக் கிளப்பினீர்கள்....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி நான் மணியடிக்கிறேன். நீங்கள் கொஞ்சம் நிறுத்த வேண்டும். நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பைப் படிக்கிறேன்.

"அண்மையில் கர்நாடக மாநிலத்தில் மாநிலக் கணக்காயர் அலுவலகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 தமிழ் அலுவலர்களை அங்கே பணியில் சேரவிடாமல் அரசு தடுப்பது சம்பந்தமாக" என்று நீங்கள் தீர்மானத்திற்கான அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால், யாரும் தடுக்கவில்லை என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த தீர்மான அறிவிப்பைத்தான் நான் படித்தேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அறிவிப்பை நாங்கள் கொடுக்கிறோம், தடுப்பது சம்பந்தமாக. (சிரிப்பு) வேலை கொடுத்தாகிவிட்டது இல்லையா? அறிவிப்புக் கொடுக்கும்போது, இந்த Formality-படி கொடுத்தால்தான் அறிவிப்பை எடுப்பீர்கள் என்பதால் கொடுத்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓஹோ! அப்படித்தான் அறிவிப்புக் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** I am on a point of order, please. அவைக்கு தவறான தகவல் கொடுக்கக் கூடாது என்ற காரணத்திற்காக இதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டுள்ளேன். பத்திரிகையிலே வந்த செய்திப்படி — தின மலர், சென்னை, 17-2-1999 — கர்நாடகாவில் உள்ள இதர மத்திய அரசு அலுவலகங்களில் இந்த 19 பேருக்கும் வேலை



ஒதுக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் ஜனார்த்தனம் கூறியுள்ளார். ஆனால் கர்நாடக முதல்வர் பட்டேலோ இவர்களை கர்நாடகாவில் நியமிப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று அடித்துச் சொல்கின்றார். மேலும் அவர்கள் சொல்வது "கர்நாடகாவில் உள்ள Accountant General அலுவலகத்தில் வேலை பார்ப்பதற்குக் கன்னடம் தெரிந்திருக்க வேண்டும்; எங்கள் மாநிலத்தில் உள்ள அலுவலகங்களில் அனைத்து பரிமாற்றங்களும் கன்னட மொழியில்தான் நடக்கிறது. மேலும் கர்நாடக Accountant General அலுவலகத்தில் நியமிக்கப்பட்ட 19 தமிழர்களின் நியமன உத்தரவு இரத்து செய்யப்பட்டதால் இவர்கள் தமிழகத்தில் நியமிக்கப்படுவார்கள். இவர்களை பெங்களூரிலே நியமிப்பதற்கு வாய்ப்பே இல்லை. இவர்களை தமிழகத்தில் நியமிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலிக்கும் என்று கருதுகின்றேன்" என்று முழுக்க முழுக்க அவர்களை எந்த இடத்திலேயுமே கர்நாடகாவில் நியமிக்க முடியாது என்று பட்டேல் சொல்லியிருக்கிறார். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இவர்களுக்கு கர்நாடகாவிலே மாற்று இடம் கொடுக்கப்பட்டது என்று சொன்ன தவறான தகவலை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

முற்பகல் 11-10

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பத்திரிகையிலே வந்த செய்தியைச் சொல்கிறார். அவருக்கு சாதகமாக உள்ள பத்திரிகையை அவர் காட்டுகிறார். எங்களுக்குச் சாதகமாக உள்ள பத்திரிகையிலே அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்று மத்திய அமைச்சர் திரு. கடம்பூர் ஜனார்த்தனம் சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அதே மாதிரி சில தலைவர்களும் எழுதியிருக்கிறார்கள். அதனால் பிரதமர் பிரச்சினைக்கு முடிவு எடுத்து அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்கள். இதை ஒரு பிரச்சினையாக, சட்டசபையில் பயன்படுத்தி, மொழி வெறியை, ஜாதி வெறியை, மத வெறியை தி.மு.க. அரசு ஊக்குவிப்பது கண்டிக்கக் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, இங்கே இந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது நான் பேசினேன். நான் உட்பட

[திரு. கே. சுப்பராயன்] [1999 பிப்ரவரி 18

பேசிய யாருமே ஜாதி வெறியையோ, மொழி வெறியையோ ஓர் அங்குல அளவு கூடத் தூண்டவில்லை. அத்தகைய நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அச்சத்தில்தான் இதை அவையில் எழுப்ப அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தூண்டுகிற உணர்வு தடுக்கப்படுவதற்காகத்தான் இதை அவையில் எழுப்ப அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்ன வேண்டும்? உங்கள் கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேசி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** 19 பேருக்கு கர்நாடக மாநிலத்திலே வேலை கொடுத்தாகிவிட்டது. பிறகு எதற்கு இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டும்.?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலை கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் அவையில் எழுப்ப ஏன் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்தீர்கள்? வேலை கொடுக்கப்பட்டுவிட்டது என்பதற்கு எங்கே இருக்கிறது ஆதாரம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** மத்திய அமைச்சர் திரு. கடம்பூர் ஜனார்த்தனம் சொல்லியிருக்கிறார். ஒரு மத்திய அமைச்சர் சொன்னால் வேலை கொடுத்ததாகத்தான் அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைக் கேட்கிறேன். நீங்கள் இதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டால் சரி. நாளைக்கு அப்படி அவர்களுக்கு வேலை இல்லையென்றால் தவறான தகவல் கொடுத்ததற்காக உங்கள்பேரில் நடவடிக்கை எடுக்கலாமா? நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டால் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மத்திய அமைச்சர் பத்திரிகையிலே செய்தி கொடுத்திருக்கிறார். இது வானொலி, டிவியில் எல்லாம் வருகிறது. முதலமைச்சருக்கே இந்தத் தகவல் தெரிந்திருக்கும். வேண்டுமென்றே தமிழர்களுக்கு....



1999 பிப்ரவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கர்நாடக முதலமைச்சர் திட்டவட்டமாக.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்கவும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மான மற்றும் கவன ஈர்ப்புக்கான அறிவிப்புகள் எல்லாம் நான் தூண்டிவிட்டு கொடுக்கப்பட்டதாக அந்தப் பொருளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது அவை ஒழுங்கு மீறலுக்கு உட்பட்ட ஒன்று என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனிக்குத் தெளிவாகச் சொல்கிறேன். இந்த 19 தமிழர்களுக்கு பெங்களூரிலே வேலை கிடைக்காததற்குக் காரணம் அந்த மாநிலத்து மொழி வெறிக்காரர்களுடைய தகராறு தான் என்று உறுப்பினர்கள் சிலர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக இங்கே மொழி வெறியைத் தூண்டிவிட அறிவிப்புக் கொடுத்திருப்பதாக நீங்கள் சொல்வது முறையல்ல. "முதலமைச்சருக்கே இந்தத் தகவல் தெரிந்திருக்கும். வேண்டுமென்றே தமிழர்களுக்கு...." என்று சொல்வது முறையல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள். பிரதமர் முதலமைச்சர் கோரிக்கையை ஏற்று உடனே முடித்துவிடப் போகிறார்கள். ஏற்கெனவே மத்திய அமைச்சர் திரு. கடம்பூர் ஜனார்த்தனம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் கடிதம் எழுதியதனால் மற்ற உறுப்பினர்கள் தங்களுடைய கவலையைத் தெரிவிக்கக் கூடாதா?

**திரு. இரா. தாமரைக்கனி:** தி.மு.க. ஆட்சிதான் தூண்டிவிடுகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாகத் தூண்டிவிடுவது இந்த அரசுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எவ்வளவு கடுமையாகப் பேசினாலும் அல்லது சத்தம் போட்டுப் பேசினாலும் ஒன்றும் இல்லை. நீங்கள் முறையாகப் பேசுங்கள். இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுப்பேன். தேவையில்லாமல் நீங்கள் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. முதலமைச்சர் கடிதம் எழுதினாலும் இந்த மன்றத்தில் இருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் இந்தப் பிரச்சினையிலே பேசுவதற்கு அனுமதி கேட்டு, அறிவிப்புக் கொடுப்பதற்கு உரிமை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

[1999 பிப்ரவரி 18

**திரு. இரா. தாமரைக்கனி:** பிரச்சினையைப் பெரிதாக்குகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்கள் கருத்தாக இருக்கலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மலையாளி என்ற பிரச்சினையைக் கொண்டு வந்தது இதே தி.மு.க.தான். மலையாளி என்ற மொழி வெறிப் பிரச்சினையைக் கிளப்பினதே இதே தி.மு.க.தான். மத வெறியைக் கிளப்பியது இதே தி.மு.க.தான். ஜாதி வெறியைக் கிளப்பியதும் இதே தி.மு.க.தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தேவையில்லாமல் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவர்தான், நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 11-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. ரங்கநாதன், எப்படி ஜெயலலிதாதான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்கார வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. ரங்கநாதன் எப்படி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் உட்கார வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உட்காருகிறேன். திரு ரங்கநாதன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருகிறேன் என்று சொல்லிவிட்டு நின்றுகொண்டே இருக்கக் கூடாது. நீங்கள் உட்கார வேண்டும். நீங்கள் உட்காரவில்லையென்றால் நான் வெளியேற்றுவேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. ரங்கநாதன் பேசியதிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன் பேசியதற்கப்புறம் உங்கள் கட்சித் தலைவர் பேசினார். அவர் அதைப் பேசியிருக்கலாம். நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காரவில்லையென்றால் நான் உங்களை வெளியேற்றுவேன்.



1999 பிப்ரவரி 18]

(திரு. பி.ஆர். சுந்தரம் உட்கார்ந்துகொண்டே ஏதோ பேசினார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசினால் நிச்சயமாக வெளியேற்றுவேன். இதுதான் கடைசி எச்சரிக்கை. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னட மொழி வெறி, தேசிய எல்லையைத் தாண்டி, வேலி தாண்டிய வெள்ளாடாக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). நிர்வாக மொழி எல்லா மாநிலங்களிலும் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கிறது. ஆனால், கன்னடம் தெரியவில்லை என்பதற்காக 19 தமிழர்களை கன்னட அரசு, அரசு எழுத்தாளர் பதவி பெற அனுமதிக்கவில்லை. மாறாக, வெறியோடு மிரட்டி அச்சுறுத்தியிருக்கிறது. கர்நாடகம் இந்தியாவிலேதான் இருக்கிறதா? இல்லை, கன்னடம் தனி ஆட்சி செய்கிறதா? இது நமது சந்தேகம். அவ்வளவு அநீதிகளும் அவலமும் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கென்றே ஒதுக்கப்பட்டுவிட்டதா (மேசையைத் தட்டும் ஒலி), என்பதே எனது கேள்வி. நமது அரசு இதற்கு செய்யப்போகிற, ஆற்றப்போகிற கடமை என்ன என்பதனைத் தெரிவிக்க வேண்டும்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் டாக்டர் அறிக்கை விட்டாரா என்பது போன்று பேசினார்கள். பாவம், அப்பாவிகள்; ஒன்றும் தெரியாதவர்கள், ஒரு சிலர். அவர்களை விட்டுவிட்டு, இதைக் கண்டித்து எங்கள் டாக்டர் அய்யா அவர்கள் மிகக் கடுமையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டதோடு, இந்தியப் பிரதமருக்கு அவசரத் தந்தி கொடுத்துள்ளார். அதிலே, நீதி கிடைக்க 19 தமிழர்களைப் பணியில் அமர்த்த உடனடியாக பாரதப் பிரதமர் முடிவு எடுக்க வேண்டுமென்று மிகத் தெளிவாக அறிக்கை கொடுத்திருக்கிறார் என்பதை மட்டும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மொழிப் போர் புரிந்த தமிழ் மண்ணில் இந்த மூக்கறுப்புக்கு நாம் காணப்போகும் வழி என்ன என்பதனை நமது தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்க வேண்டுமென்றும், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மிக விளக்கமாக தமிழ் மொழிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அத்தனையையும் நாம் அவையிலே பேச வேண்டும். ஆகவே, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தேர்வாணையத்தின் மூலமாக அரசுப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்ட தமிழர்கள் கர்நாடக மாநிலத்திலே வேலை செய்வதற்கு இடையூறாக அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு, அவர்களுடைய நியமன உத்தரவு திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனைபேரும் தமிழ் உணர்வோடு, தமிழர்களுக்கு இப்படியெல்லாம் இடையூறுகள் பல்வேறு நிலைகளிலே ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறதே என்கின்ற வேதனையோடு, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கின்ற இலக்கணத்தைப் படைத்த தமிழர்கள் இப்போது அண்டை மாநிலத்திலே வேலை செய்வதற்கு இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறதே என்கின்ற வேதனையோடுதான் இங்கே சட்டமன்றத்திலே அங்கம் வகித்துக்கொண்டிருக்கின்ற அனைத்துக் கட்சியினரும் தங்களுடைய யதார்த்தமான, உளபூர்வமான உணர்வோடு இன்றைக்கு அந்த நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கின்ற முகத்தான் விவாதத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11.20*

அப்படி இருக்கின்ற நேரத்திலே, யாரோ, நமது தமிழகத்தைச் சேர்ந்த முதல்வர் அவர்களின் தூண்டுதலின்பேரில்தான் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது உண்மையிலேயே வேதனைக்குரியது. நாமெல்லாம் தமிழர்கள் என்கின்ற ஆர்வத்தோடு தமிழ் மண்ணிலே பிறந்தவர்கள் என்கின்ற அந்த இதயசுத்தியோடு, தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற தீங்கினைத் தட்டிக்கேட்க வேண்டும் என்ற உளபூர்வமான ஆர்வத்தோடு இங்கே அனைத்துக் கட்சியினரும் பேசிக்கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்வதை எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ்ப் புலவர்கள் சொல்வார்கள்;

"கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாள துளுவும் உன்னுதரத்துதித்தெழுந்தே" என்று. கன்னட மொழி நமது தமிழ்த் தாயினுடைய மொழியிலிருந்துதான், தமிழ் மொழியிலிருந்துதான் பிறந்த ஒரு மொழியாகும். அப்படிப்பட்ட அந்த கன்னட மொழிக்கு மூலமாக இருக்கின்ற தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று சொல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. உண்மையிலேயே இந்தியாவிலேயுள்ள மரபை ஒட்டுமொத்தமாக "Unity in Diversity" என்று சொல்வார்கள், இந்தியாவிலே பல்வேறு கலாச்சாரங்கள், பல்வேறு மொழிகள்



இருக்கின்றன. ஆனாலும் ஒட்டுமொத்தமாக ஒரே இந்தியாவாகக் காட்சியளிக்கிறது. இத்தனை வேறுபாடுகளுக்கிடையேயும் ஒன்றுபட்ட இந்தியாவாக இருக்கிறதா என்கின்ற நிலையையே கேலிக்கூத்தாக ஆக்குகின்ற நிலையிலேதான் கர்நாடக அரசும், அங்கு இருக்கின்றவர்களும், தமிழர்களுக்கு அங்கு வேலைவாய்ப்பு இல்லையென்று மறுக்கின்ற நிலை இருக்கின்றது என்பதை இங்கே இருக்கின்ற அனைவரும் எடுத்துக்காட்ட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடுதான் இப்போது இந்த விவாதம் நடந்துகொண்டிருக்கின்றது.

ஏக இந்தியா என்ற நிலையில் இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை குடிமக்களும் இங்குள்ள அத்தனை மாநிலங்களிலும் பணியாற்றுவதற்கு உரிமை இருக்கிறது என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்ற அரசியல் சட்டத்தை, கேலிக்கூத்தாக்குகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்கின்ற வேதனையோடுதான் இந்த சிறப்புக் கவன ஈர்ப்பிலே நாம் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, தமிழகத்தைச் சேர்ந்த யாராக இருந்தாலும் இதற்குக் குரல் கொடுப்பதற்குக் கடமைப்பட்டவர்கள் அப்படியிருக்கும்போது, தமிழகத்திலே நடக்கின்ற சின்ன காரியங்களுக்கெல்லாம் அன்றாடம் அறிக்கை விட்டுக் கொண்டிருப்பவர்கள் இவ்வளவு பெரிய காரியம், இவ்வளவு பெரிய கொடுமைகள் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில் அவர்கள் ஒருவரும் ஏன் குரல் கொடுக்கவில்லை என்பதை நமது உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால், அது வேதனையாக இருக்கிறது என்று சொன்னால், அதைத் தமிழ் மக்கள் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது ஒவ்வொரு தமிழனுடைய கடமை என்கின்ற நிலையை எடுத்துச்சொல்லி, கர்நாடகத்திலே மட்டுமல்லாமல் எந்த மாநிலத்திலேயும் தமிழர்களுக்கு இப்படிப்பட்ட வேலை உத்தரவாதம், வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுமானாலும் அதற்குக் குரல் கொடுக்கக்கூடியவர்கள் தமிழர்கள் என்கின்ற உணர்வை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தினால்தான் இந்தத் தமிழகத்திலேயிருக்கின்ற மக்கள் இந்தச் சட்டமன்றத்தின்மீதும், இங்கிருக்கின்ற அமைச்சரவைமீதும், இங்கிருக்கின்ற அனைத்துக் கட்சிகளின்மீதும் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பார்கள் என்கின்ற நோக்கத்தோடு, நமது உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல் இதை மிகத் தெளிவாக விவாதிக்கின்ற ஒரு நிலையை இந்தச் சட்டமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிலர் தங்கள்மீது போடப்பட்ட வழக்குகளிலேயிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகக்கூட இந்தத் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த இக்கட்டான நிலையினைச் சுட்டிக்காட்டுவதற்கு இருக்கின்றவர்கள் பயப்படுகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்றுதான் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கருதுகிறேன். தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்; தங்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்கள் எப்படியானாலும் சரி, தமிழர்களைப் பற்றி கவலை இல்லை, தமிழ் மக்களைப் பற்றி கவலை இல்லை என்றிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னென்ன பேசுகிறார் அவர்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னென்ன என்றால், உங்கள் தலைவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். உங்கள் தலைவர், முதலமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் தூண்டினார் என்று சொன்னார் இல்லையா? (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) பெயர் எல்லாம் ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** எனவே, இந்தப் பிரச்சினை தேசத்தின் ஒட்டுமொத்தமான தேசியப் பிரச்சினை என்கின்ற அளவிலே, தமிழர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கொடுமையைத் தமிழகத்திலிருக்கின்ற ஒவ்வொரு தமிழனும் கண்டிப்பாகக் கண்டித்தேயாக வேண்டும். அதற்கு முன்மாதிரியாகத் தன்னுடைய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் இந்தத் தமிழ் மக்களுக்காக—தமிழகத்திலிருக்கின்ற தமிழர்களுக்காக மட்டுமல்ல, உலகில் இருக்கின்ற அத்தனை தமிழ் மக்களுக்காகவும்—குரல் கொடுக்கின்றவராக இருக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சந்தர்ப்பத்திலே அகில இந்திய பார்வர்ட் பிளாக் இயக்கத்தின் சார்பிலே சொல்லி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தேர்வாணையக் குழுவின் மூலமாக 19 தமிழர்கள் கர்நாடக மாநிலத்திலே பணியில் அமர்வதற்கான உத்தரவைப்





பெற்றதற்குப் பின்னால் அந்த மாநில அரசு அவர்களுக்குப் பணி தர முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி, அதற்குச் சாதகமாக மத்தியிலே ஆளுகின்ற பா.ஜ.க. அரசாங்கம் ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி, ஒரு இன வெறியை அல்லது ஒரு மொழி வெறியைத் தூண்டுகின்ற வகையில்தான் மத்தியிலே ஆட்சி நடத்துகின்ற பா.ஜ.க. அரசாங்கம் இந்த நடவடிக்கையின் மூலமாக இன்று தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில், இந்தப் பிரச்சினையில் நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வை அல்லது உணர்ச்சிகளைத் தெரியப்படுத்துகின்ற வகையில், இந்த 19 பேர்களுக்கும் மீண்டும் அந்த மாநிலத்திலேயே அவர்களுக்குப் பணி கிடைக்கின்ற வகையில் நம்முடைய மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தி தலையிட்டிருப்பதைப் பாராட்டி, அதேநேரத்தில் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அரசியல் சட்டத்திலே ஒரு மனிதனுக்கிருக்கின்ற உரிமை பறிக்கப்படாமல், அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வகையில் எங்களுடைய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை இதன் மூலமாக மத்திய அரசுக்கு வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைக் கணக்காயர் அலுவலகத்தில் தேர்வு செய்யப்பட்டு, கர்நாடக மாநிலத்தில் பணியமர்த்தப்பட்ட 19 தமிழர்கள் அங்கு வேலைக்குச் சேர அனுமதிக்கப்படாதது குறித்து, புதிய தமிழகத்தினுடைய சார்பாகச் சில கருத்துகளை நான் இப்பொழுது அவையிலே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உச்சநீதிமன்ற ஆணையின்படியும், சட்ட ரீதியாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களுக்கு மொழி தெரியாது என்ற ஒரே காரணத்திற்காக அங்கே பணி புரிய அனுமதி மறுக்கப்பட்டிருப்பது ஏதோ வெறும் மொழிப் பிரச்சினை என்று மட்டும் பார்க்கப்படக் கூடாது. ஒட்டு மொத்தமாக அங்கே அடிப்படை உரிமையே பறிக்கப்பட்டிருக்கிறது என்ற அளவிலே பார்க்கப்பட வேண்டுமென்பதுதான் புதிய தமிழகத்தினுடைய கருத்து.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1999 பிப்ரவரி 18

இந்தியா முழுமைக்கும் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய I.A.S., I.P.S. அதிகாரிகள் எந்த மொழி தெரிந்தவர்களானாலும் அவர்கள் பிற மாநிலங்களில் பணியில் அமர்த்தப்படுகின்றபோது, Probationery period என்று சொல்லப்படுகின்ற அந்தப் பயிற்சி நேரத்தில், ஒரு வருட காலத்திலோ, 2 வருட காலத்திலோ அந்த மாநில மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. அதேபோல், கர்நாடக மாநிலத்தில் பணியமர்த்தப்பட்ட 19 தமிழர்களுக்கும் Probationery period என்று சொல்லக்கூடிய ஒரு வருடமோ, 2 வருடமோ அவர்களும் கர்நாடக மொழியைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு கொடுத்து, அங்கே பணியமர்த்தப்படுவதற்குப் பதிலாக, அவர்கள் அந்த அலுவலகத்திலே பணியமர்த்தப்படக்கூடாது என்று சொல்லியிருப்பது, ஒட்டுமொத்தமாக இந்திய ஒருமைப்பாட்டிற்கே வேட்டு வைக்கக்கூடிய செயல் என்றே நான் கருதுகிறேன். அதோடு, கர்நாடக முதல்வர் அவர்கள் அங்கேயிருக்கிற கணக்காயர் அலுவலகத்தில் கன்னட மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையாக இருக்க வாய்ப்பு கிடையாது. ஏனென்றால், அகில இந்திய அளவில், ஆங்கிலமும் இந்தியும்தான் இதுபோன்ற முக்கியமான அலுவலகங்களில் ஆட்சிமொழிகளாக இருக்கின்றன.

முற்பகல் 11-30

ஆளுநர்கள் எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அகில இந்திய அளவில் எந்தவொரு மாநிலத்திற்கும் ஆளுநர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அதுபோல உயர்நீதிமன்ற நீதிபதிகளும், உச்சநீதிமன்ற நீதிபதிகளும் மொழி அடிப்படையிலே நியமிக்கப்படுவது கிடையாது. ஆனால் ஒரு கணக்காயர் அலுவலகத்தில் பணி நியமனத்திற்கு மொழி ஒன்றுதான் குறுக்கீடு என்று சொல்வதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பதாக நான் கருதுகிறேன். இதுபோன்ற அநாகரீகமான செயல், அடிப்படை உரிமைகளைப் பறிக்கக்கூடிய செயல், எதிர்காலத்தில் தமிழர்களுக்கும் அல்லது வேறு எவருக்கும் நிகழ்ந்திடாவண்ணம் தடுத்து நிறுத்தப்படக்கூடிய அளவில் இந்த அவையில் சில முக்கியமான முடிவுகளை எடுக்கவேண்டுமென்பதுதான் புதிய தமிழகத்தின் கருத்து என்று சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.



1999 பிப்ரவரி 18]

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"செப்புமொழி பதினெட்டுடையாள் ஆயின்*
*சிந்தனை ஒன்றுடையாள் எங்கள் தாய்"*

என்று பாரதியார் பாடியிருப்பது இதுபோன்ற பிரச்சினைகள் பிற்காலத்தில் வருமோ என்று கருதியதால்தான் என்று கருதுகிறேன். மொழி எதுவாக இருந்தாலும், தேசிய நலன், தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை என்ற அடிப்படையில் நம்முடைய சிந்தனை அமையவேண்டுமென்ற அடிப்படையில் அன்றைக்கே பாரதி சொல்லி வைத்திருக்கிறார். அதுபோன்று வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் பாரதப் பண்பாடு. அந்த அடிப்படையில் கர்நாடகத்தில் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை, அதாவது 19 தமிழர்களைப் பணியில் அமர்த்தமாட்டோம் என்று சொல்லியிருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. ஆனால் அவர்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காக அங்கே வேலை கொடுக்க மறுக்கவில்லை என்பது இன்னொரு வகையில் நமக்குத் தெளிவாகிறது. அதாவது நான்கு தமிழர்கள் அங்கே பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மொழி தெரியவில்லை என்ற காரணத்தைச் சொல்வது கூடத் தவறு. நம்முடைய மாநிலத்தில், எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக வந்தவர்கள் பலருக்குத் தமிழ் அறவே தெரியாமல் இருந்த காலங்கள் உண்டு. திங்கட்கிழமைதோறும் மக்கள் குறை தீர்க்கக்கூடிய அந்த நாளில், தமிழ் தெரிந்த ஒருவரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்குச் செயல்பட்டு, பின்னாளில் தமிழ் கற்று சிறந்த முறையில் தமிழ் பேசக்கூடிய அளவுக்கு அவர்கள் ஆகி இருக்கிறார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே கர்நாடகத்தில் அந்த 19 பேருக்கு கன்னடம் தெரியாமல் இருந்தாலும் கூட, அவர்கள் கன்னடத்தைத் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்களுக்கும் வாய்ப்பு கொடுத்திருக்க வேண்டும். அதுதான் நியாயம்.

எப்படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு அறவே காவிரித் தண்ணீரைத் தரமாட்டோம் என்று சாதித்ததோ பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பேயி அவர்களுடைய முயற்சியாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்பாலும் மாற்றி நாம் சாதித்தோமோ அந்த வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடல் பிகாரி வாஜ்பேயி அவர்களை அணுகி, இது தேசிய

ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கிறது, அதிலும் பாரதிய ஜனதா கட்சி ஒரே நாடு, ஒரே மக்கள் என்று பேசிக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இதுபோன்ற மொழி வெறி, மாகாண வெறி என்பது பல மாநிலங்களில் தலை தூக்கிவிட்டது என்று சொன்னால்—எத்தனையோ பிரச்சினைகளை அதாவது சாதி மதப்பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்ற நாம்—இந்த மொழி வெறியையும் மாகாண வெறியையும், கூட சந்திக்கக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு இது நம்மை ஆளாக்கிவிடும் என்று எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரத நாட்டின் ஒற்றுமைக்கு இதுவும் கூட குந்தகமாக அமைந்துவிடக்கூடாது என்று கருதி, முதலிலேயே இதுபோன்ற பிரச்சினைகள், மொழியானாலும், மாகாணமானாலும், வேறு எந்த மாநிலத்திலும், பாரத நாட்டின் எந்த மாநிலத்திலும் நிகழ்ந்துவிடக்கூடாது என்ற அடிப்படையில், இதற்கு ஒரு சரியான முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அது மற்ற மாநிலங்களுக்கும் மற்ற மொழி மக்களுக்கும் ஒரு பாடமாக அமையக்கூடிய வகையில், நாம் செயல்படவேண்டும். இதற்கு ஒரு முடிவு வரவேண்டும். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது. அதோடு நின்றுவிடாமல், பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பேயி அவர்களோடு தொடர்பு கொண்டு, எப்படி காவிரி நீர்ப் பிரச்சினையில் பாரத நாடு மட்டுமல்ல, உலகமே பாராட்டக்கூடிய அளவில் ஒரு நல்ல முடிவை பாரதப் பிரதமர், தமிழக முதல்வர், கர்நாடக முதல்வர் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து எடுத்தார்களோ அதுபோல, எந்தச் சூழ்நிலையிலும் மொழி வெறி ஏற்பட்டுவிடக்கூடாது என்ற வகையில் முதலமைச்சர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். பாரத் மாதா கீ ஜெய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து ஆளுங்கட்சியான தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களும், எதிர்க்கட்சி-தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.





சுப்பராயன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களும், புதிய தமிழகம் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்களும் அளித்துள்ள கருத்துகள், கர்நாடகத்தில் 19 தமிழர்களுக்கு வேலை கொடுத்து இரத்துச் செய்ததைக் கண்டிக்கின்ற வகையிலே அளிக்கப்பட்டுள்ள கருத்துகளாகும். இந்த வரிசையில், அ.இ.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் — தீர்மானம் என்ன கொடுத்தாரோ அதற்கு மாறாக—கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நிலையைச் சரியென்று ஒப்புக்கொண்டு சில கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை உருவானவுடன் ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில்,

"I wish to bring to your notice the blatant violation of the provisions of the Constitution of India and the rulings of the Supreme Court in the case of cancellation of appointment orders issued to 19 Tamils in Karnataka.

According to information received by me, the Staff Selection Commission of the Government of India has selected 23 persons on the basis of merit for appointment to Group C category in the Office of the Accountant-General, Karnataka. It so happened that all the persons selected by the Commission after following the proper procedure were Tamils. However, it is learnt that orders of appointment issued to 19 Tamils have since been withdrawn by the Staff Selection Commission despite the advice given by the Comptroller and Auditor-General to give them training in Kannada Language. You will agree that this order of the Staff Selection Commission is not only discriminatory against Tamils but also violative of the provisions of the Constitution of India and the laws of the land.

Since the matter is very sensitive, I request you to kindly intervene in the matter immediately and instruct the officials concerned to withdraw the cancellation of appointment orders forthwith."

என்று உடனடியாக இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பேயி அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இதுவரையிலே எனக்கு எந்த பதிலும்

கிடைக்கவில்லை. ஆனாலும், நம்முடைய தமிழ்நாட்டிலே இருந்து பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களும், தமிழர் நலனில் அக்கறை கொண்ட எல்லாத் தலைவர்களும், இந்த நிலையைச் சுட்டிக்காட்டி, கண்டித்து, மத்திய அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்; அரசியல் சட்டத்திற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

நான், இந்தச் சூழ்நிலையோடு எனக்குத் தரப்பட்டுள்ள தகவலை குறிப்பிட விரும்புகிறேன். திருமதி சுபத்ரா நாராயணன் என்பவர், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஊழியர் தேர்வாணையத்தின் பிராந்திய இயக்குநராக இருக்கிறார். தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் இவருடைய எல்லைக்குட்பட்டவையாகும். தற்போது கர்நாடகத்திலே துணை இயக்குநர் பதவி காலியாக உள்ளதால், இவர் அதற்கும் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். இந்தத் தேர்வாணையம், மத்திய அரசின் கீழ்மட்டப் பணிகளுக்குத் தேர்வு நடத்தி, அந்த அந்தப் பகுதிகளில் காலியிடங்களுக்குத் தக்கவாறு ஊழியர்களைப் பணியமர்த்தி வந்தது. பின்னர், 9-12-1996 இல் உச்சநீதிமன்றத்தில் சி.ஏ.எண் 1190/95-ல், ராட்னி சியாம் சிங் என்பவரால் தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டின்படி இந்தத் தேர்வாணையம், ஊழியர் தேர்வுப் பட்டியலை அகில இந்திய அளவில் தயார் செய்து, அதன் அடிப்படையில், காலி இடங்களில் பணியமர்த்தல் செய்யப்பட வேண்டுமென்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு, உச்சநீதிமன்ற ஆணையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. இம்முறையில், ஒரு பகுதியில், அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் போதிய எண்ணிக்கையில், மதிப்பெண் அடிப்படையில் கிடைக்காத நிலையில் அடுத்த பகுதியில் தேர்வு செய்யப்பட்ட நபர்களை நியமனம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

முற்பகல் 11-40

உதாரணமாக, சமீபத்தில், இந்தத் தேர்வாணையத்தால் தேர்ந்து எடுக்கப்பட்ட நபர்களில் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள், 76 பேர்கள் மட்டுமே தகுதி பெற்றவர்களாக உள்ளனர். ஆகையால் மீதமுள்ள 104 காலியிடங்களுக்கு தமிழகப் பகுதியிலே இருந்து தேர்வு செய்யப்பட்ட நபர்கள் மதிப்பெண் அடிப்படையில் கர்நாடகத்திற்கும், 63 நபர்கள் புதுடெல்லிக்கும், 39 நபர்கள் உத்திரப் பிரதேசத்திற்கும், 29 நபர்கள் மேற்கு வங்கத்திற்கும், 179 நபர்கள் மராட்டியத்திற்கும், 5 நபர்கள்



அந்தமானிற்கும், 7 நபர்கள் கேரளத்திற்கும் அனுப்பப்பட்டு, அவர்கள் பணியமர்ந்து வேலை செய்து வருகின்றார்கள்.

கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்ட 104 நபர்களில் பொதுக் கணக்குத் துறைக்கு அனுப்பப்பட்ட 23 நபர்களைத் தவிர மற்றவர்கள் பிற துறைகளில் சேர்ந்து பணி செய்து வருகின்றார்கள். கர்நாடக பொதுக் கணக்குத் துறையின் ஊழியர்கள் சங்கததில் மட்டும் பிற தமிழ் எதிர்ப்பு இயக்கங்களோடும், சில அரசியல்வாதிகளோடும் சேர்ந்து அந்த 23 நபர்களைப் பணியில் சேர விடாமல் மிரட்டியும், வேலை நிறுத்தப் போராட்டத்திலே கடந்த சுமார் 35 நாட்களாக ஈடுபட்டும் வருகின்றார்கள். இவ்வாறு கர்நாடகத்தில் தமிழர்களை அதிக அளவில் வேலையில் சேர்த்தமைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தமிழக பிராந்திய இயக்குநராகவும் உள்ள திருமதி சுபத்ரா தான் காரணம் என்று சந்தேகப்பட்டு, திருமதி சுபத்ரா பெங்களூர் சென்றிருந்தபோது, அவரைக் கடுமையாக ஏசிப்பேசியும், மிரட்டியும் உள்ளார்கள். கர்நாடக பிராந்திய அலுவலகத்தில் உள்ள ஒரு தமிழ் அதிகாரியையும் மிரட்டியுள்ளார்கள். ஆகையால், திருமதி சுபத்ரா சமீபகாலமாக, அலுவல் நிமித்தம்கூட, பெங்களூர் செல்வதை நிறுத்திக்கொண்டார். ஆகையினால், இந்த எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது சென்னையிலே உள்ள திருமதி சுபத்ரா வீட்டிற்கு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அவரைத் தீர்த்துக் கட்டி விடுவதாகவும், அவருடைய மகளைக் கடத்திச் சென்று விடுவோம் என்றும் மிரட்டி வருகின்றார்கள். திருமதி சுபத்ரா அவர்கள் வீட்டினுடைய தொலைபேசியைத் தொலைத்தொடர்புத் துறையினர் கண்காணிப்பிலே வைக்க ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டு உள்ளது. சென்னை மாநகர காவல் துறையினர் திருமதி சுபத்ரா வீட்டிற்கு போலீஸ் பாதுகாப்பும் அளித்து வருகின்றார்கள். இது உள்ள சூழ்நிலை.

இந்த 23 நபர்களில், 19 நபர்கள் தமிழர்கள், அவர்கள் கன்னடம் கற்காதவர்கள் என்ற காரணத்திற்காக வேலையிலே அமர்த்தப்பட்ட பிறகு, விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, இந்திய ஒருமைப்பாட்டிற்கும், அரசமைப்புச் சட்டத்திற்கும், அண்மையிலே 1996 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கும் முரணானது என்பதைத்தான் நானும் சுட்டிக்காட்டி இருக்கின்றேன்; பிரதமருக்கும் அதை அறிவித்து இருக்கின்றேன். ஆனால், இந்தத் துறையினுடைய மத்திய அமைச்சர் அவர்கள், இந்தச் செயலுக்கு நியாயம் கற்பித்து

ஓர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். 'அவர்களுக்கு எல்லாம் வேலை தரப்படுகிறது' என்பது போல ஒரு கூற்று வெளியாகியிருக்கிறது.

மாண்புமிகு கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 'அவர்கள் எல்லாம் தமிழகத்திற்கு அனுப்பப்படுவார்கள்' என்று சொல்லியிருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். நான் எப்போதுமே காவிரி பிரச்சினையிலேகூட—இது—19 தமிழர்களுடைய பிரச்சினை. காவிரிப் பிரச்சினை; தமிழகத்திலே உள்ள பல கோடி தமிழர்களுடைய பிரச்சினை, விவசாயிகளுடைய பிரச்சினை. அதிலே கூட—நம்முடைய மாநில மக்களுக்கும் கர்நாடக மாநில மக்களுக்கும் இடையிலே ஓர் அமளி மூளக்கூடாது, கலவரம் ஏற்படக்கூடாது, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம்தான் அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுவோம் என்பனவற்றை ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். அதே நிலையைத்தான் இந்தப் பிரச்சினையிலேயும் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இருந்தாலும், தமிழர்களுடைய உரிமை, அவர்கள் தமிழ் மொழி தெரிந்தவர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் மறுக்கப்பட்டிருப்பது ஏற்கக்கூடிய ஒன்றல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, ஒரு பணிக்குச் சேர்ந்த பிறகுகூட, அந்த மாநில மொழியைக் கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படுகிறது; சட்ட ரீதியாக அந்த நிலை இருந்து வருகிறது. நம்முடைய மாநிலத்திலே வந்து சேருகின்ற I.A.S. அதிகாரிகள், பலபேர், அவர்கள் Collectorகளாக இருந்தாலும், வேறு அலுவலகத்தில் சேர்ந்தாலும்கூட, வந்தபிறகு, நம்முடைய தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, இப்போது அந்தத் தமிழ் மொழியை மழலை மொழியிலே பேசுகின்ற காட்சியை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, வேலையிலே சேர்ந்த பிறகு, சேர்ந்த தமிழர்களை விலக்கியிருப்பது உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. அதற்காக நாம் மிக அதிகமாக உணர்ச்சிவயப்படக் கூடாது. தமிழர்கள் என்ற உணர்வு இருக்க வேண்டும். உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் இருக்கின்ற வித்தியாசத்தையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு, இதுபற்றி தொடர்ந்து மத்திய அரசோடும், தேவையானால் கர்நாடக மாநில முதலமைச்சரோடும், தொடர்பு கொண்டு மேலும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை எடுத்துக்கூறி, இந்த அளவுக்கு இந்த விவாதம்நடைபெற்றிருப்பதால், இதுவே போதும், இது மத்திய அரசினுடைய கவனத்திற்கும், கர்நாடக அரசினுடைய கவனத்திற்கும்





நிச்சயமாகச் செல்லும் என்ற நம்பிக்கையோடு அமைகின்றேன். வணக்கம்.

*முற்பகல் 11-45*

## 4. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 7-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்:

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிதல், திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

***திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்:

ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்—

"1999ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை வழிமொழிதல், திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூர்வாரும் பணி, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுக் கொள்கை அறிவிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுச்சுமை 160 கோடி ரூபாயை அரசே ஏற்றுக்கொள்ளுதல் போன்ற ஏராளமான நல திட்டங்களுடன், மாநில அரசின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்கச் செய்யவும், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து நாட்டு ஒருமைப்பாடு மத நல்லிணக்கம் காக்கவும் உறுதியோடு செயல்படும் இவ்வரசின் திட்டங்களை உள்ளடக்கி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிகிறேன் என்று சொல்லி நிறுத்துங்கள்.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மைக்குரிய மேதகு ஆளுநர் அவர்கள் இம்மன்றத்தில் மகிழ்வோடு ஆற்றிய உரைக்கு இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் கொண்டு வந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டமன்றத்தின் 7-ஆவது கூட்டத் தொடரில் மேதகு ஆளுநர் அவர்கள் அளித்த உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை முன்மொழியவும், அந்த உரையின்மீது சில கருத்துகளை எடுத்து வைக்கவுமான வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் முதலிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

@ 135 முதல் 144 வரையிலான பக்கங்களில் மேதகு ஆளுநர் ஆற்றிய ஆங்கில உரை இணைப்பு-I ஆகவும், மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவையில் படித்த ஆளுநர் உரையின் தமிழாக்கம் இணைப்பு-II ஆகவும் அச்சிடப்பெற்றுள்ளன.



*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்,

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம், மத்தியில் கூட்டாட்சி, மாநில சுயாட்சி என்ற ஐம்பெரும் இலட்சியங்களை உள்ளடக்கியதாகவும் அதன் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளதுதான் இந்த ஆளுநர் உரை. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் காண விரும்பிய சாதிமத பேதமற்ற சமத்துவ தமிழகத்தைப் படைப்பதில் தன்னை ஒரு முழுநேரப் பணியாளராக இந்த மாநிலத்திற்கு அளித்து, ஓய்வு ஒழிவு இல்லாமல் பணியாற்றியதன் காரணமாக இன்று தமிழகம் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் பெற்று இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. சாதிமதி பேத தொல்லைகள் மனித சமுதாயத்தைவிட்டுத் தொலைய வேண்டுமானால், மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவையென்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவை நனவாக்க 1998-99 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சிகளையும் அதனால் விளைந்த பயன்களையும் தமிழ்ச் சான்றோர்களும், அறிவியலாளர்களும் இன்றைக்கும் பெரிதும் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர்.

*முற்பகல் 11-50*

உலகம் முதலில் சந்தித்தது வேளாண்மைப் புரட்சி. அடுத்து சந்தித்தது தொழிற்புரட்சி. ஆனால் இன்றைக்கு காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருக்கின்ற தகவல் புரட்சியை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். மாறிவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப நாமும் நம்மை மாற்றிக்கொள்ளத் தவறினால், நாம் நம் அடையாளங்களை இழந்துவிடுவோம் என்ற உணர்வைப் பெற்ற முதல்வர் அவர்கள் எடுத்து வைத்த முதல் அடி கணிப்பொறி உலகில். தானே ஒரு மாணாக்கரைப்போல கணிப்பொறியின் தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல், இதனோடு இணைந்த மின் அஞ்சல், தகவல் தொழில்நுட்பம், இணையம் ஆகியவற்றை தமிழகத்தின் அரசுத் துறைகளிலும் அறிமுகப்படுத்தும் பேரவாவுடன் அமைக்கப்பட்டதுதான் தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு. இந்தக் குழுவிற்கு தானே தலைமையேற்று கடந்த 28-11-1998 அன்று தலைமைச் செயலகத்தில் முதல் மாநாட்டை கலைஞர் அவர்கள் கூட்டினார்கள். அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளும், அறிவிக்கப்பட்ட அறிவிப்பும் இந்த அரசு எத்தகைய செயல்திறன்

செயல்திறன் மிக்க அரசு என்பதை இன்று இந்த நாட்டுக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. பயன்பாடற்ற, பகட்டான பல்வேறு திட்டங்களை, அறிவிப்பாக, கடந்த ஆட்சியிலே நாம் பார்த்தோம். அந்த அறிவிப்புகளால் இந்த நாட்டுக்கோ மக்களுக்கோ எந்தவகையான பயனும் விளையவில்லை என்பதையும் கடந்த காலத்திலே நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், இப்போது எந்த ஓர் அறிவிப்பாக இருந்தாலும், அது உடனடியாக அமல்படுத்தப்பட்டு, அதன் பயன் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதிலே மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது இந்த அரசு. அந்த மாநாட்டிலே எடுத்த முடிவுகள் இந்தத் தமிழகத்திற்கு எவ்வளவு பெரிய பயனை விளைவிக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகளாவன— தீவிர தொழில் நுட்பக் கொள்கைகளை உருவாக்குதல்; சிப்காட், எல்காட் நிறுவனங்கள் மூலம் சென்னையில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை மேம்படுத்துதல்; London World Tel நிறுவனத்துடன் இணைந்து சமுதாய Internet மையங்களை அமைக்கும் திட்டத்தின் முன்னேற்றப் பணிகளை ஆய்வு செய்தல்; உலகத் தரத்திற்கு இணையாக தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமாக TANITEC நிறுவனத்தை அமைத்து செயல்படுத்துதல்; சென்னை, தரமணியில் ஒரு இலட்சம் சதுர அடி பரப்பில் TIDEL PARK நிறுவனத்தை நிறுவுதல்; தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன நிதி வழங்குதல்; தகவல் தொழில்நுட்பங்களை தமிழக அரசு அலுவலகங்களிலும், அதன் சார்பு நிறுவனங்களிலும் கடைபிடிப்பது; தமிழக அரசும் எல்காட் நிறுவனமும் புதியதாக உருவாக்கியுள்ள Internet Website-ஐ பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துதல்; அரசின் நிருவாகம் ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான நிருவாகம் என்பதைப் பறைசாற்றும் மக்கள் சாசனம், தமிழிலும், ஆங்கிலத்திலும், அமைய இருக்கின்ற சமுதாய Internet மையங்களில் பொது மக்களுக்கு வழங்கப்படும் என்ற அறிவிப்புகள். வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப புரட்சிக்கேற்ப அடுத்த தலைமுறைக்குத் தாய் நாட்டைத் தயார்படுத்தும் முயற்சியின் முதல் வெற்றியாகும் இத்தகைய அறிவிப்புகள்.

தாய் நாட்டைத் தயார்படுத்திய அதே வேகத்தோடு மொழியின் வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார் நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்கள். அண்மையில் முதல்வர் அவர்கள் சிங்கப்பூரிலே கலந்துகொண்ட மாநாடும், பிப்ரவரி 7,8 தேதிகளில் தமிழகத்தில் தமிழக அரசால் நடத்தப்பட்ட 'தமிழ் இணையம் 99' என்ற கருத்தரங்கமும், உலக அளவில் மக்களுடைய கவனத்தைத் தற்போது பெரிதும் கவர்ந்திருக்கின்றன.



இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்தில்

*"எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!*
*உன்சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"*

என்ற வரிகள் இடம்பெற்றிருந்தன. இந்த இரு வரிகளுக்கிடையே இன்னொரு வரி உண்டு. அதாவது

*'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே'*

என்பதை அடுத்து

*"ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்"*

என்று ஒரு வரி உண்டு.

*முற்பகல் 11-55*

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய இந்த வரி தமிழ்த்தாய் வாழ்த்தாக தமிழகத்தில் அரசு நிகழ்ச்சிகள், அரசு விழாக்களுக்கு முன்பாகப் பாடப்பட வேண்டுமென்று முடிவு எடுத்த நீங்கள்,

*'ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்'*

என்ற அந்த வரி மற்றவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது என்ற பெருந்தன்மையோடு, பெருநோக்கோடு, இன்றைக்கும் நாம் பாடுகிற அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்தில்

*'ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து*
*சிதையாஉன்'*

என்ற அந்த வரியை நீக்கிவிட்டு,

*'எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!*
என்பதையடுத்து *உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!'*

என்ற அந்த வரியை இணைத்து இருக்கிறீர்கள். அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்து பாடியதற்குப் பிறகு, ஆளுநர் உரை இங்கே நிகழ்த்தப்பட்டது.

அந்த உரையில் "தமிழ் இணையம் 99" என்பதைப் பற்றிய விளக்கங்கள் எல்லாம் தரப்பட்டு இருந்தன. அந்த விளக்கங்களைப்

படிக்கின்ற நேரத்தில் உள்ளபடியே என் கண்கள் பனித்தன. தமிழன்னையின் சீரிளமைத் திறம் எக்காலத்திலும் எச்சூழ்நிலையிலும் சிதையாமல் பாதுகாக்கும் முயற்சியே "தமிழ் இணையம் 99" என்பதை இங்கே நீங்கள் சுட்டிக்காட்டி இருக்கிறீர்கள்.

அதைப்போலவே, மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றி டார்வின் Theory கூறுகிறது. சூழ்நிலைகளின் மாறுதலுக்கேற்ப தங்களில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ளும் உயிரினங்கள் மட்டுமே வாழத்தகுதி உடையவை. அதாவது `survival of the fittest' என்று டார்வின் Theory கூறுகிறது.

சமீபத்தில் கவிஞர் வைரமுத்து அவர்கள் எழுதிய "தண்ணீர் தேசம்" என்ற ஒரு கவிதைப் புத்தகத்தை படித்தேன். அதிலே முன்னுரையிலே அவர் சில வேதனைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"இதுவரை சந்தித்திராத அபாயக்கட்டம் ஒன்றை தமிழ் தாண்ட வேண்டியிருக்கிறது.

லெமூரியாவையும் கபாடபுரத்தையும் குடித்த கடலை விடவும் ஏடுகளைத் தின்ற தீயைவிடவும்

தமிழ் மண்ணை அடிமைகொண்ட ஆயுதங்களை விடவும்

ஆபத்து மிகுந்த அபாயம்.

ஒரு வர்த்தக மூட்டையாய்ப் போய்விட்ட உலக உருண்டை

விஞ்ஞான சரக்கால் நெருக்கித் தைக்கப்பட்டுவிட்டது.

உருட்டித் தைக்கப்பட்ட அந்த உலக மூட்டையில்

இந்தத் தமிழும் ஒரு சரக்காக ஆகிவிட்டது.

அந்தச் சரக்கு சர்வதேசத் தரம் வாய்ந்ததாகத்

தயாரிக்கப்படாத வரைக்கும்

இனிவரும் நூற்றாண்டுகளில் அது உள்ளூரில் விலை போகவும் உத்தரவாதம் இல்லை"

இந்த உண்மையை ஒப்புக்கொள்வதுதான், தமிழின் ஆயுளை நீட்டிக்கும் முதல் அடையாளம். தமிழ், பரண்களில் எல்லாம் நிறைந்து இருக்கிறது. ஆனால் Computer அலமாரிகள் காலியாகவே உள்ளன.



இன்னொரு கிரகத்திற்கு, பயணம் கொள்ளத்தக்க நவீன வாகனமாக தொன்மைப் புகழ் மிக்க தமிழைப் பழக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உலக மொழிக் குடும்பங்களிலிருந்து தமிழ் விடுபட்டுப் போகும் விபத்தை நாம் தவிர்க்க முடியும். இந்த உண்மையை உணர்ந்துதான், தமிழை சர்வதேசத் தரம் வாய்ந்ததாகவும், இன்னொரு கிரகத்திற்குப் பயணம் செய்யத்தக்க வாகனமாகவும், உலக மொழிக் குடும்பத்தில் தமிழை ஓர் அங்கமாகவும் ஆக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த சீரிய முயற்சிதான் "தமிழ் இணையம் 99" ஆகும்.

அந்நிய ஆதிக்கத்தாலும், பல்வேறு மொழி மற்றும் கலாச்சாரக் கலப்பாலும் 'மெல்ல தமிழ் இனிச் சாகுமோ' என்ற ஓர் ஐயத்தைப் போக்கி, தேன்மதுரத் தமிழோசை உலகம் எங்கும் பரவும் வகை செய்வோம் என்ற பிரகடனத்தோடு "தமிழ் இணையம் 99" தொடங்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கருத்தரங்கில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியும் அந்த மாநாட்டிலே அளிக்க இருப்பதாக கலைஞர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இதற்கெல்லாம் உச்சக்கட்டமாக, இத்தகைய பணிகளை மேற்கொள்ள தமிழக அரசு ரூபாய் 5 கோடி நிதியும் ஒதுக்கி இருக்கிறது. ஒளிவு மறைவற்ற அரசாங்கம் நடத்துகிற நாம் இத்தகைய தகவல் துறைப் புரட்சியில் முன்னணியிலே நிற்கிறோம் என்பதைப் பெருமையோடு இந்த அவையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஓராண்டில் தமிழ்நாடு முழுவதும் 1,500 சமுதாய Internet மையங்கள் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து இருக்கிறது. இந்தச் சமுதாய Internet மையங்கள் எதற்குச் செயல்படும், எப்படிச் செயல்படும் என்ற ஒரு கேள்விகூட இப்போது மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஊருக்கு ஊர், தெருவுக்கு தெரு STD/ISD Booths செயல்பட்டுக் கொண்டிருப்பதைப்போல, மற்றவர்களுக்குத் தகவலைத் தெரிவிக்க நாம் அந்த Booth-களைப் பயன்படுத்துவதைப்போல, இந்த Internet மையங்கள் நாம் தகவலை அறிந்துகொள்வதற்கும், நமக்குத் தகவலைத் தருவதற்கும் பொதுமக்களுக்கு மிகுந்த பயனைத் தரக்கூடிய வகையில் அமையும் ஓர் அமைப்பாகும். இதன் மூலம் கிட்டத்தட்ட 1½ இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற அந்த அறிவிப்பும் வேலையில்லாப் பட்டதாரிகளிடையே மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்

எடுத்துக்கொண்ட முயற்சியும், அவர்கள் காட்டிய தாராள உள்ளமும் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்து நிற்கும். இந்த முயற்சியில் முழு ஒத்துழைப்பு நல்கிய நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர், மதிப்பிற்குரிய அண்ணன் முன்னாள் மத்திய அமைச்சர் மாறன் அவர்கள், பெரிதும் துணையாக இருந்துள்ளார்கள். அதுபோல தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பக் களஞ்சியத்தின் துணைக் குழுவின் தலைவரான பேராசிரியர் அனந்தகிருஷ்ணன் அவர்களும் இதிலே சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் தந்த ஒத்துழைப்புக்காக, இந்த மாமன்றத்தின் மூலம் அவர்களுக்கெல்லாம் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நண்பகல் 12-00

"வயிற்றிற்குச் சோறிடல் வேண்டும்
இங்கே வாழும் மனிதர்க்கெல்லாம்
பயிற்று பல கல்வி தந்து
இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்"

என்றான் பாரதி. ஓர் அரசாங்கத்தினுடைய முக்கியமான கடமை மனிதர்களுக்குத் தேவையான இன்றியமையாத உணவுப் பொருட்களை நியாயமான விலையிலே வழங்குவது. ஆனால் கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு இந்த நிலைக்கு மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அண்மையில் மத்திய அரசு அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு மற்றும் யூரியா போன்றவற்றின் விலையை உயர்த்தியது. ஏழையெளிய, நடுத்தர மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள, பொறுப்புணர்ச்சியுடைய இந்த மாநில அரசு, மைய அரசு அறிவித்த அரிசி விலை உயர்வை—கூடுதல் மானியமாக 160 கோடி ரூபாய் அளவிற்கு இந்த அரசுக்கு சுமை அதிகரித்த போதிலும்கூட—நுகர்வோர் தலைமீது நாங்கள் சுமத்த மாட்டோம் என்று அறிவித்திருக்கிறது. மத்திய அரசு விலை உயர்வை அறிவித்த உடனேயே எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் எந்த மாநிலமும் இதைப்பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு முன்பாகவே, எந்த மாநில முதலமைச்சரும் இந்த விலைவாசி உயர்வால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுவார்களே என்று எண்ணிப் பார்ப்பதற்கு முன்பாகவே, விலைவாசி உயரும் என்று அறிவிப்பு வந்தவுடனே, இந்தச் சுமையை நாங்கள் ஏழையெளிய மக்களின்மீது சுமத்த மாட்டோம், இந்த விலைவாசி உயர்வினால் ஏற்படுகின்ற இந்தக் கூடுதல் சுமையை இந்த



அரசே ஏற்றுக் கொண்டு அதே விலையில் மக்களுக்கு அரிசியைத் தருவோம் என்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவில், இப்போது மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஊர்தோறும் தொடக்கப் பள்ளிகள்; அருகிலே நடுநிலைப் பள்ளிகள்; அதற்கு அருகிலே உயர்நிலைப் பள்ளிகள்; இந்த 2½ வருடத்தில் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தகுந்த அரசு உத்தரவுகள் மூலமாக அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கிராமப்புற மாணவர்களும் தொழில் கல்வியிலே இடம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு 15 விழுக்காடு அவர்களுக்கு ஒதுக்கி அறிவித்திருக்கிறீர்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் ஒன்றைக் கேட்டுக்கொண்டேன். கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய சிற்றூராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத்தான் இந்த 15 சதவீத ஒதுக்கீடு உண்டு என்று அறிவித்ததன் காரணமாக, என் தொகுதியில் உள்ள மிகமிகப் பிற்படுத்தப்பட்ட கிராமப் பகுதியில் உள்ள பள்ளிகளில், அப்பகுதிகள் பெயரளவிற்கே பேரூராட்சி என்றுள்ள நிலையில், அந்தப் பேரூராட்சியினுடைய உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு இந்த 15 சதவீத இட ஒதுக்கீடு மறுக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து, அது பேரூராட்சியாக இருந்தாலும், அதுவும் கிராமப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களும் இந்த 15 சதவீத இட ஒதுக்கீட்டைப் பெறுகின்ற வகையிலே அந்த அரசு உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மனிதனின் முக்கியத் தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, வேளாண்மையில் வளர்ச்சிக்கு இன்றியமையாத பாசன ஏரிகள், கால்வாய்கள் தூர் எடுக்கப்பட்டு நல்ல முறையில் பாசனம் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இது இப்போது விவசாயிகள் மத்தியிலே—அது எந்த மாவட்டமாக இருந்தாலும், தஞ்சை மாவட்டமாக

இருந்தாலும் சரி—நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஏரிகள், கண்மாய்கள், கடைமடைப் பகுதிகள் அத்தனையும் தூர் வாரப்பட்டதன் காரணமாக தண்ணீர்ப் பற்றாக்குறை இந்த ஆண்டு போக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை போக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் மழைக் காலங்களில் கால்வாய்களில் உடைப்பு ஏற்படுவதால் உண்டாகும் வெள்ளச் சேதம் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வேளாண்மை, உணவு உற்பத்தி பெருகி அடுத்த ஆண்டிற்கு பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசியைக் கொள்முதல் செய்வதற்கான நல்வாய்ப்பு நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 12-05

ஒரு நாட்டினுடைய இரு கண்களாகக் கருதப்படுபவை, விவசாயமும், தொழில் துறையும் ஆகும். இந்த விவசாயமும், தொழில் துறையும் கடந்த காலத்தில் எந்த நிலையில் இருந்தன, இப்போது இந்த இரண்டரை ஆண்டுக்காலம் நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக எத்தகைய உயர்ந்த நிலையைப் பெற்றிருக்கிறது என்பதைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் சொன்னார்கள். இந்த ஆண்டு இந்த ஆளுநர் உரையிலேயும் அந்த முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இதே வேகத்தில், வரவிருக்கின்ற ஆண்டுகளிலும் இந்த இரண்டு துறைகளிலும் கவனம் செலுத்துவோமேயானால், நிச்சயமாக தமிழகம் தொழில் துறையில் உணவு உற்பத்தியில் இந்தியத் துணைகண்டத்திலேயே முதல் மாநிலமாகத் திகழும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இந்த இரண்டு துறைகளும் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்றால், அதற்கு அடிப்படைத் தேவையான மின்சார உற்பத்தி மிக மிக அவசியம்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியைக் கணக்கிட பல்வேறு துறைகளின் வளர்ச்சியின் அளவுகோலை கணக்கில் எடுப்பதற்குப் பதிலாக அந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தினுடைய அளவைக் கணக்கிட்டாலே அந்த மாநிலத்திலே தொழில் துறையும், விவசாயமும் எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றன என்பதை நம்மாலே கணக்கிட முடியும். அந்த அளவிற்கு இரண்டு துறைகளும் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு, மின்சார உற்பத்திக்கு அதிகக் கவனம் தரப்பட்டு, வரும் ஆண்டுகளில் மின்சார உற்பத்தி



அதிகரிக்கப்படும் என்ற நல்ல செய்தியை இந்த ஆளுநர் உரையிலே தந்திருக்கிறார்கள்.

அடுத்து, சென்னை மாநகர மக்களுக்குப் போக்குவரத்து நெரிசல் என்பது கடந்த காலங்களில் ஏற்பட்ட மிகப் பெரிய தண்டனை. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மாண்புமிகு கலைஞர் அவர்கள், முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அன்று, சென்னை மாநகரத்தைச் சேர்ந்த சிலர் எங்களிடம் சொன்ன செய்தி, 'இன்று எங்களுக்கு இரண்டாவது சுதந்திர நாள். கடந்த ஐந்தாண்டுகளில் சென்னையில் போக்குவரத்து பாதிப்பால், உரிய காலத்தில் அலுவலகங்களுக்குச் செல்ல முடியாமல், மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாமல், கல்வி நிலையங்களுக்குச் செல்ல முடியாமல் மணிக்கணக்கில் காத்து நின்ற எங்களுக்கு இது ஒரு விடிவுகாலம், ஒரு சுதந்திர நாள்' என்பது.

அதைப்போல, இன்றைக்குச் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைப் போக்க, பாலங்களை விரிவுபடுத்தவும், புதிய புறவழிச் சாலைகளை அமைக்கவும், 10 சிறிய மேம்பாலங்களைத் தொடங்கவும் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணிகளான கூவம், பக்கிங்ஹாம் வாய்க்கால், அடையாறு, ஓட்டேரி நல்லா உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த மூன்று மாதங்களில் பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன. அரசு அறிவிக்கின்ற இப்படிப்பட்ட நல்ல பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற நம்முடைய சென்னை மாநகர மேயர் தம்பி ஸ்டாலின் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ரூபாய் 360 கோடி செலவில் 104 பாலங்களைக் கட்டுவதற்கான கால்கோள் விழா மாண்புமிகு முதல்வர் அவர்களால் நடத்தப்பட்டது. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வாகனப் போக்குவரத்து மிகமிக இன்றியமையாதது. எப்பொழுதெல்லாம் கலைஞர் ஆட்சி நடைபெறுகிறதோ அப்பொழுதுதான் நாட்டிலே பாலங்களும், சாலைகளும் வருகின்றன என்ற நிலைமை சரித்திரத்தில் ஆழப் பதிந்துவிட்ட ஓர் உண்மை. அதைப்போல, கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழகத்தில் பல்வேறு சாலைகள் பராமரிக்கப்பட்டு, பல்வேறு புதிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் எதிர்காலத்திலேயும் இந்தப் பணிக்காக ரூபாய் 360 கோடி ஒதுக்கீடு

செய்திருப்பது உண்மையிலேயே வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரிய ஒன்று ஆகும்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலை நம்பியிருக்கின்ற நெசவாளர்கள் வாழ்கின்ற நாடு இது. இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட நேரத்தில் அந்த கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் இருந்த நிலை பரிதாபத்திற்குரிய ஒன்று ஆகும். ஏராளமான கைத்தறித் துணிகள் தேங்கி, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய பணம் கோடிக்கணக்கில் நிலுவையில் இருந்தது. தேங்கிக் கிடந்த துணிகளையெல்லாம் தினமும் 20% Rebate என்ற அளவில் விற்பதற்கான அந்த அறிவிப்பைச் செய்ததோடு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையையும் உடனுக்குடன் அளித்து, கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள்.

அதேநேரத்தில், தமிழகத்தில் விசைத்தறித் தொழில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலினுடைய வளர்ச்சியை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. காரணம், ஏராளமான நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய மிக முக்கியத் தொழிலாக இந்த விசைத்தறித் தொழில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த விசைத்தறித் தொழிலிலும் ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, கைத்தறிக்குப் போட்டியாக விசைத்தறி வந்துவிட்டது என்ற உணர்வு இல்லாமல், இந்த விசைத்தறித் தொழிலை நம்பியிருக்கின்ற இலட்சக்கணக்கான நெசவாளர்கள், இலட்சக்கணக்கான ஊழியர்கள், பணியாளர்கள் ஆகியோரின் நலனை கருத்தில்கொண்டு இந்தத் தொழிலையும் முறைப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்த அரசை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

கடந்த ஒரு மாத காலமாக விசைத்தறித் துறையிலே பயன்படுத்தப்படுகின்ற 20 ஆம் எண் நூல் திடீரென்று விலையேறி விட்டதன் காரணமாக தமிழகத்தினுடைய பல பகுதிகளிலே அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழிற்கூடங்கள் மூடப்பட்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு



இந்த விசைத்தறித் தொழிலிலும் அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

தற்போது நாட்டிலே ஆங்காங்கே நிலவுகின்ற சாதிக் கலவரங்கள், சமயப் பூசல்கள், மதக் கலவரங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்த அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு பக்கம் தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டுமென்று முன்னாள் முதலமைச்சர் அடிக்கடி பத்திரிகைகளிலே அறிக்கை விடுகிறார். அதேநேரத்தில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு சட்டத்திற்குட்பட்டு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்திலே சிறுபான்மைச் சமுதாயத்தை நசுக்குகிறார்கள் என்று மதவெறியைத் தூண்டுகின்ற வகையிலே இன்னொரு பக்கம் அறிக்கை விடுகிறார். எனவே, இப்படிப்பட்ட அறிக்கைகளுக்கெல்லாம் செவி சாய்க்காமல் நாட்டிலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நீங்கள் மேற்கொள்கின்ற முயற்சியை, தொடர்ந்து மேற்கொண்டு தமிழகத்தை நீங்கள் அமைதிப் பூங்காவாக்க அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய பல்வேறு திட்டங்கள், சென்ற ஆண்டு எய்திய குறியீடுகள், வரவிருக்கின்ற ஆண்டில் செய்யப்போகின்ற பல்வேறு திட்டங்களுக்கான கொள்கை விளக்கங்கள் போன்றவற்றை முழுமையாகப் பெற்று நாட்டு மக்களுக்கு மனநிறைவைத் தந்திருக்கின்ற இந்த ஆளுநர் உரையை வரவேற்று

*'அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்'*

என்ற வள்ளுவனின் திருக்குறளின் பொருளை நன்குணர்ந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தக்க கருவியைக்கொண்டு, தக்க காலத்திலே எடுக்கின்ற முயற்சிகள் யாவும் வெற்றி பெறவும், அதன்மூலம் இந்தத் தமிழ்ச் சமுதாயம் உயர்வு பெறவும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து இந்த ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது

[திரு. ச. அழகிரி] [1999 பிப்ரவரி 18

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம், இவற்றை நிலைநாட்டுவதற்காக மாநில அரசு எடுத்துக்கொண்ட நல்ல முயற்சிகளை ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக தமிழக அரசும், முதலமைச்சர் அவர்களும் மதச் சார்பின்மையையும் சமூக நல்லிணக்கத்தையும் தமிழகத்திலே நிலைநாட்டுவதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அரசாங்கத்தோடு சேர்ந்து, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும், பிற அரசியல் கட்சிகளும் இந்த நல்ல நோக்கத்திற்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக நீதி என்பது ஓர் உயரிய தத்துவமாக இந்தியாவிலே கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் சமீபகாலங்களில் உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும், தமிழகத்திலும் அது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறதோ என்கிற ஓர் ஐயப்பாடு நமக்கு எழுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு கூட்டத்திலே பேசியபோது 'நல்ல மருந்தை நாம் கொடுக்கின்றோம், ஆனால் பக்கவிளைவுகள் பாதிப்பை சில நேரங்களிலே ஏற்படுத்துகின்றன' என்று குறிப்பிட்டிருந்தார்கள். அது இப்போது தமிழகத்திலேகூட ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

நாட்டிலே உயர் வகுப்பினர் இருக்கிறார்கள். உயர் வகுப்பினருக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டாலும்கூட பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குக் கூடுதலான சந்தர்ப்பங்களை அளித்தால்தான் உயர் வகுப்பாரோடு அவர்கள் போட்டியிட இயலுகிறது. இதைத்தான் நாம் கடந்த ஆண்டுகளிலே நம்முடைய சமூக நீதிக் கொள்கையாகக் கடைபிடித்து வந்திருக்கிறோம். அதே நிலை தலித்துகளுக்கும் பொருந்துகிறது என்பதனை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-15

இப்போது தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் சமமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டாலும்கூட,



1999 பிப்ரவரி 18] [திரு. ச. அழகிரி]

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கூடுதலாகச் சில வாய்ப்புகள் அளித்தால்தான், அவர்கள் பிற்படுத்தப்பட்டோரோடு போட்டியிடுவதற்கு அல்லது நிலைத்து நிற்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்பதனை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். தந்தை பெரியார் அவர்களும், டாக்டர் அம்பேத்கர் அவர்களும், மண்டல் அவர்களும் இந்தக் கருத்தைத்தான் இந்தியா முழுவதும் சொன்னார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக, இப்போது சமூக நீதி என்பதே, ஏதோ பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடையே ஏற்படுகின்ற சண்டையாகக் காட்சியளிக்கிறதேயொழிய, இரண்டு சமூகத்திற்கிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஒரு சுமூகமான சூழ்நிலை இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். சமுதாயப் படிக்கட்டுக்களில் உயர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய மூவரும் சமமாக அமர்ந்திருக்கவில்லை. அவரவர்களுக்கான வேறுபாடுகள்; அவரவர்களுக்கான இடைவெளிகள் இருக்கவே செய்கின்றன. எனவே, அவற்றை நாம் உணர்ந்து, தமிழகத்திலே சமூக நீதியைக் கொண்டுவர முயற்சிப்போமேயானால், சமூக நல்லிணக்கத்திற்குப் பிரச்சினை ஏற்படாது. இதனை சாதி இந்துக்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கை விடுக்க ஆசைப்படுகிறேன்.

தலித் மக்களுடைய பிரச்சினைகளுக்கு இளையபெருமாள் குழுவினுடைய அறிக்கையைத் தமிழக அரசாங்கம் கடைப்பிடிக்குமேயானால், பெரும்பான்மையான பிரச்சினைகளை அதன்மூலமாகத் தீர்க்க முடியும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இப்போது மத்திய அரசு கோதுமை, யூரியா, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களுடைய விலையை உயர்த்தியிருக்கிறது. இது ஒரு விவேகமற்ற செயல் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி கருதுகிறது. இந்த விலையேற்றம் ஏற்பட்டபோது, கேரள சட்டமன்றம் மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கையைக் கண்டித்து, சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதேபோன்று, தமிழக சட்டமன்றத்திலும்

[திரு. ச. அழகிரி] [1999 பிப்ரவரி 18

மத்திய அரசினுடைய இந்த விவேகமற்ற செயலைக் கண்டித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அமைச்சரவையினுடைய இந்த முடிவை -மத்திய அமைச்சரவையில் பங்கேற்றிருக்கின்ற தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள், அமைச்சரவைக் கூட்டத்திலே, இந்த விலையேற்றத்தை ஆதரித்துவிட்டு, தமிழகத்திற்கு வந்து, இந்த விலையேற்றத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதை நாம் பார்க்கிறோம். இது ஓர் இரட்டை நிலை. இந்த நிலையை, மத்திய அமைச்சரவையில் பங்கெடுத்திருக்கின்ற தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் கைவிட்டுவிட்டு, மத்திய அரசினுடைய நிலையை எதிர்க்க வேண்டும். இல்லையெனில், மத்திய அமைச்சரவையில் பங்கேற்றிருக்கின்ற அந்தக் கட்சிகளுடைய முகத்திரையை நாம் பொதுமக்களுக்கு உணர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு அறிவித்திருக்கின்ற விலையேற்றத்தின் காரணமாக, ஏறக்குறைய 160 கோடி ரூபாய், மாநில அரசுக்க நிதிச்சுமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிதிச்சுமையை தமிழக அரசாங்கம் எப்படிச் சமாளிக்க இருக்கிறது என்பது நமக்குத் தெரியவில்லை. வரவு-செலவுத் திட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கக்கூடும். ஆனால், இந்த நிதிச்சுமையின் காரணமாக தமிழகத்தில் ரேஷன் அரிசியினுடைய விலையை மாநில அரசு உயர்த்தவில்லை; உயர்த்த விரும்பவில்லை என்று முதலமைச்சர் கூறியிருப்பதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

அதேநேரத்தில், மேலும் ஒன்றை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 160 கோடி ரூபாய் நிதிச்சுமையை மாநில அரசாங்கம் புதிய வரிகள் மூலமாகப்போட்டு, சமாளிக்க முயற்சிக்கக் கூடாது. அப்படிச் செய்தால், ஏதாவதொரு வகையில் வரிச்சுமை ஏழை மக்களுடைய தலையிலே வந்து விழும். மாறாக, நிர்வாகச் சீர்திருத்தம், நிதிச் சிக்கனம், வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றுவதன்மூலம் திட்டச் செலவுகள் அதிகப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் போன்ற நல்ல நடைமுறைகளின் மூலமாக, விவேகமான நடைமுறைகளின் மூலமாக இதனைச் சமாளிக்க வேண்டும். அப்படிச் சமாளித்தால்தான் மாநில அரசாங்கம் ஏழை மக்களுக்குத் துயரம் தராமல் ஆட்சியை நடத்த முடியும் என்பதனைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1999 பிப்ரவரி 18] [திரு. ச. அழகிரி]

மைய அரசினுடைய இந்த விலையேற்றத்திற்கு ஆளுநர் உரையிலே எந்தவிதமான கண்டனமும் தெரிவிக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை. "கடிதோச்சி மெல்ல எறிக" என்பது நண்பர்களிடம்தான் காட்டவேண்டுமேயொழிய, பிறரிடம் காட்டும் இந்த நடைமுறையை மாநில அரசு எடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இது பார்வைப் பிழை மட்டுமல்ல, இது ஒரு வரலாற்றுப் பிழையாகக்கூட நாளை அமையக்கூடும். மத்திய அரசு இவ்வளவு விலையுயர்வை ஏற்படுத்தியும்கூட ஆளுநர் உரையிலே அதற்குக் கண்டனம் இல்லையென்பது நம்முடைய நடைமுறை சரியாக அமையவில்லையோ என்கிற ஓர் உணர்வை ஏற்படுத்தக்கூடும். எனவே நான் இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

ஆளுநர் உரையிலே 142 இலட்சம் குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலேகூட பல இடங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படவில்லை. மாநிலத்தில் பரவலாக இந்தக் குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே அதைக் கவனத்திலே கொள்ள வேண்டும். அதுபோல ரேஷனிலே இப்போது நாம் அரிசி கொடுக்கிறோம். இந்த அரிசி மிகவும் மோசமான அரிசியாக இருக்கிறது. தரமான நெல்லிலிருந்து மோசமான அரிசியை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்பத்தை நம்முடைய உணவுக் கழகங்கள் எப்படியோ அறிந்து வைத்திருக்கின்றன. இதைப் போன்ற அரிசியை இந்தச் சட்டப் பேரவையிலே இருக்கின்ற உறுப்பினர்களோ, மற்றவர்களோ ஒருவேளை உண்ண முடியுமா என்பதை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும். நாம் இதுபற்றி விசாரிக்கின்றபோது என்ன சொல்கிறார்கள் என்றால் மூன்று முறை, நான்கு முறை இந்த நெல்லை ஊற வைக்கின்ற காரணத்தால்தான் இந்த அரிசி இவ்வளவு மோசமாக இருக்கிறது, இல்லையென்றால் நல்ல தரமான அரிசியை வழங்க இயலும் என்று பலரும் சொல்கிறார்கள். அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல காவல் துறை. கள்ளச் சாராயச் சாவுகள் தமிழகத்திலே இப்போது பெருகி வருகின்றன. அரசாங்கம் அறிவிப்புச் செய்திருக்கிறது. யார் கள்ளச் சாராயம் காய்ச்சினாலும் சம்பந்தப்பட்ட தொலைபேசிக்குத்

தொடர்பு கொண்டு அவர்களைப்பற்றிய குறிப்பு சொன்னால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆயிஷா என்ற ஒரு தீவிரவாதி இருக்கிறார்; அந்தத் தீவிரவாதியைப் பிடிப்பதற்கு அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளுங்கள் என்று சொன்னால் அதிலே பொருள் இருக்கிறது. ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைக் காவல் துறைக்குச் சொல்லித் தாருங்கள் என்று சொன்னால் இது காவல் துறைக்குத் தெரியாமல் நடக்கிறதா? அல்லது ஆயிஷாவைப் போல, கள்ளச் சாராயம் விற்பவர்களும், காய்ச்சுபவர்களும் மறைந்து வாழ்கிறார்களா? நிச்சயமாக இல்லை. எனவே இதிலே அரசாங்கம் தன்னுடைய நிலையிலிருந்து மாற வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுத்தால் கள்ளச் சாராயத்தை ஒழிக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல தொழில் வளர்ச்சி பற்றி ஆளுநர் சொல்லி இருக்கிறார். தொழில் வளர்ச்சியிலே தமிழகம் இப்போது இரண்டாவது இடத்திலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. உண்மையிலேயே புதிய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சியிலே மிகப்பெரிய ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். ஆயினும்கூட ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒருபுறம் நாம் புதிய தொழில்களைக் கொண்டு வருகிறோம். ஆனால் மறுபுறம் நம்முடைய பாரம்பரியத் தொழில்கள் நசுக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே உற்பத்தியாகின்ற நூலில் 50 சதவிகிதம் தமிழகத்திலேதான் உற்பத்தியாகிறது. ஆனால் இப்போது 25 சதவிகித நூற்பாலைகள் மூடிக்கிடக்கின்றன. மீதமுள்ள 25 சதவிகித நூற்பாலைகளில் பாதிதான் வேலை செய்கின்றன. எனவே நம்மிடமுள்ள பாரம்பரியத் தொழிலை நாம் கைவிட்டுவிட்டு புதிய தொழில்களை நிறைய கொண்டுவருகிறோம் என்று சொன்னால் அது தொழில் வளர்ச்சியினுடைய இலக்கை எய்துவதற்குச் சமமாக இருக்காது என்பதனை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல மின்சாரத் திட்டம். 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்த அவையில் நான் கேட்டு வருகிறேன். ஒவ்வொரு முறையும், ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, வரவு-செலவுத் திட்டமாக இருந்தாலும் சரி, 2000 மெகாவாட், 3000 மெகாவாட், 5000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லப்படுகிறதேயொழிய, இதுவரை



200 மெகாவாட் மின்சாரம்கூட 1991 ஆம் ஆண்டிலேயிருந்து நாம் உற்பத்தி செய்யவில்லை. மின்சார உற்பத்தி இல்லாமல்..... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, 1996 ஆம் ஆண்டிற்கு பிறகு, G.M.R. Vasavi என்ற நிறுவனத்திற்கு 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு, கடந்த ஆண்டு அதாவது 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அவர்கள் 200 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து நம்முடைய grid-க்கு இணைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்தியாவிலேயே இரண்டு ஆண்டுகாலத்திலே ஒரு Thermal Station உருவாக்கப்பட்டது தமிழகத்திலேதான் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அந்த வாசவி மின் உற்பத்தித் திட்டத்தைத் தவிர, வேறு திட்டங்கள் எதுவுமே நாம் அறிவித்தவற்றில் செயல்படுத்தவில்லை. நாப்தாவிலிருந்து 20 யூனிட் போடுவதாக நாம் அறிவித்தோம், 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்திச் செய்வதற்காக. ஆனால், அந்தத் திட்டம் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. அதேபோல், ஜெயங்கொண்டத்திலே ஆரம்பிக்க ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. அதுவும் 1991 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப்' போல, நம்முடைய தொழில் வளர்ச்சி இருக்கக்கூடாது. தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால், தடையில்லாத மின்சாரம் கிடைக்க வேண்டும். தடையில்லாத மின்சாரம் கிடைக்கும் என்கின்ற ஒரு நிலை ஏற்பட்டால்தான், வெளிநாட்டிலேயிருந்து வருகிறவர்கள், தொழில் வளர்ச்சிக்கு இங்கே முதலீடு செய்வார்களேயொழிய, வெறும் வெற்று அறிவிப்புகள் தொழில் முதலீடு செய்கிறவர்களைக் கவராது என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கம் தன்னுடைய Agenda-விலே, மின்சார உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறது. ஆனால்,

நிச்சயமாக, கடந்த ஆட்சியிலும் சரி, இந்த ஆட்சியிலும் சரி, மின் உற்பத்திக்கு மிக முக்கியமான முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதனை அழுத்தமாக நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல், குடிநீர்த் திட்டங்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், கிராமப்புற குடிநீர்த் திட்டங்கள் மிகமிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நகர்ப்புறங்களில் ஓரளவுக்குக் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. கிராமப்புறங்கள் முழுமையாக ஒருகாலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது கிராமப்புறக் குடிநீர்த் திட்டம் என்பது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு, பாராட்டுகிற அளவுக்கு இருக்கிறது. எனவே அதற்காக அந்தத் துறையைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நபார்டு திட்டம். நபார்டு திட்டத்தின் மூலமாக, 1995-96-இல் அன்றைக்கு இருந்த மாநில அரசாங்கம், அந்தத் தொகையைப் பெற்று கிராமப்புறச் சாலைகளைச் செம்மைபபடுத்தவில்லை. ஆனால், அதற்குப் பிறகு வந்த புதிய அரசாங்கம், முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இருக்கிற அரசாங்கம், 1995-96, 1996-97 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குமான தொகையினை, அன்றைக்கு நிதியமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் மூலமாக அந்தத் தொகையினைப் பெற்று, தமிழகத்திலே அற்புதமான சாலைகளை அமைத்தது. நம்முடைய நாபார்டு சாலைகள், அதுவும் குறிப்பாக Paver Machine வைத்து போடப்பட்ட சாலைகள் உலகத் தரம் மிகுந்த சாலைகளாக இருந்தன. அதனால், நாம் மிகுந்த பாராட்டைப் பெற்றோம். ஆனால், 1997-98-க்கான நபார்டு திட்டம் மூலமாக எந்தச் சாலையுமே இதுவரையில் போடப்படவில்லை. நம்முடைய பரிந்துரைகள் டெல்லியிலேயே இருக்கின்றன. 1997-98 ஆம் ஆண்டிற்கான நபார்டு திட்டம் ஏன் தமிழகத்திற்கு வரவில்லை? எதனால் சாலைகள் போடப்படவில்லை?....

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கும் நபார்டிலிருந்து நாம் நிதியுதவி பெற்றிருக்கிறோம். அந்தச் சாலைகளும் போடப்பட்டிருக்கின்றன. 1998-99-க்கும் நிதியுதவி பெற்றிருக்கிறோம்.



அந்தச் சாலைகளுக்கும் இப்போது Tender விடப்பட்டிருக்கின்றன. எனவே, நபார்டிலிருந்து நமக்கு ஏராளமான நிதியுதவி கிடைக்கிறது. நபார்டும் தமிழக அரசு போடுகிற சாலைகள் தரமான சாலைகளாக இருக்கின்றன என்ற பாராட்டையும் தெரிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலைகள் தரமாக இருக்கின்றன என்று நானே சொல்லியிருக்கிறேன். நபார்டு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 1997-98-க்காக அனுப்பப்பட்ட நபார்டு திட்டத்திற்கான சாலைகளுக்கான அந்த இலக்குகள் நபார்டு வங்கியிலேயே இருக்கின்றனவேயொழிய, இன்னும் நமக்கு வந்துசேரவில்லை. நாம் இப்போது போட்டுக் கொண்டிருப்பது பழைய சாலைகளை.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது தவறான செய்தி. 1997-98-க்கும் பணம் வந்திருக்கிறது — 1998-99-க்கும் — அதாவது, உறுப்பினர் சொல்வது ஒரு Technical point. சாலைகள் போட்ட பிறகு, முடிந்த பிறகு, பணத்தையெல்லாம் நாம் Contractor-களுக்குச் செலுத்திய பிறகு, reimbursement செய்ய வேண்டும். அந்த reimbursement செய்வதில் கொஞ்சம் backlog இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், அவர்கள் நிறைய formalities observe செய்கிறார்கள். அந்த formalities காரணமாக நாம் reimbursement செய்வதில் கொஞ்சம் delay இருக்கிறதே தவிர, work முடிந்திருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வது சரியாக இருக்கலாம். ஆனால், எனக்குத் தெரிவிக்கப்பட்ட செய்தி, நான் அறிந்திருக்கிற செய்தி, 1995-96, 1996-97 ஆகிய இரண்டாண்டுகளுக்காக அனுமதிக்கப்பட்ட சாலைகள் மட்டுமே போடப்பட்டு வருகின்றன. 1997-98-க்காக அனுப்பப்பட்ட சாலைகளுக்கு இன்னும் ஒப்புதல் பெறப்படவில்லை. பாலங்கள் மட்டுமே ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் முதலமைச்சர் அதைத் துவக்கி வைத்திருக்கிறார். சாலைகளையும் நீங்கள் அவ்வாறே ஒப்புதல் பெற்று போட்டுத் தரவேண்டுமென்று சொல்கிறேனே தவிர, வேறு குற்றச்சாட்டு இல்லை.

பிற்பகல் 12-30

அடுத்ததாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், நமக்கு நாமே திட்டமும் மிக அற்புதமான திட்டங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஓரளவிற்காவது பொது மக்கள் மத்தியிலே தலைநிமிர்ந்து இன்றைக்கு நடக்க முடிகிறது என்று சொன்னால் அது இந்த இரண்டு திட்டங்களாலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த இரண்டு திட்டங்களையும் மேலும் செழுமைப்படுத்துவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும். இந்தத் திட்டங்களை விரைந்து செயலாற்ற முடியவில்லை. ஏனென்றால் ஒரு சிவப்பு நாடா முறை இருக்கிறது. பெரிய அளவிலே ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டால், அதற்கான இடம் கிடைப்பதில்லை. வருவாய்த் துறை அதிகாரிகள் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுத் தருவதற்கு முழு ஒத்துழைப்பினைத் தருவதில்லை அல்லது பொதுப்பணித் துறை அதிகாரிகள் முழு ஒத்துழைப்பைத் தருவதில்லை. எனவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காகவும், நமக்கு நாமே திட்டத்திற்காகவும், ஆய்வு மாதிரி செய்து, அந்த இரண்டு திட்டங்களையும் மேலும் செழுமைப்படுத்திட முதலமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும். இந்த இரண்டு திட்டங்களையும் முதலமைச்சருடைய "Brian Child" —செல்லக் குழந்தை—என்று கூடச் சொல்லலாம். எனவே, அந்த வகையில் அந்தத் திட்டங்களுக்கு மேலும் முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கான நிதியைக் கூட அதிகமாக ஒதுக்கலாம். இதற்கு ஒரு கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் வரவில்லை. 17 இலட்சம் ரூபாய், 18 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே பெறுவதற்கே நான் 17 அல்லது 18 முறை மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வேண்டி இருக்கிறது. இந்த ஒரு கோடி ரூபாய் என்பது எல்லோருக்கும் வழங்கப்படுகிறதா, அல்லது ஒரு சிலருக்குத்தான் வழங்கப்படுகிறதா, அதிலே ஏதாவது சமச்சீர் இருக்கிறதா, இதிலே கொஞ்சம் சமூக நீதியை முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு திட்டங்களைப் பொறுத்தவரையில் தொகை எதுவும் அறிவிக்கப்படவில்லை. பணிகளைத்தான் அறிவித்திருக்கிறார்கள். அடிப்படை வசதிகள் எந்தெந்தக்



கிராமங்களுக்குத் தேவையோ, அவற்றிற்கு முன்னுரிமை தந்து, அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ஒரு கோடி ரூபாய் என்றோ அல்லது 50 இலட்சம் ரூபாய் என்றோ இல்லை. ஒரு கோடியைத் தாண்டிக் கூடச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடிக்கு உள்ளேயும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்கொள்கிற கிராமங்களுடைய பணிகளைப் பொறுத்துத்தான் அதனுடைய திட்டம் இருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.44 இலட்சம் என்ற அளவிலேதான் பணிகளை முடிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். எனவே, மக்களுடைய அடிப்படைத் தேவைகள் குறிப்பிட்ட கிராமத்திலே அதிகமாக இருக்கும்போது, அமைச்சர் சொல்கிற மாதிரி அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அதைச் செய்வதில்லை. சில இடங்களில் பலவகையான அடிப்படைத் தேவைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், அவற்றை எடுக்கமாட்டேன் என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டங்களைப் பொறுத்தவரையில், சட்டமன்றத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் பேரிலேதான் அங்கே பல இடங்களில் செயல்படுத்தப்படுகின்றன. விருதுநகர் மாவட்டத்திலேயே உறுப்பினர் தொகுதியில் காயல்பட்டியில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். எடுத்துக்கொள்ளப்படுகிற பணிகள் பஞ்சாயத்தில் இருக்கிற அடிப்படைப் பணிகளைப் பொறுத்துத்தானே தவிர, திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டை வரம்பு செய்வதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.......

[1999 பிப்ரவரி 18

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நிறையப் பேர் பேச வேண்டும். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள். இப்போது உட்காருங்கள். திரு. அழகிரி அவர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு சின்ன விளக்கத்தைப் பெற விரும்புகிறேன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இதில் பேசும்போது உங்களுடைய கருத்தைச் சொல்லலாம். இப்போது உட்காருங்கள். திரு. அழகிரி நீங்கள் பேசலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள்தான் திட்டத்தை ஆய்வு செய்து ஒரு கோடி ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள். ஆனால் என் தொகுதியிலே மகாராஜபுரம் பெரிய கிராமம். ரூ.44 இலட்சம் அளவிலேதான் செய்வோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை கூறி மக்களின் அடிப்படைத் தேவைகள் பூராவையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டங்களில் பெரும்பாலும் குடிநீர்த் திட்டங்களாக இருக்குமேயானால், குடிநீர் வாரியமே அதனை மேற்கொண்டு செய்வது என்று முடிவு எடுத்து, அந்தத் திட்டங்கள் தனியாகச் செயல்பட்டு வருகின்றன. காரணம் சில கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பயன்படுத்தும் நிலை வருகிறது. அதற்குக் காரணம் சில கிராமங்களில் தனியாகச் செயல்படுத்தப்படுகிறது. மேலும் சில கிராமங்களில் புனரமைப்புத் திட்டமாக வருகிறது. எனவேதான், இந்தத் திட்டத்தில் அதை எடுத்துக்கொள்ளாமல், தனியாக ரூ.35 இலட்சத்திற்கும் குறையாமலே குடிநீர்த் திட்டங்கள் இதுவரை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலும், சமத்துவபுரத்திலேயும் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, அதை ஒருகால் உறுப்பினர் நீக்கிவிட்டாரா, அதுபற்றித் தெரியுமா என்பது எனக்குப் புரியவில்லை.



எனவே, அவர் பேசுகின்றபோது அதையெல்லாம் விவரமாகத் தெரிவித்தால் அதற்குத் தனியாக பதிலுரையில் தெரிவிக்கப்படும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது உண்மையிலேயே ஓர் அற்புதமான திட்டம். அந்தத் திட்டம் முழுமை அடைய வேண்டும் என்பதற்காக ஒரு விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி ஒதுக்கீட்டு முறை என்பது 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலே நபர்வாரி நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுகிறது. அதை தற்போதைய மக்கள்தொகையினுடைய கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தாலே, அந்தத் திட்டம் இன்னும் ஒளிவிட்டு முழுமை அடையும் என்பதால், அத்தகைய நிலையை இந்த பட்ஜெட் ஆண்டில் மதிப்பீடு செய்ய அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின் மூலம் ஒன்றை நான் புரிந்து கொண்டேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அதிருஷ்டக்காரர் என்பது எனக்குத் தெரிந்திருக்கிறது. ஏனென்றால், அவருக்காவது 44 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. எனக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே 19 இலட்சம் ரூபாய்தான் கிடைத்திருக்கிறது. நான் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்குத் திட்டங்கள் கொடுத்திருந்தேன். திட்டங்கள் கொடுத்திருந்தும்கூட, 19 இலட்சம் ரூபாய் தான் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதனை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்ததாக, நீதிபதி இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழுவினுடைய பரிந்துரைகளை, தமிழக அரசாங்கம் பெற்றிருக்கிறது. இது ஒரு நல்ல முயற்சி. பொது வாழ்க்கையிலே, ஊழல் குறைய வேண்டும், நேர்மை மிளிர வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு இது. ஆனால், இப்போது பொதுமக்களிடத்திலே இந்தச் செயல்பாடுகளுக்கெல்லாம் பிரதிபலன் கிடைத்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. பொதுமக்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், ஒரு பகட்டான அரசியல் தலைவர் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொள்ளையடித்து இருந்தாலும்கூட, அவர்களுக்கு அது

ஒரு செய்தியாகத்தான் படுகிறது. ஆனால், மாறாக அந்தச் சாதாரண மக்கள் என்ன கருதுகிறார்கள்? தான் ஒரு சாதிச் சான்றிதழ் பெறுகிறபொழுதோ, அல்லது ஒரு முதியோர் உதவித் தொகை பெறுவதற்காக வட்டாட்சியர் அலுவலகம் செல்கிறபொழுதோ, தங்களிடம் 25 ரூபாய், 50 ரூபாய் என்று யாரும் லஞ்சம் கேட்காத நிலை இருந்தால்தான் லஞ்சம் இல்லாத ஓர் அரசாங்கம் இது என்கின்ற ஓர் உணர்வு அவர்களுக்கு ஏற்படும். அதுதான் உண்மையும்கூட. இன்றைக்கு அந்த நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். உயர்மட்டத்திலே ஊழல் ஒழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கீழ் நிலையிலே அது இயலவில்லை. அது சிரமம் என்பதை நான் உணர்கிறேன். இருந்தாலும்கூட, அரசாங்கம் சில புதிய நடைமுறைகளைக் கண்டுபிடித்து, முதியோர் உதவித்தொகை பெறும் திட்டமாக இருந்தாலும், இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்தொகைத் திட்டமாக இருந்தாலும், சாதிச் சான்றிதழ் பெறுவதாக இருந்தாலும், சாதாரணக் குடிமகன் அதற்கு ஒரு ரூபாய்கூட லஞ்சம் கொடுக்காமல் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான், திறமையான, சிறப்பான ஆட்சியை நாம் நடத்துவதாக மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். எனவே, அதற்கான நடைமுறைகளை முதலமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றைக் கூறுகிறேன். இப்போது நடைபெறுகின்ற அரசியல் நிகழ்வுகளையெல்லாம் பார்க்கிறபொழுது, இந்த அமைப்பின்மீதே நாம் நம்பிக்கையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. மிகப் பெரிய அளவில் ஊழல் செய்தவர்கள், அந்த ஊழலைப் பற்றி விசாரிக்கலாமா, எந்த நீதிமன்றத்தில் விசாரிக்கலாம், எப்போது விசாரிக்கலாம் என்பதற்கே 2½ ஆண்டு காலம், 3 ஆண்டு காலம் எடுத்துக்கொள்கிறார்கள். இந்தியாவினுடைய நீதித் துறை அப்படித்தான் இருக்கிறது. ஒரு விசாரணையை எடுத்துக்கொள்ளலாமா என்பதற்கே 3 ஆணடுகள் என்றால் விசாரித்து, அதன் பிறகு தண்டனை வழங்குவது எப்போது என்கின்ற ஒரு கேள்வி இளைஞர்கள் மத்தியிலே எழுகின்றபோது, இந்த அமைப்பின் மீதான நம்பிக்கை அவர்களுக்குச் சிதைந்து போகிறது என்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, நாம் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். அப்படி ஒரு முடிவு கட்டவில்லை என்றால், இளைஞர்கள், தீவிரவாதிகளாக ஆவதும் ஜனநாயகம் சர்வாதிகாரமாக மாறுவதும் அசைக்க முடியாத, தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாக ஆகிவிடும்



என்பதனை மட்டும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு நாம் பார்த்தோம்: நீதி தவறி தீர்ப்பு வழங்கியதற்காக நெடுஞ்செழியப் பாண்டியன் உயிர் நீத்தான் என்று இதிகாசங்கள் கூறுகின்றன. ஆனால் இன்றைக்கு, நீதி வழங்க இயலவில்லையே என்பதற்காக நீதி தேவதை தற்கொலை செய்துகொள்வாளோ என்கிற ஓர் ஐயப்பாடு எழுகிற அளவிற்கு இன்றைக்கு இந்தியாவினுடைய நீதித் துறை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதிலே இளைஞர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த நாம் முயல வேண்டும். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், ஆளுநர் உரையிலே ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக அதிகமான தொகை வழங்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆளுநர் உரையிலும் அதே வரிகள் இருக்கின்றன. நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக அதிகமாக நிதி ஒதுக்கி, அதன் மூலமாக தனி நபர் வளர்ச்சி விகிதாச்சாரம் எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதனை இந்த அவைக்கு ஒரு வெள்ளை அறிக்கையாக அளிக்க முடியுமா என்று நான் அரசாங்கத்தைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், ஒரேயொரு பிரச்சினை. உதகையிலே உள்ள நீதிமன்ற வளாகத்தை மாற்றுவதைப்பற்றி அங்கே அர்த்தால் நடைபெறுகிறது, மறியல் நடைபெறுகிறது. எனவே, அரசாங்கம் அதிலே கவனம் செலுத்தி, இருக்கிற இடத்திலேயே அந்த நீதிமன்ற வளாகத்தை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து.....

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, உதகையில் நீதிமன்றத்தை எங்கு கட்டுவது என்று தீர்மானித்திருப்பது உயர் நீதிமன்றமாகும். முதலில் ஓர் இடத்தைக் காண்பித்தார்கள். அந்த இடத்திலே கட்டக் கூடாது என்று வழக்கறிஞர்கள் அதற்காகப் போராட்டம் நடத்தினார்கள். பிறகு உயர் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளே அங்கே சென்று, இருக்கிற இடத்திலேயே கட்டுவதா, அல்லது புதிய இடத்தில் கட்டுவதா என்று பார்த்துவிட்டு வந்து, புதிய இடத்தில்தான் கட்ட வேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில்தான் அரசு அங்கே கட்[illegible] அந்த

220160

இடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். ஊரிலிருந்து வெகுதூரம் இல்லை. தற்போது இருக்கிற இடம் 1110 சதுர மீட்டர்தான். மூன்று அடுக்கு இருக்கிறது. புதிய இடம் 11000 சதுர மீட்டர் ஆகும். எல்லோருக்குமாகச் சேர்த்து, குடியிருப்புகள்கூட சேர்த்துக் கட்டக்கூடிய இடம் இருக்கிறது. ஆகையால் இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்று கேட்டால், பெரும்பாலான வக்கீல்கள் என்னைச் சந்தித்தார்கள். அங்கே போவதிலே ஆட்சேபணை இல்லையென்றுதான் தெரிவிக்கிறார்கள். ஆனால் இதிலே யாரோ சிலர்தான் மாற்றுக் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இது அரசால் ஏற்பட்டது அல்ல. உயர் நீதிமன்றத்தினுடைய ஆணைப்படிதான் அரசு அங்கே கட்டிக் கொண்டிருக்கிறதே தவிர, இது அரசாங்கம் எடுத்த முடிவு அல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றமே அப்படி ஒரு முடிவு எடுத்திருந்தாலும்கூட, மாநில அரசாங்கம் மாற்றுக் கருத்தைச் சொன்னால் உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். எனவே, அரசாங்கத்தினுடைய கருத்து என்ன என்பதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்பினேன். அதற்குத் தந்த விளக்கம் போதுமானது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அரசாங்கத்தினுடைய கருத்து அங்கே ஒரு நீதிமன்ற வளாகம் கட்டப்பட வேண்டுமென்பதுதான். இருக்கிற இடத்திலே இடம் போதவில்லை. நான் ஏற்கெனவே சொன்னேனே 1110 சதுர மீட்டர்தான் இடம் இருக்கிறது என்று. அந்த இடத்திலே வண்டிகள் நிற்பதற்கும், கட்சிக்காரர்கள் வருவதற்கும் இடம் சரியில்லை. அதனால்தான் மிகப் பரந்த ஓர் இடத்தில் அந்த வளாகத்திற்குள்ளேயே நீதிபதிகளுடைய குடியிருப்புகள் மற்றும் அவர்கள் வந்து போகிற இடங்கள், கட்சிக்காரர்கள் அங்கு போனால் தங்குவதற்கு வேண்டிய இடங்கள், சிற்றுண்டிச்சாலை, இவ்வளவையும் அமைத்து 11,000 சதுர மீட்டரிலே இரண்டு அடுக்கு மாளிகை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்து வருகிறது. எனவே இதிலே அரசைப் பொறுத்தவரையில் — நீதிமன்ற வளாகத்தைக் கட்டித் தரவேண்டுமென்பது. அவர்களுக்கு ஏற்பட்ட அந்த மனமாச்சரியங்களைக் களைந்து — உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற நீதிபதிகளே சென்று பார்வையிட்டு அவர்கள் சொன்ன அறிவுரைகளின் அடிப்படையில்தான் புதிய இடத்திலே நீதிமன்றம் கட்டுவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)



**திரு. ச. அழகிரி:** சில நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். துணைத் தலைவர் அவர்களே, இப்போது நீதிமன்றம் போகின்ற இடம் காக்காய்த்தோப்பு என்று சொன்னார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்திலே ஏராளமான காக்காய்கள் இருக்கின்றபோது (சிரிப்பு) நீங்கள் இதைக் காக்காய்த்தோப்பிற்கு மாற்றாமல் வேறு இடத்திற்கு மாற்றினால் நன்றாக இருக்குமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் அடிக்கடி குறுக்கிட விரும்பவில்லை. காரணம் அந்த நீதிமன்றத்தினுடைய ஒரு பக்கத்திலே பாலிடெக்னிக் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே தொழிற்சாலை இருக்கிறது. காக்காய் இருக்கிறது என்பதற்காக அங்கே போகமாட்டேன் என்று சொல்லமுடியாது. பெரும்பாலும் வக்கீல்களுடைய கவுன்களைப் பார்த்தால் கறுப்புக் காக்காய்கள் ஓடிவிடும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 98 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தியாகும் என்று ஆளுநர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது ஒரு மாபெரும் சாதனை. தமிழக விவசாயிகளுடைய இரத்தத்தை வியர்வையாக்கி இந்த உணவு உற்பத்தியை இங்கே நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இதிலே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு Minimum Price-ஐ நாம் தருகிறோம். நெல்லுக்கு 440 ரூபாயும், ரூ.50 போனஸ் என்றும் கொடுத்து, மொத்தத்திலே ரூ.490 ஒரு குவிண்டாலுக்கு நாம் கொடுக்கிறோம். ஆனால் கோதுமைக்கு ரூ. 540 மற்றும் சென்ட்ரல் போனஸ் கொடுக்கிறோம். எனவே, நெல்லுக்கும், கோதுமைக்குமிடையே ஒரு குவிண்டாலுக்கு ரூ.100-க்கு மேல் வித்தியாசம் வருகிறது. நான் முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். கோதுமை உற்பத்தி செய்ய நெல்லைவிட அதிகம் செலவாகிறதா? நெல்லுக்கு என்ன செலவாகிறதோ அதே அளவிற்குத்தான் கோதுமைக்கும் செலவு ஏற்படுகிறது. ஆனால் அடிப்படை விலை நிர்ணயத்திலே, போனஸ் கொடுப்பதிலே இந்த இரட்டை முறை இருப்பது ஏன்? அதற்கு எதிராகத் தமிழக அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்று கேட்டு, கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.1000 கொடுக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று மேதகு ஆளுநர் அவர்களால் இந்த மாமன்றத்திலே ஆற்றப்பட்ட உரைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கதிரவன் உதிக்கின்ற காலை வேளையில் வண்ண மலர்த் தோட்டத்திற்குள் நுழைந்தால் எப்படி மனதிற்கு ஒரு ரம்மியமான உணர்வு ஏற்படுகிறதோ, அப்படித்தான் கவர்னர் உரையைப் படிக்கின்றபோது ஓர் இதமான உணர்வு ஒவ்வொரு மனதுக்கும் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

கவர்னர் உரையினுடைய ஒவ்வொரு பகுதியும் தமிழக மக்களுடைய நல்வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். 20 ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருக்கின்ற நாம், 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு நல்ல பல திட்டங்களை அமல்படுத்துகின்ற முகத்தான் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த ஆளுநர் உரையின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1999 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிப்பதோடு மக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் உயரும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக நான்காவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பு ஏற்று கடந்த 2 ½ ஆண்டு காலத்திலே தமிழ்கத்திற்குப் பொற்கால ஆட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் தமிழகத்தின் ஒவ்வொரு தரப்பு மக்களுடைய வாழ்க்கையும் மேன்மேலும் உயரும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த உரையில் மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து மாநில அரசின் பொறுப்புகள் கூடியுள்ள இந்தக் காலகட்டத்தில் நிதியாதாரங்களை மாநில அரசுக்கு மாற்றுவது அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அழகிரி அவர்கள் இங்கே பேசுகின்றபோது அதைத்தான் குறிப்பிட்டார்கள். பல்வேறு பொருட்களின் விலையை மத்திய அரசு உயர்த்தியதன்



காரணமாக 160 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு நிதிச் சுமை ஏற்பட்டிருக்கிறதே இதை எப்படி முதல்வர் அவர்கள் சமாளிக்கப் போகிறார்கள் என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அடித்தள மக்களோடு ஒன்றி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவர்களுக்கு அந்தச் சூழ்நிலை புரியும். எனவேதான் அந்த நிதியாதாரங்களைப் பெருக்குகின்ற வகையில் மாநில அரசுக்குக் கூடுதலாக ஒதுக்கித்தர வேண்டும் என்கிற செய்தியைக்கூட இன்று வெளியிட்டிருக்கிற 'தினமணி' தலையங்கத்தில் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். ஆளுநர் உரை சொல்லும் செய்தி என்று குறிப்பிட்டு அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "கூடுதல் வரி விதிப்புக்கு வழி இல்லாத நிலையில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியாதாரங்களை மாநில அரசுக்கு மாற்ற முனைப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று 'தினமணி' பத்திரிகையும் தன்னுடைய தலையங்கத்திலே சுட்டிக்காட்டி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். 21 ஆம் நூற்றாண்டினை நோக்கித் தமிழர்களை அழைத்துச் செல்கின்ற தமிழக முதல்வர் அவர்கள் தமிழ் மொழிக்கும் அதனுடைய பெருக்கத்திற்கும் தமிழை உலக மொழியாக ஆக்குவதற்கும் சிறந்த, முனைப்பான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏட்டுச் சுவடியாக இருந்த தமிழை Internet தமிழாக முதல்வர் அவர்கள் இப்போது மாற்றிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்திலே சென்னையில் தமிழ் இணையக் கருத்தரங்கம், சர்வதேசக் கருத்தரங்கம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. அந்த சர்வதேச தமிழ் இணையத்தினுடைய கருத்தரங்கத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது, தமிழினுடைய எதிர்காலம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும், மாறி வருகின்ற உலகத்தினுடைய சூழ்நிலைகளுக்கேற்ப தமிழும் வளர வேண்டும், தமிழ் மக்களும் வளம்பெற வேண்டும் என்ற அடிப்படையில் அந்த சர்வதேச கருத்தரங்கிலே உரையாற்றி அமர்ந்திருக்கிறார்கள். அங்கே உரையாற்றுகின்றபோது தொடக்க உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "இங்கே வந்திருக்கின்ற தமிழ் அறிஞர்களே, தமிழைத் தூங்கவிடக் கூடாது; அந்த அடிப்படையில் உங்களை அழைத்திருக்கிறேன்" என்று அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். "மின்னல் வேகத்திலே தகவல்

புரட்சி இப்போது உலகம் முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது. நம் தமிழ் மொழியும் அதற்கு ஈடு கொடுக்க வேண்டும். பின் தங்கிவிடக் கூடாது என்ற முறையிலே உங்களை அழைத்திருக்கிறேன்" என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "கணிப்பொறியும், Internet நமக்குத் தோழன், தொண்டன், அறிவு புகட்டும் ஆசான். எனவே இதனுடைய வளர்ச்சிதான் எதிர்கால தமிழ் மக்களுடைய வளர்ச்சி என்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அருள்கூர்ந்து நல்ல முடிவை எடுங்கள், நல்ல அறிவுரையைக் கொடுங்கள்" என்று குறிப்பிட்டுவிட்டு அங்கே ஒரு கவிதையைச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு, ஆர்வத்தோடு அவர்கள் மனதிலே இந்தத் தமிழை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது என்பதை அந்தக் கவிதை எடுத்துக்காட்டியிருக்கிறது.

'நான் தமிழன்
எனது நாடு தமிழ் நாடு
எனது மொழி தமிழ் மொழி
தமிழ் மொழியால் எல்லாம் என் உறவினர்
என் சமூகம் தமிழ்ச் சமூகம்
என் சாதி தமிழ்ச் சாதி
தமிழ் நலமே என் மதம்
என் கடமை தமிழ்நாட்டு ஊழியம்
என் தெய்வம் தமிழ் அணங்கு
என் மந்திரம் தமிழ்
என் தோத்திரம் தமிழ்
என் தாய் வாழ்த்து தமிழ்'

என்று சுத்தானந்த பாரதியார் அவர்கள் பாடிய ஒரு கவிதையை மேற்கோள் காட்டித் தமிழை வளர்ப்பதற்குரிய நல்ல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். இலண்டன் (இங்கிலாந்து), அமெரிக்கா, மலேசியா, மொரீஷியஸ் தீவு போன்ற நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்களும், விசைப் பலகை அறிந்த அறிஞர்களும் வந்திருந்து அதிலே நல்ல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்த மாநாட்டிலே இறுதியிலே உரையாற்றுகின்றபொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ் வளர்வதற்காக, வருகின்ற ஆண்டில் உலகத் தமிழ் இணையத்தை அமைக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக 5 கோடி ரூபாய் நிதியொதுக்கம் செய்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.



எனவே, 21 ஆம் நூற்றாண்டிலே வாழ்கின்ற தமிழர்கள் அத்தனைபேரும் மாண்புமிகு முதல்வர் அவர்களை நெஞ்சார வாழ்த்துவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து, ஆளுநர் உரையிலே மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது தொழில் முதலீட்டில் இந்தியாவில் 5-வது இடத்திலிருந்த தமிழகம் தற்போது இந்தியாவில் இரண்டாவது நிலையை எட்டியிருக்கிறது என்பது. கடந்த 32 மாதங்களில் மட்டும் 48,497 கோடி ரூபாய்க்கு, அகில உலகத்திலே இருக்கின்ற தொழில் வல்லுநர்களும், இந்தியாவிலே இருக்கின்ற தொழில் வல்லுநர்களும் நம்முடைய தமிழகத்திலே முதலீடு செய்திருக்கின்றார்கள். அதன் மூலமாகப், பல இடங்களிலே பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகியிருக்கிறது. அதன்மூலம் தொடர்ந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருகி இருக்கிறது. எனவே, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி விவசாயத்தையும், தொழில் துறையையும் நம்பிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் விவசாயத் துறைக்கும் தொழில் துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை வளர்த்து முன்னேற்றுகின்ற பாதையிலே கலைஞர் அவர்கள் அடியெடுத்து வைத்து மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அதைத் தமிழக இளைஞர்களும், விவசாயிகளும், தமிழக மக்களும் பெரிதும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய அரசு எந்தச் சூழ்நிலையில் விலைவாசிகளை உயர்த்தி இருக்கிறது என்று தெரியவில்லை. இந்தியா முழுமைக்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை இப்போது உயர்த்தி அறிவித்திருக்கின்றது. மகளிர் அன்றாடம் உபயோகப்படுத்தக்கூடிய Gas, அரிசி, கோதுமை ஆகியவற்றின் விலைகளை உயர்த்தியிருக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. ஆனாலும், மத்திய அரசிலே பங்கேற்றிருப்பவர்கள் டில்லியிலே இதனை ஆதரித்துக் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டு, தமிழகத்திலே வேறு மாதிரியான நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். They are playing a double role. அவர்கள் நாடகம் ஆடுகிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனாலும்கூட, எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும்கூட, இந்த விலைவாசி உயர்வினால் ஏற்படக்கூடிய 160

கோடி ரூபாய் வரிச் சுமையை நம்முடைய தமிழ் மக்கள் மீது திணிக்கமாட்டேன் என்று சபதம் எடுத்து இந்தியாவிலேயே முதன்முதலில் அறிவித்த முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்பதையும் அதைக் கடைப்பிடிக்கக்கூடிய ஒரேயொரு மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய நலன்களை மேம்பாடு செய்வதற்காக ஓர் அருமையான திட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். 10,000 எக்டேர் பரப்பளவு தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த 10,000 எக்டேர் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அமல்நடத்தப்படுமானால், கிராமங்களிலே இருக்கின்ற பல தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்படும். அதன் மூலமாகப் பல விவசாய இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறுவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, தமிழ் மொழியை மத்தியிலே ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலையை மத்திய அரசு காலதாமதப்படுத்தினாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் திசையை நோக்கித் தொடர்ந்து வலியுறுத்துவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு திருச்சியிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநில மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக உடனே ஆக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். அந்தத் தீர்மானத்தை, நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குழுத் தலைவராக இருந்த அன்பிற்குரிய அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் வலியுறுத்திப் பேசியபோது, அந்த மாநாட்டிலே திரண்டிருந்த இலட்சோபலட்சம் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் கையை உயர்த்தி வலியுறுத்தி ஆதரித்தார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படையில் அதை நடைமுறைப்படுத்துவதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னேறி வருகிறார்கள். மத்திய அரசு விரைவிலே தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும். அதற்குரிய முனைப்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). எனவே, பல திட்டங்களை உள்ளடக்கியது இந்த ஆளுநர் உரை. அதனை நான் வரவேற்கின்றேன்.



பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும்கூட, இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி இரண்டொரு வரிகளைச் சொல்லி என் பேச்சை முடித்துவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே புறவழிச்சாலை ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் வேண்டுகோளை வைத்திருக்கின்றேன். அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான விருத்தாசலத்திலே பெண்கள் கல்லூரி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் பெண்கள் தொழில்நுட்பப் பயிலகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்திலே அமைந்துள்ள கல்லூரியில் M.C.A. படிப்பு - Computer படிப்பு - தொடங்குவதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

விருத்தாசலத்தில் தங்களால் 1990 ஆம் ஆண்டு கற்குழாய் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது. அது நல்ல இலாபத்திலே இயங்கி வருகின்றது. அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு இங்கே இந்த மன்றத்திலே கடந்த இரண்டு ஆண்டு காலமாகப் பேசி உங்களிடம் நான் கோரிக்கை வைத்துள்ளேன். அங்கே சிமெண்ட் சாக்குப் பைகள் தயாரிக்கும் தொழிற்சாலை Project Report அளவிலே வந்து TANCEM நிறுவனத்தாலே இரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, இலாபத்திலே இயங்கிவரும் கற்குழாய்த் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்காக இந்த ஆண்டு தாங்கள் நிதியொதுக்கம் செய்து விரிவுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விருத்தாசலத்திலே பெண்கள், ஆண்கள் ஆகிய இருவருக்கும் அரசுக் கல்லூரி விடுதிகளை இந்த ஆண்டு அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியையொட்டி ஓடுகின்ற வெள்ளாற்றின் கரைகளிலே இருக்கின்ற கிரமங்கலம், காவனூர், பவனங்குடி ஆகிய கிராமங்கள் கரைகள் அரிப்பெடுத்து ஒவ்வொரு ஆண்டும் ஆற்றோடு போய்க்கொண்டிருக்கின்றன. எனவே, பொதுப்பணித் துறையின் மூலமாக அந்த மூன்று கிராமங்களிலேயுள்ள கரைப் பகுதிகளில் தடுப்புச் சுவர்களைக் கட்டித்தருமாறு கேட்டு, ஆளுநர் உரையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களை நான் சொல்ல விழைகின்றேன்.

தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியை மையமாகக் கொண்டு மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்பதோடு, இங்கே ஆளுகின்ற கட்சியோடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், மதச் சார்பின்மையை நிலைநாட்டவும், சமூக நல்லிணக்கத்தைப் பேணிக்காக்கவும் நாம் ஒன்றுபட்டு நிற்பது இன்றைய காலகட்டத்தில் சரியாகவே இருக்கும். அதற்கான பணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஈடுபட்டு, தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. அதற்காக உங்களோடு துணை நிற்போம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், மாநிலங்களின் மொழிகளை மையமாக வைத்து, அரசு அதற்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றை மைய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும் என்றும், சமூக நீதிககாக இடஒதுக்கீடு மற்றும் அதிக அதிகாரங்களை மாநிலங்களுக்கு வழங்குவது போன்ற பிரச்சினைகளை வலியுறுத்தியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறது. நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதேபோன்று பல்வேறு நலப்பணிகளை, தமிழ்நாடு மக்கள் எதிர்பார்க்கின்ற, ஏழை எளிய மக்கள் எதிர்பார்க்கின்ற நல்ல திட்டங்கள் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை வடிவமாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தூர் வாரும் பணி, தொழில் வளர்ச்சி, நகர்ப் பகுதியினுடைய மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரங்கள் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கிராமப்புறக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி, 300 பேர் மக்கள் வசிக்கின்ற கிராமங்களுக்குத் தொடக்கப் பள்ளி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள், எளிய மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற



பல்வேறு திட்டங்கள் என ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், ஆனால், அதேநேரத்தில் நமது ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில், குறிப்பாக தமிழ்நாட்டிலேயும் சரி, தமிழகத்திற்கு உணவு அளிக்கின்ற மாவட்டமாக இருக்கின்ற ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் சரி, தூர் வாரும் பணி மிகச் சிறப்பாக நடந்திருப்பது பாராட்டுக்குரியது. அதன் காரணமாக இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக்கூடிய வெள்ள பாதிப்பு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஓரளவிற்கு இயற்கைச் சீற்றங்களிலிருந்து விவசாயிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அந்தத் தூர் வாரும் பணி சாதகமாக அமைந்தது. இருந்தபோதிலும், விவசாயிகள் எதிர்பார்த்தபடி தங்களுடைய உற்பத்தியைப் பெருக்க முனைந்திருந்தார்கள் என்று சொன்னாலும், அந்த அளவிற்கு முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் எதிர்பார்த்தபடி, செலவினங்களை ஈடுசெய்து, விவசாயத்திலிருந்து இலாபம் ஈட்ட முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல ஆண்டு காலமாக விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கூட்டுறவுக் கடன்களைக் கடந்த மூன்றாண்டு காலமாக அரசாங்கமே ஒத்திவைத்துள்ளது. ஆனால் ஒத்திவைக்கப்பட்ட கடனை விவசாயிகளிடமிருந்து திரும்பப்பெற தற்போதைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றதாக நான் கருதவில்லை; இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடத்திலே ஜப்தி நடவடிக்கையிலே தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து காவல் துறை அதிகாரிகளோடு சென்று விவசாயிகளை அச்சுறுத்துகின்ற வகையில் கூட்டுறவு வசூலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜப்தி நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

இன்னொரு செய்தியை நான் பத்திரிகையிலே பார்த்தேன். வலங்கைமான் என்ற ஓர் ஊரில் ஒரு முஸ்லீம் பெண்ணிடத்தில் ஜப்தி நடவடிக்கை எடுப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அதிகாரிகள் சென்றதையொட்டி அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அதை மறுத்துச் செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில் நடந்திருக்கின்ற உண்மை என்ன என்பதை அரசு விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு, சமீபத்தில்...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, "ஜப்தி, ஆகவே ஒரு பெண் தற்கொலை, மாவட்ட ஆட்சித் தலைவர் மறுப்பு" என்ற அளவோடு விட்டுவிடக் கூடாது. அங்குள்ள ஜமாப்தார், இஸ்லாமியப் பெருமக்கள், பெரியவர்கள், அந்த ஊர் அதிகாரிகள், தலைவர்கள், அனைவருமே சேர்ந்து எழுதிக் கொடுத்தது, "இப்படி நடந்திருக்கிறது; இதற்கும் ஜப்திக்கும் சம்பந்தம் இல்லை. ஜப்தி செய்ய வந்தபொழுது பத்தாயிரம் ரூபாயைக் கட்டி விட்டார்கள். ஆகவே, எந்தப் பொருளையும் எடுக்காமலேயே அதிகாரிகள் சென்று விட்டார்கள்" என்பதுதான், கணவன்-மனைவிக்குள்ளே ஏற்பட்ட தகராறு என்று ஒரு வதந்தி. ஆனால், எல்லோரும்—ஜமாப்தார் எல்லாம் சேர்ந்து தெரிவித்திருப்பது — அந்த அம்மையாருக்குப் பல காலமாக நோய் இருந்தது; அவர்கள் இறந்து விட்டார்கள் என்றுதான் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசால் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் கேஸ், யூரியா ஆகியவற்றின் விலை இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அநேகமாக இது ஒரு கண்டனத்திற்கு உரிய சம்பவம். மத்திய அரசு இதுபோன்று, நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக இப்படி விலையை உயர்த்தி இப்போது ஏழை, எளிய மக்களுக்கு, அதுவும் ரேஷன் பொருள்களை வாங்கக்கூடிய மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசுக்கு 160 கோடி ரூபாய், அதாவது நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு நலத் திட்டங்களைச் செய்யக்கூடிய பணத்தை இதில் சரிக்கட்ட வேண்டிய அளவிற்கு 160 கோடி ரூபாயை நாம் ஈடுகட்ட வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று தொழில் துறையில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருப்பதாக மாண்புமிகு கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே இங்கே கூறியிருக்கிறார்கள். மோட்டார் வண்டி போன்ற கார் உற்பத்தி தமிழகத்திலே சிறந்த முறையிலே இப்போது தொடங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ஒன்று, நான் நம்முடைய முதலமைச்சருடைய



கவனத்திற்குக் கொண்டு வருவது, இந்த கார் உற்பத்தித் தொழிற்சாலைகளின் மூலமாகத் தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கிற தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு எதுவும் கிட்டியிருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தால் அநேகமாக இதிலே நேரடியாக பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பில் இடம் பெற முடியாத அளவுக்கு அந்த கார் தொழிற்சாலை அமைந்திருப்பதாகப் பல பத்திரிகைகளில் பல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையில், எந்தவொரு நன்மையுமில்லாத வகையில் தமிழ்நாட்டில் தங்களுடைய தொழில் வளத்தை மட்டும் பெருக்கக்கூடிய அளவுக்கு...

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஹூண்டாய் போன்ற பெரிய கார் தொழிற்சாலைகள் தமிழகத்திலே அமைக்கப்பட்டு — மிக முக்கியமான ஒருசில பொறுப்புகளுக்குத்தான் அவர்களுடைய நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிலே அங்கம் வகிக்கிறார்களே தவிர — பெரும்பாலான தொழிலாளர்கள், பொறியாளர்கள், உதவியாளர்கள் இவர்கள் அத்தனைபேரிடமும் இருந்து இங்கேயே நேர்காணலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அதில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், நேர்காணலுக்கு அழைப்பு வருகின்ற நேரத்திலே அதற்குப் பரிந்துரைக்கும்படி எங்களிடத்திலேயே பலர் வந்து வேண்டுகோள் வைக்கிறார்கள். நாங்களும் முடிந்த வரையிலே அதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 1-05*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது கூட 12,000-க்கு மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு அளிக்கமுடியும் என்றுதான் சொல்லியிருந்தார்கள். எங்களுடைய மாவட்டத்தில் நரிமணம் என்ற இடத்தில் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலையில் கூட, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த படித்தவர்களுக்கும் பொறியாளர்களுக்கும் வேலை கொடுக்கப்படவில்லை. நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு Security - அதாவது பாதுகாப்புப் பணிகளுக்காகத்தான் ஆட்கள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு அந்த வேலைவாய்ப்புதான்

வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நம்மால் காணமுடிகிறது. அதேபோலத்தான் இதுபோன்ற கார் தொழிற்சாலைகளிலும் நிலைமை இருக்கிறது. தமிழக அரசின் மூலமாக அந்தத் தொழிற்சாலைகள் பல்வேறு சலுகைகளைப் பெற்றும்கூட அங்கே நம்முடைய படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடக்கூடாது என்பதைத்தான் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரையில், இப்போது அவற்றை மூடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. நலிவுற்ற ஆலைகளைத் திறக்கக்கூடிய முயற்சிகளை மாநில அரசு மேற்கொண்டபோதும்கூட, மத்திய அரசு அதைக் கண்டுகொள்கிற நிலையில் இல்லை என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட போக்கு மாறவேண்டும். நேரடியாகப் பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டு, இப்போது அந்த ஆலைகளை மூடுகின்ற நிலை இருப்பதால் அதனால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களின் குடும்பங்களைப் பாதுகாக்கிற வகையில், அந்த ஆலைகளைத் திறப்பதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல முன்னேற்றம் காணமுடிகிறது. ஆனால் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கெனவே இருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, இப்போது அங்கே எல்லா மருந்துகளும் கிடைக்கக்கூடிய அளவில் இருக்கின்றன. ஆனால் மருத்துவர்கள் பற்றாக்குறை அங்கே இருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில், பகுதிநேர அடிப்படையில் காலையிலோ மாலையிலோதான் மருத்துவர்கள் வருகிறார்கள். நிரந்தரமாக அங்கே மருத்துவர்கள் இல்லை. ஆகவே, அந்த மருத்துவர்களையும் உடனடியாக நிரந்தர அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, குடும்ப அட்டைகள் வழங்குகின்ற நிலைமை. அத்தியாவசியப் பொருட்களை வாங்க குடும்ப அட்டைகள்தான் தேவைப்படுகின்றன. அதை வழங்குகிறபோது, அப்படி வழங்கப்படாமல் பல பேர் விடுபட்டிருக்கிறார்கள். பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் பல



மாவட்டங்களில் அச்சிடப்பட்ட கார்டுகள் எல்லாம் குப்பைத் தொட்டிகளில் கிடப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும், தமிழ்நாட்டில் புதிய குடும்ப அட்டைகள் வழங்குகின்ற பணி சரியாக நடைபெறவில்லை, இன்னும் பாக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பழைய அட்டைகள் என்ற வகையில், 1 கோடியே 49 லட்சம் அட்டைகள் இருந்தன. அவற்றில் போலி அட்டைகள் என கண்டுபிடிக்கப்பட்டவை 20 லட்சம் அட்டைகள். அவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 1 கோடியே 42 லட்சம் அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. இப்போது பலர் மீண்டும் எங்களுக்கு அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள். அது எப்படி என்று கணக்கெடுக்கும்போது, ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளை இருந்தால் அவருக்குத் தனி அட்டை வழங்கவேண்டுமென்று கேட்கிற நிலை இருப்பதால்தான் மீண்டும் மீண்டும் அட்டை வழங்குகிற பணி நடந்துகொண்டேயிருக்கிறது. இதுவரை உண்மையான அட்டைகள் முழுவதுமாக வழங்கப்பட்டுவிட்டன. ஏற்கெனவே போலி அட்டைகள் வைத்திருந்தவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்கள், சில காரணங்களைக் காட்டி எங்களுக்கு மீண்டும் அட்டைகள் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த உண்மைகளை ஆராய்ந்து பகுத்துப் பார்ப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. போலி அட்டைகள் வரக்கூடாது என்ற காரணத்தால் கொஞ்சம் அவகாசம் எடுத்து அதை நன்கு சரிபார்த்துத்தான் இனி புதிய அட்டைகள் வழங்கமுடியுமே தவிர, கேட்டவர்களுக்கெல்லாம் உடனடியாக அட்டை வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சிலருக்கு அட்டைகள் விடுபட்டன என்று சொல்லியிருக்கிறோம். பத்திரிகைச் செய்தியை மாத்திரம் சொல்லவில்லை. தொலைகாட்சியிலும் படம் எடுத்துப் போட்டதை நான் பார்த்த காரணத்தால்தான் நான் உங்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தேன். குடும்ப அட்டைகள் வழங்குவதைப் பொறுத்தவரையில், ஒரு நபராக இருந்தால் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதுபோல நிறையக் குடும்பங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் மனுச் செய்தும்கூட இப்போது மண்ணெண்ணெய் கூட வாங்கமுடியாத

நிலை இருக்கிறது. ஆகவே ஒரு நபராக இருக்கக்கூடியவர்களுக்கும் குடும்ப அட்டை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நபருக்கும் அட்டை வழங்கப்படுகிறது. அவருக்கும் ஒரு Unit என்று கணக்கிட்டு 12 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறது. எங்கே தரப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அனேகமாக எல்லா இடங்களிலும் முறைப்படி விண்ணப்பித்தும், எங்களுக்கு அரசாங்கம் உத்தரவு வழங்கினால்தான் நாங்கள் அட்டை கொடுக்கமுடியும் என்று அங்கே உள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள். நானே நேரடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னதைப்போல, 2 ரூபாய் அரிசியைப் பொறுத்தவரையில் பழுப்பு நிறமான அரிசி, மகா மோசமான நிலையில் இருக்கிறது. அதுதான் உண்மை.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அவர்கள்தான் சொன்னார்கள். எவ்வளவு ஈர நெல்லாக இருந்தாலும் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது, அதைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டதும் அவர்கள்தான். முதலமைச்சர் அவர்கள் அறிவுரைப்படி அதற்கும் ஊக்கத் தொகை கொடுத்து, அந்த நெல்லைக் கொள்முதல் செய்தோம். அந்த நெல்லை அரைக்கின்றபோது, கிட்டத்தட்ட 80 ஆயிரம் டன் கருப்பு அரிசியாக வந்தது. முதலமைச்சர் அவர்கள் அந்த அரிசியை பொது விநியோகத் திட்டத்திலே வழங்கக்கூடாது என்றும், தனியாக ஏலம் விட்டு விற்று விடுங்கள் என்றும் சொல்லிவிட்டார்கள்.

பொது விநியோகத்திற்கு ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டின் தொகுப்பிலே இருந்து தருவது 90 ஆயிரம் டன் அரிசி. மத்தியத் தொகுப்பிலே இருந்து நமக்கு வருவது ஒரு இலட்சத்து பத்தாயிரம் டன். மத்தியத் தொகுப்பிலே இருந்து மத்திய அரசு வழங்குகின்ற அரிசியானது பஞ்சாப் மாநிலத்தில் இருந்து ஈர நெல்லை வாங்கி 13 சதவீதம் கலந்து தரப்படுகின்ற அரிசியாகும். அதைக்கூட எடுத்து நாம் அது ஈர நெல்லாக, கறுப்பு அரிசியாக இருக்கிறதேயென்று,



வெளியிலேதான் விற்றுக் கொண்டிருக்கிறோமே தவிர, பொது விநியோகக் கடைகளில் விற்பதில்லை. நாம் தொடர்ந்து நல்ல அரிசியாக வழங்குகின்ற காரணத்தினால்தான் பொது விநியோகக் கடைகளிலே வழங்கும் ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் டன் அரிசியை, கடந்த நான்கு மாதங்களாகத் தொடர்ந்து இரண்டு இலட்சம் டன்களாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதிலேயும் புழுங்கலரிசியை வழங்குவதுபற்றிச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் நெல்லை மூன்று முறை அவிப்பதால்தான் அரிசியின் தரம் குறைகிறது என்று சொன்னார்கள். 100 கிலோ நெல் கொடுத்தால், 68 கிலோ அரிசி தரவேண்டுமென்பது இயல்பு. அதிலே, தமிழ்நாட்டிலே சென்னை மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களைத் தவிர, மற்ற மாவட்டங்கள் அனைத்திற்கும் தேவைப்படுவது புழுங்கலரிசிதான். அதனால்தான் அவித்து புழுங்கலரிசியாகத் தருகின்ற பணி இப்போது நடைபெற்று வருகிறது. இப்போது வழங்கப்படுகின்ற அரிசி நல்ல அரிசி. மாண்புமிகு முதலமைச்சரவர்களின் உத்தரவின்பேரில் தற்போது நல்ல அரிசிதான் வழங்கப்பட்டு வருகிறது.

**Thiru R. Chockkar:** I rise on a point of information.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விளக்கம் சொன்னபோது, பஞ்சாபிலிருந்து வாங்கக்கூடிய அரிசியில் கறுப்பு அரிசி 13 சதவீதம் கலந்துதான் கொடுக்கிறார்கள்; அதைக்கூட பொது விநியோகக் கடைகளிலே விற்பனை செய்வதில்லை. ஏலத்திலே விற்றுவிடுகிறோம் என்று தெரிவித்தார்கள். பஞ்சாபிலிருந்து மோசமான அரிசியைக் கொடுத்தால் தமிழக அரசு ஏன் வாங்குகிறது? பணம் கொடுத்துத்தானே நாம் வாங்குகின்றோம்? பணம் கொடுத்து வாங்குகின்றபோது, நல்ல அரிசியாகக் கொடுத்தால்தான் வாங்குவோம், மோசமான அரிசியாக இருந்தால் வாங்கமாட்டோம் என்று சொல்ல வேண்டியதுதானே? பணத்தைக் கொடுத்து வாங்கி, மக்களுக்கு விநியோகம் செய்யாமல், ஏலத்திலே விட்டு, நஷ்டத்தைச் சுமப்பது எந்த அளவில் நியாயமான நிர்வாகமாக இருக்கும்; திறமையான நிர்வாகமாக இருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு உறுப்பினர் பேசுவது எளிது. ஒவ்வொரு மாதமும் மத்தியத் தொகுப்பிலிருந்து ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் டன் அரிசி வாங்கி, மாநிலத் தொகுப்பிலிருந்து 90 ஆயிரம் டன் அரிசியை இணைத்துத்தான் இரண்டு இலட்சம் டன்னாக பொது விநியோகத்தில் வழங்கப்படுகிறது. வெளியிலே அரிசி கொள்முதல் செய்கிறபோது ரூ. 9.50 பைசாவுக்குக் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், மத்திய அரசு ரூ. 7.50 பைசாவுக்கு அரிசி தருகிறது. அந்த அரிசியைத் தேவையில்லை என்று சொல்வதற்கில்லை. அவர்களிடமிருந்து அரிசி வருகின்றபோது, அந்த அரிசியைப் பெற்றுக் கொண்டால்தான் உண்டு, மற்ற அரிசி தரமுடியாது என்று சொன்ன காரணத்தால், அதிலேயே நன்றாக இருக்கிற அரிசியை அதிகாரிகள் பார்த்து எடுத்துக் கொண்டு வருகிறார்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போலில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, உங்களுடைய உரையை முடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதிக நேரம் பேசிவிட்டீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்துவிடுகிறேன். தலைவரவர்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை. பேரவைத் துணைத் தலைவர்தான் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவு சுவாரஸ்யமாக நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அப்படியில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று, அதன் விளைவாக இங்கேயும் internet முறையைக் கொண்டுவர முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதன்மூலம் கணிப்பொறிகள் கொண்டுவரப்பட்டு, மாணவர்கள் சிறந்த முறையில் தொழில்நுட்பத்தோடு செயல்படக் கூடிய வாய்ப்பை உருவாக்கி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, சுயநிதிக் கல்லூரிகளைச் சேர்ந்த சங்கத்தினர் பல அறிக்கைகளை விட்டிருக்கிறார்கள். அதிலே நியாயமான கருத்துக்கள் இருப்பதை என்னால் காணமுடிகிறது. தமிழ்நாட்டிலே குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று படித்து வருகிறார்கள் என்கிற ஒரு நிலை



சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே படிப்பதற்கான மதிப்பெண்களைக் குறைத்து அவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம் என்ற நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். குறைந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு அந்த வாய்ப்பை இங்கே உருவாக்க முடியுமானால்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அதன் காரணமாக, தரமே (standard) போய்விடும். அதுமாத்திரமல்ல, அது, சாதாரண தொழில்துறைகூட அல்ல, அது Engineering துறை. கட்டிய வீடு ஏன் விழுந்தது என்றால், மார்க் குறைவாகப் போட்டார்கள், அதனால்தான் விழுந்தது என்று வரும், அதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இது சில பேர்களுடைய சுயநலத்திற்காகச் செய்யப்படுகின்ற பிரச்சாரம். அதை அரசு ஏற்பதாக இல்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளியிலேபோய் Doctor படிப்பு, Engineering படிப்பு படித்துவிட்டு, இங்கே குறைவான சம்பளத்திற்கு வருகிறார்கள். அவர்களும் தமிழ்நாட்டிலேதான் தொழில்புரிய விரும்பி, அவர்களுடைய தொழிலிலே ஈடுபடுகிறார்கள். அதனால் அப்படிப்பட்ட வாய்ப்பு இருந்தால், நீங்கள் செய்யலாம் என்றால், அரசு யோசிக்கலாமே என்பதற்காகத்தான் என்னுடைய கருத்தை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன்.

பிற்பகல் 1-15

விவசாயிகளைப் பொறுத்தவரையில், விவசாயத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக, கோலப்பன் குழுவினை இந்தக் கூட்டத் தொடரிலே கொண்டு வருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்; அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோருக்காக, சமீபத்திலே அமைச்சருடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, பல்வேறு துறைகளில் அதாவது கல்வி, வேலைவாய்ப்பு, பதவி உயர்வு போன்றவை பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய சிபாரிசுகள் என்ன ஆனது? அதை எப்படிச் செயல்படுத்தப் போகிறோம்? ஏனென்றால் இது ஓர் அரசியல் பிரச்சாரமாக இப்போது உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. ஏதோ

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பழங்குடியினருக்கு பதவி உயர்வு எல்லாத் துறைகளிலும் வழங்கப்படவில்லை, பழிவாங்கப்படுகிறார்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன, பதவி உயர்வு வழங்கப்படவில்லை, அதிலே சில அதிகாரிகள் இப்படிப்பட்ட நிலைக்கு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள், அதைப்போலவே பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இவர்களுடைய வேலைவாய்ப்பு, அதற்கான ஒதுக்கீடுகள், இவர்களுடைய தற்கால நிலவரம் என்ன என்ற இவற்றைப்பற்றிய சிபாரிசுகள் தொடர்பான—ஆதி திராவிடர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு குழு, அதைப்போலவே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு குழு, இந்த இரண்டு குழுக்களுடைய அறிக்கைகளும் வந்திருக்கின்றன. இந்த இரண்டு அறிக்கைகளையும் ஆய்ந்து ஒரு நல்ல முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக அமைச்சரவைக் கூட்டத்திலே அதைப்பற்றி விவாதித்து, ஒரு குழு, அமைச்சர்களும், அதிகாரிகளும் அடங்கிய குழு - ஏற்கெனவே இருந்த குழு, சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் இருந்த குழு, அந்தக் குழுவினுடைய அறிக்கை இப்போதுதான் வந்திருக்கிறது. எனவே, இரு தரப்பிலும் உள்ள இந்த நிலைகளைப் புரிந்துகொண்டு ஒரு நல்ல முடிவு எடுப்பதற்காக அமைச்சர்களையும், சில முக்கிய அதிகாரிகளையும், அந்தந்தத் துறையினுடைய செயலாளர்களையும் கொண்ட குழு - ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதனுடைய அறிக்கை தாக்கல் ஆகும். அநேகமாக, இந்தக் கூட்டத் தொடரிலேயே அதை வைப்பதற்கு வழி இருக்கும் என்று நம்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, உங்கள் உரையை ஒரே நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுமையும் நேரடி கொள்முதல் நிலையங்களிலே 98 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். விவசாயிகளுடைய பிரச்சினையில், அதை ஒரு தொழிலாகப் பார்க்காமல், இப்போது தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள், பல்வேறு கடன் தொல்லைகளிலிருந்து மீள முடியாத அளவுக்கு சோதனையிலே இருக்கிறார்கள். அந்தச் சோதனையிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும். ஏதோ கூட்டுறவுச் சங்கங்கள் நலிவுபெற வேண்டும் என்ற நோக்கத்திலே நான் இதைச் சொல்லவில்லை. கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தால்தான் விவசாயிகள் அவர்களுடைய தொழிலிலே ஈடுபட முடியும். அவர்கள் பெற்றிருக்கின்ற கடனை எப்படித் தள்ளுபடி செய்யப் போகின்றோம்? பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டு வந்தபோதுகூட, விவசாய நலனிலே அக்கறை கொண்டு, உடனடியாகக் கடனிலிருந்து அவர்கள் விடுபடுவதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும்; உங்கள்மீது மிகுந்த நம்பிக்கையோடு இருக்கின்றார்கள்.



அதைப்போல, 50 ரூபாயாக கொடுக்கக்கூடிய ஊக்கத் தொகையை 100 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு இதுவரையில், 665 ரூபாய் வழங்கப்படுகிறது. அதனை 1,000 ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகள் ஏதோ, தேவையில்லாமல் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்று கருதுவதைவிட, நீங்கள் விவசாயிகளுடைய நிலையைத் தெரிந்து கொள்வதற்கு, அவர்களுடைய பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு, அந்த விவசாயிகளுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, தமிழ்நாட்டிலே ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்து உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, பிரச்சினைகளுக்கு நீங்கள் தீர்வு காணவேண்டுமென்று கேட்டு கவர்னர் உரையை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டமன்றப் பேரவையின் 7-வது கூட்டத் தொடரிலே மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்து, மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் முன் மொழிந்து, மாண்புமிகு திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா வழிமொழிந்து, பின்னர் தொடங்கிய உரையை வரவேற்று எனது கருத்துகளை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுக் காலத்திலே, 4-வது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் சீரிய முறையிலே நல்லாட்சி நடத்தி வருகின்றார் என்பதை இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக வாழ்த்துகின்றேன், வரவேற்கின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் இதுபோன்ற நல்ல பல திட்டங்களையெல்லாம், கொண்டுவந்து ஏழையெளிய மக்களுக்காக வழி வகுத்துக் கொடுத்து, போக்குவரத்துத் துறையிலே சாதாரண மக்கள்கூட Mini Bus வசதிகளை அனுபவிக்கக்கூடிய திட்டத்தை தமிழகத்திலே அறிமுகப்படுத்தி சாதனை படைத்திருக்கக் கூடிய தமிழக முதல்வர் அவர்களை நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 1-20

அதேபோன்று, இன்றையதினம் ஹட்கோ, நபார்டு திட்டத்தின்கீழ் 360 கோடி ரூபாய் செலவில் 104 பாலங்களைக் கட்டும் பணிக்காக அடிக்கல் நாட்டி திறந்து வைத்திருக்கிறார்கள். அந்தத் துறையிலே, எனது தொகுதியில் இருக்கிற ஒரு பாலம் கட்டுகின்ற பணியைச் சேர்த்ததற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனது தேர்தல் வாக்குறுதிக்கு இணங்க, தமிழகத்திலே ஆங்காங்கு கூட்டுறவுத் தேர்தல்களும், உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களும் முறையாக நடத்தப்பெற்றதன் காரணமாகத்தான், அதன் பயனாகத்தான் இன்றையதினம் குக்கிராமங்கள்கூட சாலை வசதி உட்பட எல்லா வசதிகளையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதைப்போல சுகாதார வசதிகள், கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற, மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை அளிக்கத்தக்க நல்ல பல திட்டங்களை எல்லாம் இந்த அரசு செயலாற்றி வருகிறது என்பதை எண்ணி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்,

மேதகு ஆளுநர் அவர்களது உரையிலே நல்ல பல திட்டங்களை அறிவித்ததற்கேற்ப என்னுடைய தொகுதியில் உள்ள திருச்சி கூட்டுறவு நூற்பாலைக்கு - அது நலிவுற்று இருந்தது, அந்த நூற்பாலைக்கு - 2 கோடி ரூபாய் நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் உள்ள அத்தனை பள்ளிக்கூடங்களுக்கும் கணினி வழங்க இருக்கிறீர்கள். இது போன்ற



திட்டங்களை எல்லாம் இந்தத் தமிழக அரசு செய்து வருவதற்காக நாங்கள் நல்வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியில் 5-வது இடத்தில் இருந்த தமிழகத்தை இப்போது இரண்டாவது இடத்திற்குக் கொண்டுவந்து வைத்திருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசினுடைய திட்ட ஒதுக்கீடான 4,100 கோடி ரூபாய் முழுவதுமாக சென்ற ஆண்டு எய்தப்பட்டது. 1998-1999 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே 4,500 கோடி ரூபாயை எய்துவதற்கான வழிமுறைகளைக் கையாண்டு இருக்கிறார்கள். அதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ரேஷன் கார்டு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்னுடைய ரேஷன் கார்டிலேகூட, என்னுடைய போட்டோவுக்குப் பதிலாக அடுத்தவருடைய அதாவது இராமசாமியினுடைய போட்டோவை அச்சிட்டு என்னுடைய குடும்பத்தார் பெயர்களுடன் இணைக்கப்பட்டுவிட்டது குறித்து மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. அச்சுப் பிழைகள் ஏற்பட்டதன் காரணமாக அது நிகழ்ந்திருக்கிறது என்று கூறினார்கள். குறிப்பாக, அரவக்குறிச்சி தொகுதி, பள்ளப்பட்டியில் இதுபோன்ற நிலைமைகள் ஏராளமாக இருக்கின்றன. முன்பு சென்னையில் அச்சடிக்கப்பட்டது, பிறகு கோவைக்கு மாற்றப்பட்டு, சேலத்திற்கு மாற்றப்பட்டு அவசர அவசரமாக அச்சடித்ததால் தவறுகள் ஏற்பட்டன என எடுத்துச் சொன்னார்கள். அவ்வாறு எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, 31-1-1999 வரை பழைய கார்டுகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. தற்போது பழைய கார்டுகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால், எனது தொகுதியில் 25 சதவீதத்திற்கு கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கிற காரணத்தால், புதிய அட்டைகள் வழங்கும்வரை, பழைய கார்டுகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

அரசு ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. அதன் பயனாக பழைய கார்டுகளுக்கு உணவுப் பொருள் வழங்குவது நிறுத்தி

வைக்கப்பட்டுள்ளது, புதிய கார்டுகள் கொடுக்கப்படாதவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் பிப்ரவரி 28-ந்தேதி வரையாவது கால அவகாசம் நீட்டித்துக் கொடுத்து, உணவுப் பொருள் வழங்கினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நலமாக இருக்கும். புதிய கார்டுகள் வரும்வரை அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு என் தொகுதி மக்களின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அரவக்குறிச்சி தொகுதியில் உள்ள நிலங்கள் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தால் சென்ற முறை தங்களிடத்தில் கோரிக்கை வைத்தேன். அதைப் பின் தங்கிய பகுதியாக அறிவித்தீர்கள். இந்த முறை அதை மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே உங்களிடம் கேட்டிருக்கிறேன். எனது தொகுதியில் காவல் துறையில் காவலர் குடியிருப்பு, காவல் நிலையம், தீயணைப்பு நிலையம் அமைக்க இந்த நிதியாண்டிலே ஆவன செய்து முடிக்க நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறை சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு மேலாக இடம் வாங்கப்பட்டு, அந்த இடத்தில் பணிமனை அமைக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. மதிப்பீட்டுக் குழுகூட அந்த இடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்திருக்கிறது. மேற்படி இடம் காலியாக இருக்கின்ற காரணத்தால், ஆக்கிரமிப்பாளர்கள் அதைக் கையகப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, தயவு செய்து அந்த இடத்தில் பணிமனையை அமைத்துத் தரக்கூடிய. வகையில் இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுக்காவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு சார்பு நீதிமன்றம் தொடங்க இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே வாழ்கின்றனர். முருங்கைக்காய் ஏராளமாகப் பயிர் செய்கின்றனர். விளைந்த முருங்கைக்காய்களை அண்டை மாநிலங்களான பம்பாய், டில்லி, கல்கத்தா போன்ற இடங்களுக்கு எல்லாம் அனுப்பி வைக்கின்றனர். அங்கே முருங்கைக்காய் விளைச்சலை வைத்து Powder செய்யும்



தொழிற்சாலையை அல்லது Oil உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை நீங்கள் உருவாக்கிக் கொடுப்பீர்களேயானால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக, வசதியாக அமையும்.

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் முயற்சியால் Coimbatore Horticultural Research Station மூலமாக ஆய்வு செய்யப்பட்டு அதனுடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதைத் துரிதப்படுத்தி என்னுடைய தொகுதியில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாயும், சிட்கோ தொழிற்சாலை ஒன்றை அங்கே உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொழில் செய்ய முன்வருகின்றவர்களுக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதாகவும் தெரிகிறது. எனவே, III-Phase Industries தொடங்கக் கூடிய வகையில் E.B. III-Phase supply-ஐ உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சிறுபான்மைச் சமுதாய மக்களாக வாழக்கூடிய இஸ்லாமிய மக்களுக்கும் 10 சதவீத இட ஒதுக்கீட்டினை காவல் துறை மற்றும் இதர துறைகளிலே உள்ள வேலைவாய்ப்புகளில் வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, அதைச் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆரம்ப காலத்தில் இரண்டு பேருந்துகளை வழங்கிய நீங்கள், தொகுதி மேம்பாட்டிற்காக 25 இலட்சம் ரூபாய் வழங்கியதை 35 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தீர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கோடி ரூபாய் என்பதை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள் ஆகவே, அந்தத் தொகையை அதிகரித்து ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நிதியை வழங்க வேண்டுமாய் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக எனது மேலான கோரிக்கையை வைத்து, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து பேச வாய்ப்பளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, எனது உரையை நிறைவு செய்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-2-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1999 பிப்ரவரி 18

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. திரு. பி. ரோசையா, உரிமையியல் நீதிபதி (முதுநிலை ஆயம்), சென்னை தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தின் (கூடுதல் ஆயம்) கூடுதல் உறுப்பினராக திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி-1 அவர்கள் ஓய்வு பெற்றதையடுத்து அவருடைய பணி இடத்தில் நியமனம் செய்யப்பட்டது குறித்து வணிகவரிகள் துறையின் 16-6-1998-ஆம் நாளிட்ட (3 டி) 17-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 27-07-1998ஆம் நாளிட்ட 164ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

3. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள்துறையின் 14-09-1998-ஆம் நாளிட்ட 1274ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

4. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 4-5-1998ஆம் நாளிட்ட 138ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

5. சென்னை ஸ்பாஸ்டிக் சொசைட்டி ஆஃப் இந்தியா என்ற அமைப்பின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மீது 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் யாதொரு வணிகர்



1999 பிப்ரவரி 18]

செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 14-09-1998-ஆம் நாளிட்ட 270ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

6. 23-6-1971ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வருவாய்த் துறையின் 145/1971ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 16-6-1998ஆம் நாளிட்ட 181-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

7. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் திருவாளர்கள் டபிள் அப்ஃபோட்டோஸ்டேட் (மண்டலம் - V), லேசர் கிராஃபிக்ஸ் (மண்டலம் - XI), ஸ்ரீகங்கா (மண்டலம் - XI), மாணவர் நகலகம் (சென்னை தெற்கு) ஆகிய நிறுவனங்கள் 1989-90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் ஜெராக்ஸ் நகல்கள், லேசர் அச்சிடு நகல்கள் (Laser Printout copies) ஆகியவற்றின் விற்பனை மீது மேற்சொன்ன சட்டங்களின் கீழ் செலுத்தத்தக்க வரி, மேல்வரி கூடுதல் மேல்வரி, அபராதம் ஆகியவற்றை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் துறையின் 19-6-1998-ஆம் நாளிட்ட 226-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

8. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிச்சாலை விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 5-10-1998-ஆம் நாளிட்ட 202-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

9. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி - I)-ல் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 3-11-1998-ஆம் நாளிட்ட 265-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 4-2-1998-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட SRO B-27/98-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 3-11-1998-ஆம் நாளிட்ட 266-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

11. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 23-12-1997-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட SRO B-10/98-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 4-11-1998-ஆம் நாளிட்ட 270-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 26-5-1995-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட SRO B-107/95-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 4-11-1998-ஆம் நாளிட்ட 271-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்பு சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 11-9-1998-ஆம் நாளிட்ட 192-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].





14. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு காபிகாய் துளைப்பான் (தாக்குதலை கட்டுப்படுத்துதல்) விதிகளை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 2-12-1997-ஆம் நாளிட்ட 524-ஆம் எண் அரசாணை மற்றும் அத்துறையின் 19-5-1998-ஆம் நாளிட்ட கடித எண் 58988/H. II/95-20 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1914-ஆம் ஆண்டு கேடு விளைவிக்கும் புழு பூச்சிகள் அழித்தல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் II/1914) 5(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

15. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி - I)-ல் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த துறையின் 6-10-1998-ஆம் நாளிட்ட 242-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

16. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம் மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் 26-3-1991-ஆம் நாளிலிருந்து 26-8-1992-ஆம் நாள் வரையிலான கால அளவைப் பொறுத்த வரையில் மனிதரால் நெய்யப்படாத துணி விற்பனை குறித்து, வரி, மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் கூடுதல் வரி ஆகிய வகையில், சென்னை திருவாளர்கள் அக்ராபிஸ் (பி) நிறுவனம் மற்றும் சென்னை-17-ல் உள்ள திருவாளர்கள் லெதர் இன்டர் லைனிங் நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகையை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 29-6-1998-ஆம் நாளிட்ட 239-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

17. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது விவர அட்டவணைகளில் திருத்தங்கள்

செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 8-9-1998-ஆம் நாளிட்ட 262-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. சென்னையில் முன்பு நேரு விளையாட்டரங்கம் அமைந்திருந்த இடத்தில் நவீன விளையாட்டரங்கம் கட்டியது தொடர்பாக 1992-93-ஆம் ஆண்டில் சென்னை திருவாளர்கள் லார்சன் அண்டு டியூப்ரோ லிமிடெட் நிறுவனம் சென்னை கொள்முதல் செய்த கட்டுமானப் பொருள்கள் குறித்து 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் அவர்கள் செலுத்தத்தக்க வரி மற்றும் இக்கட்டுமானப் பணி ஒப்பந்தத்தை நிறைவேற்றிய துணை ஒப்பந்தக்காரர்கள் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் செலுத்தத்தக்க வரி ஆகியவற்றை பொறுத்தமட்டில் வரி விலக்களிப்பது குறித்து வணிக வரிகள துறையின் 16-9-1998-ஆம் நாளிட்ட 276-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

19. தேங்காய் பால்பவுடர் (Coconut Milk Powder) விற்பனை தொடர்பாக எந்தவொரு வணிகரும் 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரி தொடர்பாக விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 19-6-1998-ஆம் நாளிட்ட 183-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 28-8-1998-ஆம் நாளிட்ட 247-ஆம் எண் அரசாணையில்



வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

21. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 28-8-1998-ஆம் நாளிட்ட 248-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 21-12-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II(1)/வ.வ.அ.நி/144/94-ஆம் எண் அறிவிக்கையில் மாறுபாடு செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 23-4-1998-ஆம் நாளிட்ட 121-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. வணிகப் பெயரைக் கொண்டிராததும், ஆண்டொன்றுக்கு முதல் ரூபாய் 5 லட்சத்திற்கு மிகைப்படாத விற்பனை கொண்டதுமான ரொட்டி மற்றும் ரொட்டி தயாரிப்பு பொருட்களை உற்பத்தி செய்யும் எந்தவொரு வணிகரும் மேற்படி பொருட்களை விற்பனை செய்வதினால் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 15-5-1998-ஆம் நாளிட்ட 149-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. வர்த்தகப் பெயர் கொண்டிராத வெண்ணெய் விற்பனைக்கு, 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 23-06-1998-ஆம் நாளிட்ட 184-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1999 பிப்ரவரி 18

25. ஓரளவு எந்திரத்தைக் கொண்டும், ஓரளவு கையாலும் தயாரிக்கப்பட்ட மெழுகு தீக்குச்சிகளின் விற்பனை தொடர்பாக யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியிலிருந்து வரிவிலக்கு அளிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 25-6-1998 ஆம் நாளிட்ட 186 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

26. தமிழ்நாட்டில் சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரிகளுக்கு விற்பனை செய்யப்படும் பொருட்கள் குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 6-7-1998 ஆம் நாளிட்ட 199 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

27. திருச்சிராப்பள்ளியில் உள்ள நடுப்பட்டியைச் சேர்ந்த மணிகண்டம் ஊராட்சி கல்வி மற்றும் கிராம மேம்பாட்டுச் சங்கத்தினால் தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனை மீது 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அச்சங்கம் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 6-8-1998 ஆம் நாளிட்ட 226 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (திருத்தம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1998) 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் என்று நிர்ணயிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 8-9-1998 ஆம் நாளிட்ட 260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு



1999 பிப்ரவரி 18]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

30. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கையும், கணக்குகளும், [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

31. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை லிமிடெட்டின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. திருச்சிராப்பள்ளியில் உள்ள நடுப்பட்டியைச் சேர்ந்த மணிகண்டம் ஊராட்சிக் கல்வி மற்றும் கிராம மேம்பாட்டுச் சங்கம், அச்சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விற்பனை மீது 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி எதனையும் செலுத்த வேண்டாம் என்று ஆணையிடுவது குறித்து வணிக வரிகள் துறையின் 6-8-1998 ஆம் நாளிட்ட 226 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1994-95 ஆம் ஆண்டிற்கான மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

3. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1999).

4. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1999).

5. 1999 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் நகல்கள் (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு-I

(...76-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

Honourable Members of the Legislative Assembly,

I have great pleasure in addressing you at the commencement of the seventh session of the Eleventh Legislative Assembly. I extend my warm greetings to all of you. I hope that in 1999, Tamil Nadu will achieve further economic growth and improvement in the standard of living of its citizens.

2. At a time when the aspirations of the people are rising and the obligations of the State are becoming more onerous, increased resource transfer from the Central Government to the State has become imperative. The Eleventh Finance Commission, which was constituted last year, will be submitting its report before the end of the year 1999. Under the Tenth Finance Commission recommendations, States like Tamil Nadu, which are known for their prudent financial management, had received less financial assistance from the Central Government rather than being rewarded for prudence. We hope that the Eleventh Finance Commission will give due importance to this aspect and recommend larger resource transfers.

3. While upholding the country's unity, integrity, secularism and social harmony, this Government continues to strive for greater autonomy for the States, making the official languages of all States the official languages of the Union, and as a first step making Tamil as an official language of the Union and for a constitutional amendment to vest with the States the power to decide the policy of reservation for ensuring social justice. Though not much progress could be achieved on this, this Government will continue to press the Central Government for necessary legislative and executive action.

[1999 பிப்ரவரி 18

4. The Honourable Members are aware of the determined and sustained efforts made by this Government to effectively maintain law and order in this State. The steps taken in this direction have yielded results and this Government believes that with the wholehearted support of the people, the State would continue to enjoy peace and communal harmony.

5. There have been caste clashes for a long time in the history of Tamil Nadu. This Government has taken a number of measures to identify the underlying reasons for caste clashes and to find long-term solutions to reduce the occurrence of such incidents in future. All Party meetings were held on 22-10-1998 and 26-10-1998 to deliberate on ways to avert caste clashes. On the basis of the consensus that emerged from these meetings, policy decisions have been taken and the Government is taking further action. The Government has also instructed the District Administration not to grant permission for processions, rallies, meetings etc., which are likely to disturb communal and social harmony and incite violence. They have been asked to prevent printing/publishing/pasting of posters/wall-writings by caste/communal organisations which are likely to incite violence. 'Peace Committees' have been constituted at village level. These committees will be useful in resolving the differences at the grass-root level and will act as important institutions for conflict resolution in the years to come.

6. The rainfall this year in the State was quite satisfactory. However, a few districts had floods due to excess rainfall and had suffered flood damages. Loss of lives and property was minimised considerably due to timely action by Government agencies. The Government has sanctioned about Rs.33 crores for providing relief to the affected persons and for restoration of damaged roads, bunds, etc.

7. This Government is deeply concerned over the steep rise in the prices of essential commodities required by the people for day-to-day consumption. Price levels of essential commodities are determined by the general economic policies of the country as a whole and this problem of rising prices can be solved only by the Central Government. By increasing the supply in the market by release of essential commodities procured by the State agencies, it is possible to influence the prices to a limited extent only. Following the increase in prices of essential commodities in the last few



1999 பிப்ரவரி 18]

months, the Central Government had increased the price of rice, wheat, sugar, cooking gas and urea recently. In pursuance of its commitment and concern for the poor and the middle class, this Government has decided not to pass on the increase in the issue price of rice announced by the Central Government to the consumers, even though it would entail an additional expenditure of Rs.160 crores.

8. As announced in the last year's Governor's address, the task of issuing new family cards has been completed and 142 lakh families have received the new cards. Distribution of essential commodities under the new cards has also commenced. In order to build up adequate stock of rice to meet the requirement of the Public Distribution System, Government has introduced monopoly procurement in the Cauvery Delta Region for the current Samba season. The farmers in this region are being given an incentive of Rs. 50 per quintal over the minimum support price fixed by the Central Government.

9. This Government has continued to maintain its record of achieving the State Plan outlay. During 1997-98, the approved outlay of Rs. 4,010 crores was fully achieved. The approved outlay of Rs. 4,500 crores for the year 1998-99 is also expected to be achieved. The Government will endeavour to step up the Plan outlay substantially next year.

10. Improvement of the irrigation systems is essential for agricultural development necessary for enhancing the production of foodgrains essential for the State. Desilting of the irrigation channels in the Cauvery Delta and the tanks in various districts has enabled irrigation water to reach the tail-ends and has also effectively moderated the effect of heavy rains this year. The Government will make an increased allocation for desilting the irrigation channels next year. Thanks to widespread rains in the State in the last season and consequent increased availability of water for irrigation, it is expected that about 98 lakh tonnes of food grains will be harvested this year. With a view to increasing the agricultural output in the State and the agricultural income of dry-land farmers, the Government has decided to launch a programme of wasteland development next year to cover over 10,000 hectares. This Government will also launch a programme of accelerated horticulture development by providing necessary infrastructure like good roads, cold storage and grading facilities. These measures will

benefit the farmers and consumers by enhancing the production of vegetables and fruits.

11. The Government has decided to accord high priority for Information Technology due to its potential for accelerating the economic growth of the State, providing increased employment opportunities, and enhancing the efficiency of Government agencies and the quality of their service to the people. An Information Technology Task Force has been set up under the chairmanship of the Honourable Chief Minister to monitor the progress of this sector and render advice. Tamil Nadu is the first State to announce a new policy for the development of Information and Communication Technology. The Tamil Nadu Institute of Information Technology has been set up to provide high quality trained manpower to the industry. The State Government is also developing a world class Software Development Park at Taramani in Chennai at a cost of Rs. 320 crores.

12. In order to provide easy access to computers and Internet, a joint venture company will be set up with 'World Tel', an organisation based in England, and for the first time in India, 1,500 Community Internet Centres would be set up all over the State in the coming year, and a further 12,000 such Internet centres will be set up in the next three years. When all these centres become operational, they will create direct and indirect employment opportunities for about 1,50,000 persons throughout the State. It has been decided as a policy that the ultimate goal shall be to ensure that all students passing out of the schools will be computer literate. This goal will be achieved within the next five years. The international conference 'Tamil Net 99'was held in Chennai on February 7th and 8th to standardise the coding of Tamil scripts for computers and to standardise Tamil key boards and consensus decisions have been arrived at. Provision of standardised Tamil software will help to provide access to computers and Internet to persons who do not know English.

13. Development of industrial sector is vital for the economic growth of the State. The transparent and industry-friendly policies of the State have helped attract major investments to the State from well known multinational companies. It is a matter of pride and satisfaction that Tamil Nadu has moved up to the second position among the States in the country in terms



of investments attracted till October 1998 as compared to the fifth position it held in April, 1996. Investments amounting of Rs. 48,497 crores have been committed in the State during the last 32 months. This year, the automobile factories of Hyundai and Mitsubishi have commenced production. Ford Motor company's automobile factory will commence its production by October, 1999.

14. In its efforts to provide basic infrastructure for industrial development, this Government is undertaking formation of Industrial parks and satellite towns in different parts of the State, both through public sector agencies like SIPCOT and TACID as well as through joint venture efforts with private entrepreneurs. A Petrochemical industrial park at Ennore, a hi-tech industrial park at Nanguneri, an auto ancillary park near Singaperumalkoil and a floriculture infrastructure park at Hosur are being promoted by TIDCO in the joint-sector. These facilities are expected to give a fillip to the industrial growth in the State. The recent visit of the Honourable Chief Minister to Singapore and Malaysia has not only strengthened the cultural relations between us and these countries, but has also generated considerable interest among the entrepreneurs there for investment in infrastructure and industries in Tamil Nadu.

15. Increased power generation is essential for the development of industry, commerce and agriculture. Government has succeeded in attracting large private investments in the power sector in the State and the State has undertaken a number of power projects. This year, the first private sector power project with a capacity of 196 MW has been commissioned at Basin Bridge, Chennai. Construction works on projects with a capacity of nearly 2000 MW is due to commence within the next few months. First phase electricity generation from this will commence by the year 2000-2001. Finalisation and award of contracts for the 500 MW Integrated Lignite Mining cum Power Generation project at Jayamkondam and the 2000 MW LNG based power project at Ennore through international competitive bidding in a transparent manner has received international acclaim and has enhanced the reputation and the confidence in the Tamil Nadu Government among investors.

16. This Government is taking steps to improve the capacity of the Urban Local bodies for better delivery of basic services to the public. A comprehensive legislation to govern all urban local bodies in the State was enacted by this House in its last session. This Government is paying special attention to institutional improvement and human resources development in the local bodies. It has sought funds from the World Bank for a second Tamil Nadu Urban Development Project. This project is now in an advanced stage of finalisation and will provide a sizeable line of credit for urban infrastructure and institutional development in the urban sector.

17. Apart from being the State Capital, Chennai serves as a prominent commercial hub. In view of this, Government has been implementing various schemes for the development of Chennai Metropolitan Area. The work on the Second phase of Mass Rapid Transit System Project is progressing rapidly and when completed would help in easing the traffic problems of the city. Widening and strengthening of the major radial roads from Chennai will commence before the end of this year. Construction of 10 mini-flyovers at important traffic intersections in Chennai for reducing traffic congestion has already started and will be completed in the next 15 months. The work on the Flood Control and Drainage Project for the Metropolitan Area will commence soon in Coovum, Adayar, Buckingham canal and Otteri Nullah. Construction of the mofussil bus terminal at Koyambedu will commence within the next three months.

18. The Government accords special attention to rural development, poverty alleviation and the welfare of the poor. In pursuance of these objectives, this Government has devolved adequate powers and finances to the three tiers of Panchayat institutions. While continuing the devolution of powers to these institutions, the Committee which was constituted by the Government to recommend transfer of more powers to these institutions has submitted its report on 11th January 1999. The Government will take decisions on these recommendations soon.

19. In the 1997-98 budget, this Government launched two people centred programmes, viz., *"Namakku Naame Thittam"* and *"Anna Marumalarchi Thittam"*. So far, 424 Village Panchayats have been covered under *"Anna Marumalarchi Thittam"* and 55086 rural infrastructure works for



Rs. 357.79 crores have been taken up. The demand driven and participatory *"Namakku Naame Thittam"* has evinced good response from the people. In last two years, 9171 works for Rs. 42.39 crores were taken up under *"Namakku Naame Thittam"*.

20. As announced in the last Budget, schemes to provide adequate water to the 5,398 rural habitations getting less than 10 lpcd water have been taken up and are under implementation. 6,300 more rural habitations will be taken up for full coverage during 1999-2000. Hitherto, house-to-house water-supply connections were being provided only in the urban areas. This Government has taken a decision to extend this facility to the rural areas also. The Government has entered into a Memorandum of Understanding with HUDCO for a loan assistance of Rs. 500 crores over a period of five years for improving the water supply in the urban local bodies. The Government of Tamil Nadu is also availing of loan assistance from the Austrian Government to set up desalination plants at Chennai and Thoothukkudi.

21. A well laid out network of roads is a precondition for the rapid economic development of a State. Projects at a cost of Rs. 702 crores have been sanctioned by the National Bank for Agriculture and Rural Development from the Rural Infrastructure Development Fund. Out of 2661 works taken up till now, 1335 works have been completed. The construction work has commenced for 104 bridges, undertaken with loan assistance from HUDCO and NABARD at a cost of Rs. 360 crores. The World Bank assisted Road Sector Project will commence next year. Under this project, 750 KM length of roads will be improved.

22. For the first time in India, this Government is setting up Samathuvapurams for achieving the noble objective of creating a casteless society. Here, people of all Communities live together in peace, friendship and harmony sharing common facilities like drinking water, electricity, community hall, etc. Sixteen such Samathuvapurams have been established so far and 83 more are being set up. This scheme will continue to be implemented with renewed vigour.

23. The Government, besides earmarking higher outlays each year to promote all-round development of the Adi-Dravidars and the Scheduled

Tribes has also been formulating and implementing innovative schemes for them. As education holds the key for the development of any section of the Society, Government has taken effective steps to improve the quality of education provided in the Adi-Dravidar and Tribal Welfare schools.

24. With the same humanitarian policy under which the practice of hand pulled rickshaws had been abolished and replaced with cycle rickshaws, this Government has decided to introduce a Bill in this session for abolishing the demeaning practice of manual scavenging.

25. The Government is examining the report of Kolappan Committee on fixing of minimum wages for farm labourers. The decisions taken by the Government will be announced later in this session.

26. In addition to opening 300 new primary schools in the year 1998-99, primary schools have also been opened in Samathuvapuram villages. By the year 2000, all habitations with a population over 300 will have access to an easily accessible primary school within a distance of one kilometre. Steps to create infrastructure for these schools have also been accelerated. Government has also distributed free textbooks to all students of first to fifth standards with the object of achieving the goal of universal primary education. The Tamil Nadu Compulsory Primary Education Act has also been brought into effect from this academic year to ensure universal enrolment of children of school-going age. From this academic year, 15 percent reservation is being provided for rural students in all professional colleges. This will give opportunity to students from rural areas to get professional education and help them to progress in life.

27. The State Government is keen to achieve the goal of "Health for All" by 2000 AD. In the last three years, the Government has sanctioned construction of permanent buildings for 652 Primary Health Centres. With this, all Primary Health Centres in the State would function in permanent buildings. Further, this Government is committed to ensure that medical institutions and hospitals are adequately equipped and properly maintained to give better health care. Chennai Medical College, one of the oldest Medical Colleges in India, has been granted the status of a Deemed University. The new Medical College at Tiruchirappalli has started functioning now.



The new Medical College at Thoothukkudi will start functioning from the next academic year.

28. The House is aware of the various measures taken by the Government for the revival and development of the Handloom Industry. The 20% rebate on the sale of handloom fabrics was extended throughout the year. In order to liquidate accumulated stocks of the previous years, 30% rebate was granted in the current year upto October 1998. By availing this special rebate, the Primary Weavers Co-operative Societies and Co-optex were able to sell goods worth Rs. 202 crores. Besides this, considering the heavy accumulation of unsold lungis, the Government has granted 30% special rebate on these upto 31-3-1999.

29. The Tamil Nadu Women's Development Project is being implemented in 21 districts 2,80,556 rural women having membership in 14,374 self help groups are getting assistance under Mahalir Thittam as on first January 1999. Total savings from these groups are about Rs. 19 crores. This is a growing pool of funds from which the members are getting easy access to credit for urgent and other needs and they are also repaying the loans with interest. In the coming year, the remaining seven districts will also be brought under this project. Further, the Government has started a savings linked micro credit scheme for women in urban areas, as a pilot scheme to be implemented through urban co-operative banks. To begin with, this scheme has been launched in Chennai. It will be extended to other urban areas also.

30. This Government has taken appropriate decisions on the recommendations of the Justice Ramanujam Committee on procedural reforms and measures for providing honest, transparent and responsive administration and for preventing corruption in administration and is implementing them. This report and decisions of the Government on the recommendations will be placed in the Assembly in the current session.

31. Aware of the key role of Government employees, teachers, policemen and employees of local bodies in discharging its developmental and regulatory responsibilities, this Government has been sympathetic to their aspirations. Tamil Nadu was the first among the Southern States to extend the central pay scales to its employees and pensioners, that too with effect from

1-1-1996 despite severe financial stringency. Streamlining the recruitment procedures and recruitment on the basis of seniority of registration in employment exchanges have to a large extent eliminated complaints regarding recruitment to Government Service.

32. The sluggish economy coupled with rising Government expenditure has had an adverse impact on the resources of the State. Economy, efficiency and prudent financial management would continue to be the watchwords of the Government. Schemes that have outlived their utility will be weeded out and beneficial schemes and programmes will be further improved and implemented with emphasis on efficiency. The administrative machinery will be geared up to ensure time bound implementation of the plans and programmes of the Government.

33. I have placed before you the achievements of the Government, its policies and programmes. This Government is determined to accelerate the rate of growth of the State's economy, uphold democratic rights, protect and nurture the welfare of the society and to act as the guardian of the aspirations of the poor. I conclude my address with the hope that your deliberations in this House will help the Government in achieving its policy objectives.

Vanakkam.



## இணைப்பு - II

*(76 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

*மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,*

பதினோராவது சட்டப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1999 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிப்பதோடு தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்று நான் நம்புகிறேன்.

2. மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து, மாநில அரசின் பொறுப்புகள் மிகவும் கூடியுள்ள இந்தக் கால கட்டத்தில், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஆதாரங்களை மாநில அரசுக்கு மாற்றுவது அவசியமாகியுள்ளது. சென்ற ஆண்டு அமைக்கப்பட்டுள்ள பதினோராவது நிதிக்குழு, அதன் அறிக்கையை 1999 ஆம் ஆண்டு இறுதிக்குள் அளித்திட உள்ளது. விவேகமான நிதி நிர்வாகத்துக்கு பெயர் பெற்ற தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களின் நிர்வாகச் செயல் திறனைக் கருதி கூடுதல் நிதி அளிக்கப்படுவதற்குப் பதிலாக, பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை காரணமாக மத்திய அரசால் குறைந்த நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. பதினோராவது நிதிக்குழு இதற்கு உரிய முக்கியத்துவம் அளித்து, கூடுதல் நிதியாதாரங்களை நமக்கு அளிக்கப் பரிந்துரை செய்யும் என்று நம்புகிறோம்.

3. நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், மதச்சார்பின்மையையும் சமூக நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதோடு, மாநிலங்களுக்கு கூடுதலாக சுயாட்சி உரிமைகளைப் பெறுவதற்கும் அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளையும் மைய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவதற்கும், அதன் முதல் கட்டமாக தமிழ் மொழியை ஆக்குவதற்கும், சமூக நீதிக்கான இடஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரத்தை மாநிலங்களுக்கே அளிக்கும் வகையில்

அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இவற்றில் அதிக முன்னேற்றம் எய்திட இயலவில்லை என்றாலும் இதுகுறித்து சட்டரீதியாகவும் நிர்வாக அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

4. இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிக்க இந்த அரசு எடுத்த உறுதியான தொடர் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வகையில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனளித்துள்ளதுடன் மக்கள் முழுமனதுடன் நல்கிவரும் ஆதரவும் இம்மாநிலத்தில் தொடர்ந்து அமைதியும், மத நல்லிணக்கமும் பேணிக்காக்கப்படுவதை உறுதி செய்யும் என்று இந்த அரசு நம்புகிறது.

5. தமிழ்நாட்டின் வரலாற்றில் நீண்டகாலமாகவே சாதி மோதல்கள் இருந்து வந்துள்ளன. சாதி மோதல்களின் பின்னணியில் உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறுவதைக் குறைக்க நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதற்கும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க 22-10-1998 மற்றும் 26-10-1998 ஆகிய நாட்களில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உருவான ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கொள்கை முடிவெடுத்து அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மத நல்லிணக்கத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய, வன்முறையைத் தூண்டக் கூடிய ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் முதலியவற்றிற்கு அனுமதியளிக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகங்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது. சாதி, மத, வகுப்பு அமைப்புகள் வன்முறையைத் தூண்டக்கூடிய செய்திகளை அச்சிடுதல்/வெளியிடுதல்/சுவரொட்டிகள் ஒட்டுதல்/சுவர்களில் எழுதுதல் ஆகியவற்றைத் தடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது. கிராம அளவில் "அமைதிக் குழுக்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் அடிமட்ட அளவிலான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கும் பயனுள்ள பணியைச் செய்வதுடன், இனிவரும் ஆண்டுகளில் மோதல்களையும் பிணக்குகளையும் தீர்த்து வைக்கும் முக்கிய அமைப்புகளாகவும் செயல்படும்.

6. இந்த ஆண்டு நமது மாநிலத்தில் மழையளவு மனநிறைவளிப்பதாக இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் அதிக அளவு மழை



பெய்ததனால் வெள்ளமும், வெள்ளச் சேதங்களும் ஏற்பட்டன. அரசு அமைப்புகள் உரிய காலத்தில் எடுத்த நடவடிக்கையினால் உயிரிழப்பும் சொத்துக்கள் இழப்பும் பெரிதும் குறைக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும், சேதமடைந்த சாலைகள், கரைகள் முதலியவற்றைச் சீரமைக்கவும், அரசு சுமார் ரூ. 33 கோடி வழங்கியுள்ளது.

7. மக்களின் அன்றாடப் பயனுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்ந்து வருவது இந்த அரசுக்கு மிகவும் கவலையளிக்கிறது. இன்றியமையாப் பொருட்களின் விலை நாடு முழுவமக்குமான பொதுவான பொருளாதாரக் கொள்கைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. மத்திய அரசினால் மட்டுமே விலைவாசி உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும். மாநில அரசின் அமைப்புகள் இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து அதிக அளவில் சந்தையில் விற்பதன் மூலம், விலைவாசியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்த இயலும். கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து, அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு, யூரியா போன்றவற்றின் விலையை மத்திய அரசு அண்மையில் உயர்த்தியுள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் நலனில் அக்கறையும், பொறுப்பும் கொண்டுள்ள இந்த அரசு, மைய அரசு அறிவித்துள்ள அரிசி விலை உயர்வினால் கூடுதல் மானியமாக சுமார் ரூ. 160 கோடி அளவுக்கு இந்த அரசுக்கு சுமை அதிகரித்த போதிலும், இந்த விலை உயர்வை நுகர்வோர் மீது சுமத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

8. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி முடிக்கப்பட்டு 142 இலட்சம் குடும்பங்கள் புதிய குடும்ப அட்டைகளைப் பெற்றுள்ளன. புதிய அட்டைகளின் அடிப்படையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குவது தொடங்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையின் கீழ் போதிய அளவு அரிசி கையிருப்பு வைத்துக் கொள்வதற்காக காவிரி கழிமுகப்பகுதிகளில் நடப்பு சம்பா பருவத்தின் போது ஏகபோகக் கொள்முதல் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கும் மேல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

9. மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டினை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ. 4010 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ. 4500 கோடியும் எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டு அளவை கணிசமான அளவிற்கு அதிகரிக்கச் செய்ய இந்த அரசு முயற்சி செய்யும்.

10. மாநிலத்தின் முக்கிய தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்கிடுவதற்கான வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள பாசன சீரமைப்புக்காகக் காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள கால்வாய்களிலும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஏரிகளிலும் தூர் வாரியதால, பாசனத்திற்கான நீர் கடைக் கோடியிலுள்ள பகுதிகளுக்கும் சென்றடைய முடிந்தது. மேலும், இப்பணியினால் இந்த ஆண்டில் பெருமழையின் பாதிப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. பாசனக் கால்வாய்களைத் தூர்வாருவதற்கு அடுத்த ஆண்டில் அரசு கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்யும். கடந்த பருவத்தின் போது மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்ததாலும், பாசனத்திற்கு அதிக அளவு தண்ணீர் கிடைத்ததாலும் இந்த ஆண்டு சுமார் 98 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், புன்செய் நில விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் அடுத்த ஆண்டில் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. நல்ல சாலைகள், குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் போன்ற தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், தரம் பிரித்தல் வசதிகளையும் செய்து கொடுத்திட விரைவுபடுத்தப்பட்ட தோட்டக் கலைப்பயிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் இந்த அரசு தொடங்கும். இந்த நடவடிக்கைகள் காய்கறி, பழங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதால், விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைவர்.

11. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், அதிக வேலைவாய்ப்பளிப்பதற்கும், அரசு அமைப்புகள் பொதுமக்களுக்கு ஆற்றும் பணியின் திறனையும், தரத்தையும் மேம்படுத்துவதற்கும், தகவல் தொழில் நுட்பவியலில் உள்ள வளவாய்ப்பைக் கருத்திற்கொண்டு, அத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்துறையின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் அறிவுரைகள்



வழங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் தகவல் தொழில்நுட்பப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்பவியல் மேம்பாடு குறித்த தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் மேம்பாடு குறித்த புதிய கொள்கையை அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடாகும். தொழில் துறைக்கு அதிக தரம்வாய்ந்த பயிற்சி பெற்ற மனித ஆற்றலை வழங்கும் வகையில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை தரமணியில் ரூ. 320 கோடி செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா ஒன்றை மாநில அரசு உருவாக்கி வருகிறது.

12. கணினி மற்றும் இணைய (Internet) வசதியை அனைவரும் எளிதாகப் பெறும் வகையில், இங்கிலாந்து நாட்டின் “வேர்ல்டுடெல்” நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு நிறுவனம் அமைத்து இந்தியாவில் முதலாவதாக மாநிலம் முழுவதிலும் வருமாண்டில் 1,500 சமுதாய இணைய மையங்களும், அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் 12,000 இணைய மையங்களும் ஏற்படுத்தப்படும். இவை அனைத்தும் செயல்படும்போது நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் சுமார் 1,50,000 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த இலக்கு எய்தப்படும். கணினி மென்பொருளுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தமிழ் வரிவடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுத்துவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் “தமிழ் இணையம் 99” என்ற சர்வதேச கருத்தரங்க மாநாடு பிப்ரவரி 7, 8 தேதிகளில் சென்னையில் நடத்தப்பட்டு ஒருமித்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலமொழி அறியாதவர்களும் கணினியையும், இணைய வசதியையும் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும் வகையில் தரப்படுத்தப்பட்ட இத்தகைய கணினி தமிழ் மென்பொருள் பெரிதும் உதவும்.

13. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் துறையின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். இந்த அரசின் ஒளிவு மறைவற்ற, தொழில் நேயமிகுந்த கொள்கை காரணமாக புகழ்வாய்ந்த பல பன்னாட்டு நிறுவனங்கள், இம்மாநிலத்தில் பெருமளவில் முதலீடு செய்ய ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் தமிழ்நாடு நாட்டில் ஐந்தாம் இடத்தில் இருந்தது. 1998 அக்டோபர்

வரை ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகளின் அடிப்படையில், தமிழ்நாடு இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருப்பது பெருமிதத்தையும், மனநிறைவையும் அளிக்கக் கூடியதாகும். கடந்த 32 மாதங்களில் இம்மாநிலத்தில் ரூ. 48,497 கோடி அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 'ஹூண்டாய்', 'மிட்சுபிஷி' மோட்டார் வண்டி நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஃபோர்டு மோட்டார் வண்டி நிறுவனம், 1999 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கும்.

14. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் முயற்சியாக, இந்த அரசு 'சிப்காட்', 'டாசிட்' போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும், தனியார் துறை தொழில் முனைவோருடன் இணைந்து கூட்டுத்துறை மூலமாகவும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் உருவாக்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் எண்ணூரில் பெட்ரோலிய ரசாயன தொழிற் பூங்காவையும், நாங்குனேரியில் உயர் தொழில் நுட்பப் பூங்காவையும் சிங்கப்பெருமாள் கோயில் அருகே மோட்டார் வண்டி துணைப் பாகங்கள் பூங்காவையும், ஓசூரில் மலர்ச்செடி வகைகளை வளர்ப்பதற்கான அடிப்படை வசதி பூங்காவையும் கூட்டுத்துறையில் உருவாக்கி வருகிறது. இந்த வசதிகள் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கும். அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் மேற்கொண்ட பயணம், அந்நாடுகளுக்கும் நமக்கும் இடையே உள்ள கலாச்சாரத் தொடர்பை வலுப்படுத்தியது மாத்திரமல்லாமல், அந்நாடுகளில் உள்ள தொழில் முனைவோர்களிடையே தமிழ்நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் தொழில்கள் தொடங்குவதிலும் முதலீடு செய்வதற்குப் பெருமளவு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

15. தொழில், வாணிபம், வேளாண்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு அதிகப்படியான மின் உற்பத்தி செய்வது இன்றியமையாததாகிறது. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியில் பெருமளவு தனியார் முதலீட்டை ஈர்ப்பதில் இந்த அரசு வெற்றி கண்டுள்ளது. அதையொட்டி இந்த அரசு பல்வேறு மின் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 196 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட முதலாவது தனியார் மின் உற்பத்தித் திட்டம் சென்னையில் பேசின்பாலத்தில் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சுமார் 2000 மெகாவாட் திறன்



கொண்ட திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும். இதன் மூலம் முதல் கட்ட மின் உற்பத்தி 2000-2001 ஆம் ஆண்டில் தொடங்கும். ஜெயங்கொண்டத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி சுரங்க மின்உற்பத்தித் திட்டத்திற்கும், எண்ணூரில் திரவ இயற்கை வாயுவை அடிப்படையாகக் கொண்ட 2000 மெகாவாட் மின்உற்பத்தி திட்டத்திற்கும், பன்னாட்டளவிலான போட்டி ஏலத்தின் மூலம் வெளிப்படையான முறையில் ஒப்பந்தங்களை முடிவு செய்து வழங்கியிருப்பது உலக அளவில் பாராட்டைப் பெற்றிருப்பதோடு முதலீட்டாளர்களிடையே தமிழக அரசின் மீதான நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

16. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுச் சட்டம் இந்த அவையின் சென்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் முன்னேற்றத்திலும், மனிதவள மேம்பாட்டிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு இந்த அரசு உலக வங்கியை கோரியுள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் ஏற்பளிப்பிற்கான இறுதி நிலையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும் நகர்ப்பகுதி அமைப்புகளின் வளர்ச்சிக்கும் கணிசமான நிதியுதவி கிடைக்க இத்திட்டம் வகை செய்யும்.

17. மாநிலத்தின் தலைநகராகவும் முக்கிய வணிக மையமாகவும் திகழ்கிற சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. பெருநகர் விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடையும் போது மாநகரின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினை பெரிதும் குறையும். சென்னை மாநகரைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச் சாலைகளை அகலப்படுத்தி வலுவூட்டும் பணியும் விரைவில் தொடங்கப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னையில் முக்கியமான சந்திப்புகளில் பத்து சிறிய மேம்பாலங்கள் கட்டும்பணி தொடங்கப்பட்டு அடுத்த 15 மாதங்களுக்குள் முடிவு பெற இருக்கிறது. பெருநகர்ப்

[1999 பிப்ரவரி 18

பகுதிக்கான வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப்பணி, கூவம், அடையாறு, பக்கிங்காம் வாய்க்கால், ஓட்டேரி நல்லா உள்ளிட்ட பகுதிகளில் விரைவில் தொடங்கப்படும். கோயம்பேட்டில் வெளியூர் பேருந்து முனையத்தைக் கட்டும் பணி அடுத்த மூன்று மாதங்களில் துவங்கும்.

18. ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் ஏழைக் குடும்பங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களின்மீது அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்காக, இந்த அரசு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதியையும் அளித்துள்ளது. ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வைத் தொடர்ந்து அளித்து வரும் நிலையில், அவற்றுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவது பற்றி பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 11-1-1999 அன்று அளித்துள்ளது. இப்பரிந்துரைகளின்மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

19. 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு மக்கள் நலனை மையமாகக் கொண்ட இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அவை "நமக்கு நாமே" என்ற திட்டமும், "அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும்" ஆகும். இதுவரை 424 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு 55,086 ஊரக உள்கட்டமைப்புப் பணிகள் ரூ. 357.79 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தேவையால் உந்தப்பட்டு மக்கள் பங்குகொள்ளும் "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,171 பணிகள் ரூ. 42.39 கோடி செலவில் ''நமக்கு நாமே'' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, நாள் ஒன்றுக்கு 10 லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வசதி பெறும் 5398 ஊரகக் குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வசதி அளிக்கும் பணி நடப்பாண்டில் தொடங்கி நடைபெற்று வருகிறது. மேலும் 6300 குடியிருப்புகளுக்கு முழுமையாகக் குடிநீர் வசதிசெய்து கொடுக்கும்பணி 1999-2000 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை நகர்ப்பகுதிகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த குடிநீர் வீட்டிணைப்பு வசதியை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்



1999 பிப்ரவரி 18]

வழங்குவதை மேம்படுத்த, ஐந்தாண்டு கால அளவில் ரூ. 500 கோடி கடனுதவி பெறக்கூடிய வகையில் ஹட்கோ (HUDCO) நிறுவனத்துடன் உடன்பாட்டுக் குறிப்பில் (Memorandum of Understanding) அரசு கையொப்பமிட்டுள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் கடல்நீரைக் குடிநீராக்கும் அமைப்புகளை நிறுவ ஆஸ்திரிய அரசின் கடனுதவியை தமிழ்நாடு அரசு பெறவிருக்கிறது.

21. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சீரான சாலை வசதிகள் மிகவும் முக்கியமானவையாகும். நபார்டு (NABARD) வங்கியிடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் ரூ. 702 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட 2661 பணிகளில், 1335 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஹட்கோ (HUDCO), நபார்டு (NABARD) வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன், ரூ. 360 கோடி செலவில் 104 பாலங்களைக் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடனான தமிழ்நாடு சாலைப்பகுதித் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும்.

22. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தை எய்தும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த அரசு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. இந்த சமத்துவபுரங்களில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் நட்புறவுடனும் நல்லிணக்கத்துடனும், அமைதியாகவும், குடிநீர், மின்சாரம், சமுதாயக்கூடம் போன்ற பொது வசதிகளைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன, 83 சமத்துவபுரங்கள் உருவாகி வருகின்றன. இத்திட்டம் தொடர்ந்து முனைப்புடன் செயற்படுத்தப்படும்.

23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக அரசு ஒவ்வோராண்டும் அதிக நிதி ஒதுக்கி வருவதோடு, அவர்களுக்காக புதுமையான திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினரின் வளர்ச்சிக்கும் கல்வி மிக முக்கியமானதோர் திறவுகோல் என்பதால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக அரசு பயனுள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

24. மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை ரிக்‌ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்கிய அதே மனிதாபிமான கொள்கையுடன், மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும் சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்றுவதற்காக சட்ட முன்வடிவு ஒன்றினை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவர இந்த அரசு முடிவு செய்துள்ளது.

25. விவசாயிகளின் குறைந்த பட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

26. 1998-99 ஆம் ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியது மட்டுமல்லாமல், சமத்துவபுர கிராமங்களிலும் அப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டுக்குள் 300-க்கு அதிகமான மக்கள் தொகையுள்ள அனைத்து குக்கிராமங்களும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள், எளிதில் செல்லக்கூடிய வகையில் ஒரு தொடக்கப் பள்ளியைப் பெற்றுவிடும். அவற்றுக்கான கட்டமைப்புப் பணிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எட்டும் பொருட்டு முதல் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடநூல்களை இந்தக் அரசு வழங்கியுள்ளது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில் தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் இக்கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து ஊரகப் பகுதி மாணவர்களுக்கு 15 விழுக்காடு அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இது ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் தொழிற் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் உதவும்.

27. கி.பி. 2000 ஆண்டுக்குள் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இலக்கை எய்துவதில் மாநில அரசு அக்கறை கொண்டுள்ளது. கடந்த மூன்றாண்டு காலத்தில் 652 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்கச் சுகாதார நிலையங்களும் நிரந்தரமான கட்டடங்களில் இயங்கும். மேலும், சிறந்த மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ நிறுவனங்களும்



மருத்துவமனைகளும் போதிய சாதனங்களைப் பெறுவதோடு, அவை உரியவாறு பராமரிக்கப்படுவதையும் இந்த அரசு உறுதி செய்யும். இந்தியாவின் மிகப் பழமையான மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான சென்னை மருத்துவக் கல்லூரிக்கு நிகர் நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தூத்துக்குடியில் புதிய மருத்துவக் கல்லூரி வரும் கல்வி ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கும்.

28. கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிரளிக்கவும், மேம்படுத்தவும் இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்த அவை அறியும். கைத்தறித் துணி விற்பனைக்கான 20 சதவீதத் தள்ளுபடி ஆண்டு முழுவதும் கிடைக்க வகை செய்யப்பட்டது. பெருமளவு தேங்கியுள்ள முந்தைய ஆண்டுகளின் கைத்தறித் துணியின் தேக்கத்தைக் குறைப்பதற்காக நடப்பாண்டில் 1998 அக்டோபர் திங்கள் வரை 30 சதவீதத் தள்ளுபடி வழங்கப்பட்டது. இந்தச் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் ஆகியவை ரூ. 202 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்ய முடிந்தது. இதுதவிர, விற்பனையாகாமல் பெருமளவில் லுங்கிகள் தேங்கிவிட்டதைக் கருத்திற் கொண்டு, அவற்றிற்கு 30 சதவீத சிறப்புத் தள்ளுபடியை 31-3-1999 ஆம் நாள் வரை நீட்டித்து அரசு வழங்கியுள்ளது.

29. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று 2,80,556 கிராமப்புற பெண்கள், 14,374 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகி மகளிர் திட்டத்தின்கீழ் உதவி பெற்று வருகின்றனர். இவர்கள் குழுக்களாகச் செயல்பட்டு சேமித்துள்ள மொத்தத் தொகை சுமார் ரூ. 19 கோடியாகும். இது வளர்ந்து வரக்கூடிய ஒரு சுழல் நிதியாகும். இந்த நிதித்தொகுப்பிலிருந்து உறுப்பினர்கள் தங்கள் அவசரத் தேவைக்கும் ஏனைய கடன் தேவைகளுக்கும் எளிதில் கடன் பெறுவதுடன், பெற்ற கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தி வருகின்றனர். வரும் ஆண்டில் எஞ்சியுள்ள ஏழு மாவட்டங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். மேலும் நகர்ப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஒரு முன்னோடி திட்டமாக சேமிப்புடன் இணைந்த மகளிர்க்கான

[1999 பிப்ரவரி 18

சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்றை, இந்த அரசு முதற்கட்டமாக, சென்னையில் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பிற நகர்ப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.

30. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும், நடைமுறைச் சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள் குறித்த நீதிபதி திரு. இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு உரிய முடிவெடுத்து அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வறிக்கையும் அதன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளும் இக்கூட்டத் தொடரில் அவையில் வைக்கப்படும்.

31. அரசின் வளர்ச்சிப் பணிகளையும் ஒழுங்குமுறைப் பொறுப்புகளையும் ஆற்றுவதில், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள் ஆகியோரின் முக்கிய பங்கினை முற்றிலும் அறிந்துள்ள இந்த அரசு, இந்தப் பணியாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் பரிவுடன் செயல்பட்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், தமிழ்நாடு அரசு அதன் பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் மத்திய சம்பள வீதங்களை அளித்ததில், அதுவும் 1-1-1996 ஆம் நாளிலிருந்து முன்தேதியிட்டு அளித்ததன் மூலம் தென் மாநிலங்களிலேயே முதலிடம் வகிக்கிறது. பணி நியமன நடைமுறைகளைச் சீரமைத்ததன் வாயிலாகவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த மூப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டதன் மூலமும், அரசுப் பணிகளில் நியமனம் தொடர்பான புகார்கள் பெரும்பாலும் நீக்கப்பட்டுள்ளன.

32. பொருளாதாரத்தில் நிலவும் மந்த நிலையுடன், அதிகரித்து வருகின்ற அரசுச் செலவும் சேர்ந்து, மாநில அரசின் நிதி ஆதாரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சிக்கனம், செயல்திறன், மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம் ஆகியவை இந்த அரசின் கோட்பாடுகளாகத் தொடர்ந்து இருக்கும். பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள் கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப் பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அரசின் திட்டங்களும் திட்டப்பணிகளும் உரிய காலத்திற்குள் முடிவுறுவதை உறுதி செய்யும் வகையில் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்படும்.



1999 பிப்ரவரி 18]

33. இந்த அரசின் சாதனைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை உங்கள் முன் எடுத்துரைத்துள்ளேன். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும், சமுதாய நலன்களைப் பேணிக்காத்திடவும், நலிவுற்ற மக்களின் நம்பிக்கை அரணாகத் திகழவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருமைக்குரிய இந்த அவையில் உங்கள் விவாதமும் கருத்துப் பரிமாற்றங்களும் அரசு அதன் கொள்கை குறிக்கோளை எய்திட உதவும் என்ற எதிர்பார்ப்புடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

22160

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.